
# காலத்தின் பதிவுகள்




செபமாலை அன்புராசா

# காலத்தின் பதிவுகள்

செபமாலை அன்புராசா...

அமலமரித் தியாகிகள் வெளியீடு
யாழ்ப்பாணம்
2002

## பதிப்பு விபரம்

| | |
|---|---|
| தலைப்பு | : காலத்தின் பதிவுகள் |
| ஆக்கம் | : செபமாலை அன்புராசா |
| பதிப்பு | : 25 மார்கழி 2002 (முதற்பதிப்பு) |
| பதிப்புரிமை | : ஆசிரியர் |
| வெளியீடு | : அமலமரித் தியாகிகள் வெளியீடு |
| அச்சகம் | : யாழ்.புனித வளன் கத்தோலிக்க அச்சகம். |
| முகப்போவியம் | : றமணி |
| அட்டைப்படம் | : குரு பிறின்ரஸ் |
| விலை | : 50 ரூபா |

| | |
|---|---|
| Title | : Kalaththin Pathivukal |
| Author | : SEBAMALAI ANPURASA |
| First Published | : 25 December 2002 |
| Copyright | : Author |
| Publishers | : Oblates of Mary Immaculate |
| Cover Page Drawing | : RAMANI |
| Cover Page Printing | : Guru Printers |
| Price | : 50 Rupees |

# சமர்ப்பணம்

உடன்பிறவாச் சகோதரன் - என்

உற்ற நண்பன்

உண்மையை உரைத்து - அதற்காய்

உயிர் கொடுத்த

உண்மையாளன்

ஊடகவியலாளன்

**அமரர் மயில்வாகனம் நிமலராஜன்**

அவர்களுக்கு

இந்நூல்

சமர்ப்பணம்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆசியுரை | vi |
| அணிந்துரை | viii |
| வாழ்த்துரை | xi |
| உட்புகுமுன் ஒரு சில வார்த்தைகள் | xiii |


## (அ) சந்தித்தவை


| | | |
|---|---|---|
| 1. | நோயாளர் சந்திப்புக்களும் குணமடைதலும் | 01 |
| 2. | ஆத்மாவின் சத்தம்...... | 08 |
| 3. | யார் பொறுப்பு? | 13 |
| 4. | "தப்பிப் பிழைத்தான்" | 16 |
| 5. | ஐயோ..... இப்படி ஆயிற்றே!...... | 19 |
| 6. | எரிகின்ற சமூகத்தின் எரியும்....... | 22 |
| 7. | யாழ். போதனா வைத்தியசாலையில்...... | 27 |
| 8. | The Present Situation ........ | 32 |
| 9. | "ஆஸ்பத்திரியில் கண்காட்சியாம்" | 34 |
| 10. | நேர்காணல் | 38 |

## (ஆ) சிந்தித்தவை


| | | |
|---|---|---|
| 1. | வேதனை தரும் செயல் | 46 |
| 2. | நோயாளர் கொழும்பு செல்ல...... | 48 |
| 3. | ஒட்சிசன் இன்மையால் நிகழும்.... | 50 |
| 4. | புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம்.... | 51 |
| 5. | கொழும்பு செல்லும் நோயாளரின்.... | 53 |
| 6. | யாழ். ஆஸ்பத்திரியில் தொடரும்....... | 55 |
| 7. | மருத்துவ மாணவருக்கு | 56 |
| 8. | விபரீத விளையாட்டுப்......... | 58 |
| 9. | தவறுதலாக மண்ணெண்ணெய்...... | 59 |
| 10. | அவரச முடிவுகளால் ஏற்படும்....... | 62 |
| 11. | வீதி ஒழுங்கு முறைகளை........... | 65 |
| 12. | வேண்டாம் விளையாட்டு.......... | 67 |
| 13. | பரவிவரும் காய்ச்சலுக்கு .......... | 68 |
| 14. | கண்ணிவெடிகள் கவனம்........ | 70 |
| 15. | வலிந்து தாக்கும்............... | 72 |
| 16. | மருந்துகள் போதுமானதா? | 75 |
| 17. | குடாநாட்டு வைத்தியசாலையில் | 77 |
| 18. | சிறுவர் நலன் பேணுவோம்! | 81 |
| 19. | வீதி விபத்துக்களைத் தடுக்க...... | 83 |
| 20. | வெடிபொருள்கள் பற்றிய........ | 85 |

# ஆசியுரை

தென் அமெரிக்க சமூகவியலாளரான பவுலே பரேரே என்பவரது கூற்றின்படி ஓர் அடிமைச் சமூகம் சுதந்திரம் பெற வேண்டுமென்றால் அடிமைப்படுத்துபவரும், அடிமைப்படுத்தப் படுபவரும் அறியாமை என்னும் இருளில் இருந்து விடுபட வேண்டும். விழிப்புணர்வு சுதந்திரத்தின் முதற்படி. இவ்வாறு நோக்குமிடத்து எமது தமிழீழ சமூகம் சுதந்திரப்பாதையில் முன்னேற தனது அறியாமையின் கட்டுக்களில் இருந்து விடுபட வேண்டியது மிகமிக அவசியமானதாகும்.

அருள்பணி. செபமாலை அன்புராசா அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின், கடந்த நான்கரை வருடகாலப் பணி வரலாற்றில் ஒரு சமூக நோக்குடன் தனது பணியை விரிவாக்கம் செய்தவர். சமூகத்தைக் கவ்விக் கொண்டிருந்த ஊழல்கள், பொறுப்பற்ற செயற்பாடுகள், குறிப்பாக ஏழையரைப் பாதித்த சமூக இருளகற்ற தமது எழுத்தாற்றலைப் பயன்படுத்தியுள்ளார். உதயன், பாதுகாவலன், நான் சஞ்சிகை போன்ற ஏடுகளில் வெளியான தமது ஆக்கங்களை ஆவனப்படுத்தும் நோக்கோடு "காலத்தின் பதிவுகள்" என்னும் நூலை வெளியிட முன்வந்துள்ளார். இவரது முயற்சியை உளமாரப் பாராட்டுகின்றேன்.

எந்தவொரு பணியைச் செய்பவரும், வெறுமனே கடமைக்காக அதனை புரியாது பணிக்களத்தின் கண் துன்புறும் ஏழையரை ஆழ்ந்து அன்பு செய்து, பணிக்களத்தில் நிலவும் சமூகத் தீமைகளை உற்று நோக்கி அவற்றைக் களைவதற்கு தனது உடல், உள, ஆன்மீக பலத்தைப் பயன்படுத்தும் பொழுதுதான் பணி மக்களை தொடுகின்றது.

ஏழையர்களின் வாழ்வில் ஒளி ஏற்றப்படுகின்றது. இந்த உயர்ந்த நோக்கில் அருள்பணி. அன்புராசா அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையினதும், யாழ். சிறைச்சாலையினதும் ஆன்மகுரு என்ற தமது பணியை , தூர நோக்கோடும், ஆர்வத்தோடும் புரிந்துள்ளார்.

அவருடைய சேவையோடு எழுந்த சிந்தனைகள் காலத்தின் பதிவுகளாக எமக்குக்கிடைப்பது அவரது பணியின் நிறைவில் கனியும் ஓர் இனிதான கொடை எனக் கருதுகிறேன். இவரது பணிவாழ்வு தொடரவும், ஆற்றல்கள் வளம்பெறவும், மேலும் ஏழையர்கள் இவரது வாழ்வால் நன்மை பெறவும், அமல மரித்தியாகிகள் சபையின் நிறுவுநர் புனித யூஜின் டி மசனெட் அவர்களது பரிந்துரையை நாடி இறை ஆசீர் கூறி நிற்கின்றோம்.

அருள்பணி. அ. ஜீவேந்திரா போல். அ. ம. தி
அமலமரித்தியாகிகள் முதல்வர்
யாழ் - மாகாணம்

# அணிந்துரை

வணக்கத்திற்குரிய பிதா. செ. அன்புராசா அவர்களின் "காலத்தின் பதிவுகள்" என்னும் கடந்தகால அனுபவங்களின் தொகுப்பிற்கு அணிந்துரை வழங்குவதில் யான் பெருமைப் படுகின்றேன். ஏனெனில் நடந்து வந்த பாதையை வெகுவிரைவில் மறந்து விடும்பழக்கம் கொண்டவர்கள் நாங்கள். எனவே இந் நூல் அக்காலத்தைப் பதிவு செய்யும் மிகவும் முக்கியமான பணியைச் செய்கிறது.

இந் நூலை வெளியிடவிருக்கும் வணக்கத்திற்குரிய பிதா. செ. அன்புராசா அவர்களை நீண்டகாலமாக நன்கறிவேன். பெயருக்கேற்ப மக்களின் அன்பிற்குரியவராக விளங்கும் இவர் தனக்குரிய ஆன்மீகப் பணியை மக்களின் அவலங்களைத் தீர்ப்பதனூடக நிறைவேற்றி, தொண்டு என்பதின் அர்த்தத்தை முழுமையாக உணரும் வகையில் ஒரு வழிகாட்டியாக செயற்பட்டது இந்நூலில் காணப்படும் பல வகையான கட்டுரைகளில் பிரதிபலிக்கின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் வேளாங்கண்ணிச் சிற்றாலய ஆன்மகுருவாக நியமிக்கப்பட்டபின்பு, வெறுமனே தனது ஆன்மீகப் பணியுடன் மட்டும் நின்றுவிடாமல், அதற்கப்பாலும் மனித நேயப் பணிகளில் ஈடுபட்டு, தனது சேவையை விஸ்தரித்தார்.

இவர் யாழ்.போதனா வைத்தியசாலைத் தேவாலயத் திற்குப் பணியேற்ற காலம் மிகவும் நெருக்கடி நிறைந்த யுத்த காலம். எங்கும் மரண ஓலங்களும், அவஸ்தைகளும், பயப் பீதியும், மனிதவாழ்வு நிச்சயப்படுத்தப் படமுடியாததுமான காலம். அது நோயாளர் களின் வேதனைகளை ஆற்றுவதிலும்

சமய வழிபாடுகள், சமய வழிபாட்டுக்கிரிகைகளை நடத்துவதிலும் நின்று விடாமல், அவர்களின் துயரங்களில் கலந்து அதைத் தீர்ப்பதற்கான வழிகளைத் தேடினார்.

இக்காலத்தில் வைத்தியசாலையைப் பொறுத்தவரை பற்றாக் குறையும், அவ்வரசின் பராமுகமும் இணைந்த காலம். இவ்வேளை, பிதா அவர்கள் தான் சார்ந்து வாழும் மக்களின் இன்னல்கள், துயரங்களுக்குத் தன்னாலான பணியைச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தால் அம்மக்களுக்கு உடனடி உதவிகளைச் செய்த அதேவேளை, மக்கள் படும் அவலங்களுக்கு குரல்கொடுப்பவராக, தீர்வுகாண்பவராக, சமூகமட்டத்தில் அவற்றைப்பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி உதவிபெற்றுக் கொடுப்பவராகத் திகழ்ந்தார். இவ்வாறான உன்னதமான செயற்பாடுகளை இந்நூல் பதிவுசெய்கிறது.

வைத்தியசாலையின் பற்றாக்குறை, அரசின் பராமுகம் என்பவற்றைக் கண்டித்து பத்திரிகை மூலம் துணிச்சலாக கருத்துக்களை வெளியிட்டார். இதன் மூலம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு பொறுப்பான அதிகாரிகளை நடவடிக்கை எடுக்கவைத்தார். இவற்றை விட உளவியல் சஞ்சிகை மூலம் மக்கள் படும் மன அவஸ்தைகளை வெளியிட்டார். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வெற்றியும் கண்டார். இவரது வெற்றிக்கு அவர் சார்ந்துநின்ற ஆன்மீக அத்திவாரம் கைகொடுத்து உதவியது கண்கூடு. இதை அவர் பத்திரிகைகளிலேயே குறிப்பிட்டுள்ளார்.

ஆன்மீகத்துடன் சமூகத் தொண்டுகளில் நாட்டம் கொண்ட இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவிலும் ஓர் அங்கத்தவராகக் கடமையாற்றினார். சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இவர் காட்டும் அக்கறை போற்றத்தக்கது. துஷ்பிரயோகத்திற்குள்ளான

சிறுவர்களைப் பராமரிப்பதிலும், அவர்களுக்கு ஆதரவளிப்பதிலும், அவர்களுக்கான பாடசாலை அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதிலும், அவர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்காக தங்கும் வசதிகளை ஒழுங்கு செய்வதிலும் இவருக்குள்ள பங்கு அளப்பரியது. அத்துடன் தற்போதைய சூழலில் பெருகிவரும் வேண்டாத கருத்தரிப்பு, கட்டிளமைப்பருவத்துக் கர்ப்பம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு, குழந்தையைப் பெற்றெடுக்கும் வரையிலான இடவசதி, தேவைகள் என்பவற்றையும் தேடிக் கொடுப்பதிலும் பெரும் பங்கு வகிக்கின்றார். வேறு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகிடைக்காத இந்நேரத்தில் இவ்வாறு பாதிக்கப் பட்டவர்களைப் பேணிக்காப்பது எத்தகைய பெரும் பொறுப்பு என்பது யாவர்க்கும் விளங்கும். இவ்வாறான தொண்டு செய்யக்கூடிய எவரும் அக்காலத்தில் இருக்கவில்லை. இத்தகைய சமூக நலன் பேணும் வணக்கத்துக்குரிய பிதா அவர்களது சேவை மிகவும் தூர நோக்கானது என்பது அவரது இந்நூலின் மூலம் தெட்டத்தெளிவாகத் தெரிகிறது.

அவரின் சேவையின் ஆரம்பத்திலிருந்தே கரிசனையும், அக்கறையும், சமூக மனப்பான்மையும் வெளிவரத் தொடங்கிவிட்டன. அவரது பணி தொடர, வளர, சிறக்க எனது நல்வாழ்த்துக் களைத் தெரிவிப்பதுடன், சமயம் சார் பெரியோர்கள், சமூகத்தொண்டர்கள் அனைவருக்கும் இவரது அர்ப்பணிப்பும், அணுகுமுறையும் ஒரு முன்னுதாரணமாக விளங்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

பேராசிரியர். தயா. சோமசுந்தரம்
B.A., M.B.B.S. , M.D., M.R.C. Psych
உள, மருத்துவ வைத்திய நிபுணர், வடபிராந்தியம்
உள மருத்துவப் பிரிவு, யாழ். போதனா வைத்திய சாலை.

20.12.2002

# வாழ்த்துரை

## உதயனின் செய்தி

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் அமைந்திருக்கின்ற புனித வேளாங்கண்ணி ஆலயத்தின் ஆன்மகுரு செ. அன்புராசா உதயனுக்கு மிகவும் நெருக்கமானவர்.

வேளாங்கண்ணி சிற்றாலயத்தின் ஆன்மகுரு என்றவகையில் தனது களப்பணியை - கன்னிப்பணியை - முடித்துக்கொண்டு அவர் பிறிதொரு பிரதேசத்துக்குச் செல்கிறார். இந்த வேளையில் "காலத்தின் பதிவுகள்" என்று பெயர்இட்டு தனது எழுத்துருவாக்கங்களை ஒரு சிறுதொகுப்பாகப் பதிவுசெய்திருக்கின்றார்.

சகோதரர் அன்புராஜ்ஜின் "காலத்தின் பதிவுகள்" சுட்டிநிற்கின்ற காலம் கடுமையானது, கொடுமையானது, மறக்கமுடியாதது.

குடாநாட்டின் இருள்சூழ்ந்த காலப்பகுதி என்று வர்ணிக்கத்தக்க 1998, 1999, 2000 ஆண்டுக் காலப்பகுதியில் மனித அவலங்களை இரத்தமும் சதையுமாக காணக்கிடைத்த ஒரு மையமாக விளங்கிய யாழ். போதனா மருத்துவமனைக்குள் இருந்தவாறு தான் கண்ட - அனுபவித்த - நெஞ்சை நெருடிய - நிகழ்வுகளை - அவற்றின் மறுபக்கங்களை - கட்டுரைகளாக, கடிதங்களாக பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர் அன்புராஜ்.

பேச்சு, எழுத்துச் சுதந்திரம் மறுதலிக்கப்பட்ட ஒரு பயங்கரமான சூழலில் அவரது எழுத்துருவாக்கங்கள் குடாநாட்டுமக்களின் மௌனத்தை மொழி பெயர்ப்பனவாக அமைந்தன.

தான் வரித்துக்கொண்ட மதம் சார்ந்த பணிகளுக்கு அப்பால் மானுட அவலங்களால் ஈர்க்கப்பட்டு, மதம் கடந்து சேவை புரிந்தவகையில் ஆன்ம குரு அன்புராஜ் ஏனையோரில் இருந்து வேறுபட்டு நிற்கிறார்.

பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்களுடன் அவர் கொண்டிருந்த இடையறாத - சிநேகபூர்வமான உறவையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

அவரது சேவை தொடர்ந்தும் 'இதே பாணி'யில் பயன்மிக்கதாகத் தொடரட்டும் என்று 'உதயன்' குடும்பம் அவரை வாழ்த்தி நிற்கின்றது.

அன்புரிமையுடன்.......
கா. குமாரதாசன்
செய்திஆசிரியர்
('உதயன்' ஆசிரிய பீடம் சார்பாக)

# உட்புகு முன் ஒரு சில வார்த்தைகள்

"எண்ணமோ பெரிது காரியமோ சிறிது. எல்லாவற்றிலும் சப்தமும், சலசலப்பும், ஆர்ப்பாட்டமும் மிக்க காலமிது. நாம் அமைதியாகவே எம் பணிகளைச் செய்ய விரும்புகிறோம்." என்ற பாரதியின் வார்த்தைகள் என் உள்ளத்தைக் கவர்ந்தது. *வேலைத்திட்டங்கள், சமூகநல சேவைகள், தொண்டுகள் விளம்பரப்பொருளாக மாறிவரும் இக்காலத்தில்* இவ்வறிஞனின் எளிமையான வாழ்க்கைப் பாடம் என்னை வெகுவாகக் கவர்ந்ததில் வியப்பில்லை. அவ்வாறே நமது பணியும் கடந்த நான்கரை ஆண்டுகளாக அமைந்திருந்தது.

யாழ். போதனா வைத்தியசாலையின் வேளாங்கண்ணிச் சிற்றாலய ஆன்மகுருவாக 1998ஆம் ஆண்டு ஆனி முதல் 2002 ஆம் ஆண்டு மார்கழி வரை பணியாற்றும் பாக்கியம் பெற்றேன். பணிக்களத்தில் என் முதல் அனுபவம் இது. இக்காலப்பகுதியின் பெரும் பகுதி ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகள், படையெடுப்புக்கள், செல்லடிகள், இடப்பெயர்வுகள், மரண ஓலங்கள் என்று ஒரு மனிதன் அனுபவிக்க விரும்பாத இன்னொரு வகையில் முடியாத அவலப்பக்கத்தை மட்டுமே பார்க்கக்கூடியதாக இருந்தது.

பயமும், சஞ்சலப்பும், அங்கலாய்ப்பும், சாவும், நோவும், வேதனையும் நிறைந்த காலமது. யாருக்கு யார் உதவுவது? யாரை யார் பார்ப்பது? நடக்கும் நிலைமைகளை எங்கே எடுத்துச் சொல்வது? எழுகின்ற சிக்கல்களை எவ்வாறு தீர்ப்பது? என்று திசை தெரியாத நிலைகுலைந்த நேரத்தில் கையில் அகப்பட்ட பேனாவையும், 'பேப்பரை'யும் கொண்டு நாம் அனுபவித்த ஆக்கினைகளில் ஒருசிலவற்றையாவது வெளிக்கொணரும் நோக்கத்தோடு எழுத எண்ணினேன்.

யாழ். குடாநாட்டில் ஒரே நேரத்தில் 4, 5, பத்திரிகைகள் இருந்த காலம் மாறி அப்போது இருந்த ஒரே ஒரு நாளிதழ் "உதயன்" மாத்திரமே. அப்பத்திரிகையும் சுமார் ஒன்றரை மாதங்களாக தடைப்பட்டது என்பதைவிடத் தாக்கப்பட்டு தடைசெய்யப்பட்டது எனலாம். ஒருவகையில் பேச்சுரிமையும்,

எழுத்துரிமையும், முடக்கப்பட்ட காலம். இந்நேரத்தில்தான் ஊடகவியலாளன் நிமலராஜன் படுகொலைசெய்யப்பட்டான். இவை போதும் அக்காலப்பகுதியின் 'ரென்சனை' விளங்கிக்கொள்வதற்கு.

இப்பின்புலத்தில்தான் எழுதினேன். யாரையும் தாக்கும் எண்ணத்தோடு அல்ல, எவரையும் வீழ்த்தும் எண்ணத்தோடு அல்ல, எதனையும் தகர்க்கும் எண்ணத்தோடும் அல்ல. மாறாக, *என் கண் முன்னே துன்புற்று மடிந்த மக்களின் துயரம் தீரவேண்டுமென்று.* இவ்வரிசையில் எழுதப்பட்ட விடயங்களை "உதயன்" தாங்கி வந்திருக்கிறது. எனினும் சில உறைப்பாக எழுதப்பட்ட விடயங்களின் மட்டில் மௌனம் காத்தது என்மேற் கொண்ட அக்கறையினாலோ என்னவோ என எண்ணத் தோன்றுகிறது. உதயன் பத்திரிகையோடு பாதுகாவலன், தெளிவு, யாழ்த்தொனி போன்ற மாதாந்தப் பத்திரிகைகளுக்கும், "நான்" உளவியல் சஞ்சிகைக்கும் என் நன்றி உரித்தாகட்டும். இவற்றில் வெளிவந்தவைகளே காலத்தின் பதிவுகளாக வெளிவருகின்றன.

*நாம் நடந்து வந்த "விடுதலைப் பயணத்தின்" வேதனைகளை மீட்டிப் பார்ப்பதற்கு இவ்வகையான அனுபவங்கள் தொகுக்கப்படுவது காலத்தின் அவசியம்* எனப் பலரும் ஆலோசனை கூறினார்கள். அவர்கள் விருப்பத்தின் வெளிப்பாடுதான் *"காலத்தின் பதிவுகள்"*. அவ்வகையில் இதற்கு ஆசி வழங்கிய அமலமரித்தியாகிகளின் யாழ். மாகாண முதல்வர் அருள்பணி. அ. ஜீவேந்திரா போல். அ.ம.தி. அவர்களுக்கும், அணிந்துரை செய்த என்அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய பேராசிரியர். தயா சோமசுந்தரம் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய 'உதயன்' குடும்பத்திற்கும், ஒப்புநோக்குநர் திரு. ம. வேதராசா அவர்களுக்கும், அட்டைப்படம் வரைந்துதவிய திரு. ரமணி மாஸ்ரர் அவர்களுக்கும், அட்டைப்படத்தை தயாரித்த குரு பிரின்டஸ் நிறுவனத்திற்கும், நூலை அழகுற அச்சேற்றிய யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

செ. அன்புராசா.
657,தொடர்பகம், ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# அ) சந்தித்தவை

## 1. நோயாளர் சந்திப்புக்களும் குணமடைதலும்

### 1. அறிமுகம்

"எந்தப் பங்கில இருக்கிறீங்க?...." என்று பலரும் பல தடவைகளில் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். "யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியிலே ஆன்மகுருவாகப் பணியாற்றுகிறேன்." என்று பதிலளித்திருக்கிறேன். அநேக சந்தர்ப்பங்களில் "அப்ப...இன்னும் உங்களுக்கு பங்கு தரயில்லப்போல!..." என்று எனக்காக அனுதாபப்பட்ட பலரைப் பார்த்திருக்கிறேன். இது, எந்த ஓர் அருள்பணியாளனும் பங்கொன்றை நிர்வகிக்கின்றார் அல்லது பங்குக்குருவாகப் பணியாற்றுகிறார் என்ற ஒரு வட்டத்திற்குள் நின்றே ஒரு குருவினுடைய பணியை மக்கள் நோக்குகிறார்கள் என்பதைச் சுட்டிநிற்பதாக உணர்ந்து கொள்ளலாம். *இன்று களத்தில் பரவிக்கிடக்கின்ற பணிகள் பலவிதமாகவும், பல் வகையாகவும் அவற்றைப் புதிய வடிவங்களிலும் ஆற்ற வேண்டி இருக்கிறது.* அப்படியான ஒரு காலத்திலேயே வாழ்ந்துகொண்டிருந்தாலும், அந்நிலைக்கு நாம் இன்னும் முழுமையாக ஆயத்தமில்லை என்றே தோன்றுகிறது!

இன்னும் கொஞ்சம் ஆழமாக வைத்தியசாலைப் பணி பற்றி விளக்க முனைந்தால், "பூசை வைக்கிறதும், சற்பிரசாதம் கொடுக்கிறதும், ஆசிர்வதிக்கிறதும், அவஸ்தை கொடுக்கிறதும்

தானே!..." என்று வைத்தியசாலை ஆன்மகுருவின் (Hospital Chaplain) பணிக்கு இலக்கணம் வகுத்து, பணியின் தன்மைகளை வரையறை செய்து முற்றுப்புள்ளியும் வைத்துவிடுகிறார்கள்.

ஆனால், வைத்தியசாலை ஆன்மகுருவின் பணி, தாதியர் அல்லது வைத்தியர் நோயாளரின் மட்டிலே கொள்ளவேண்டிய அக்கறையைப் போன்றது. ஏன் அதனைவிடக் கொஞ்சம் ஆழமானது என்றால்க் கூட அதில் உண்மை இல்லாமலில்லை. ஏனெனில் நோயாளர் உடல் ரீதியான வருத்தங்களோடும், உள ரீதியான (ஆன்மீக ரீதியான) பாதிப்புக்களுக்கும் உள்ளான நிலையிலேயே அனுமதிக்கப்படுகிறார்கள்.

மேலைநாட்டு வைத்தியசாலை ஒழுங்கு முறைகளின்படி ஒரு வைத்தியசாலையின் ஆன்மகுரு வைத்தியசாலையின் இன்றியமையாத நபராக வைத்து நோக்கப்படுகிறார். மேல்நாட்டவரின் வழக்கத்தின்படி ஒருவர் நோயுற்றிருக்கின்ற நேரத்தில் குறிப்பாக கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் வைத்தியருக்கு அறிவிக்கின்ற அதே நேரத்தில் இவ்வைத்தியசாலையின் ஆன்மகுருவுக்கும் அச்செய்தி கொடுக்கப்படுகின்றது. எவ்விசுவாசத்தை-நம்பிக்கையைக் கொண்டவரோ அவ் அருள்பணியாளருக்கு அறிவிக்கப்படும். உதாரணமாக, யூத மதத்தைத் தழுவியவராயின் யூதமத குருவானவருக்கும், கத்தோலிக்க விசுவாசத்தைத் தழுவியவராயின் கத்தோலிக்க அருள்பணியாளருக்கும், மெதடிஸ்த விசுவாசத்தைக் கொண்டவராயின் மெதடிஸ்த அருள்பணியாளருக்கும் தெரியப்படுத்தப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் வைத்தியர் நோயாளியைப் பரிசோதிப்பதற்கு முன்பதாக நோயாளியின் மட்டிலான கடமையை நிறைவேற்ற ஆன்மகுருவுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது. அதாவது, *நோயாளியின் மட்டிலே உள்ள கடமைகளில் ஆன்மகுருவின் பணிக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இது நடைமுறையிலுள்ள மேல்நாட்டு அணுகுமுறை. இந்நிலைக்கு எமது வைத்தியசாலைகள் இன்னும் வரவில்லை. வர விரும்புவதுமில்லை !*

## 02. வைத்தியசாலைச் சந்திப்புகள்

வைத்தியசாலைச் சந்திப்புகள் பற்றி சற்று ஆழமாக நோக்குவது இச்சந்தர்ப்பதில் நன்மை பயக்கும் என நம்புகிறேன். நோயாளர் சந்திப்புக்களை ஐந்து வகையாக வைத்து நோக்கலாம்.

i) மருத்துவச் சந்திப்பு (Medical Visit)
ii) தோழமைச் சந்திப்பு (Social Visit)
iii) உளவளத்துணைச் சந்திப்பு (Counselling Visit)
iv) அருள்சாதனச் சந்திப்பு (Sacramental Visit)
v) மேய்ப்புப்பணிச் சந்திப்பு (Pastoral Visit)

### i) மருத்துவச் சந்திப்பு :

மருத்துவச் சந்திப்பை வைத்தியரும், தாதியரும் அவர்களோடு இணைந்து நிற்கும் மருத்துவக் குழுவுமே முற்று முழுதாக நிறைவேற்றுகின்ற ஒரு சந்திப்பாகும். நோயாளருக்கு சிகிச்சையளிப்பதோடு சேர்ந்ததாகும். மருத்துவக் குழுவினர் குறிப்பிடும் மருத்துவ ஆலோசனைகளின்படி நோயாளரைப் பராமரிப்பதிலும், பார்த்தெடுப்பதிலும் ஏனையோர் மருத்துவக் குழுவிற்கு உதவியாக இருக்கலாம்.

### ii) தோழமைச் சந்திப்பு :

ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற அனுமதிக் கப்பட்டிருக்கும் பொழுது அவருடைய குடும்பத் தவர்கள், நண்பர்கள், சக ஊழியர்கள் மற்றும் அறிந்தவர்கள், வேண்டியவர்கள், அவரின் நலனில் அக்கறை கொண்டவர்கள் செய்கின்ற சந்திப்பு ஆகும். இது அந்நபரில் கரிசனை கொண்டிருக்கிறோம், அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதை வெளிக்காட்டுவதாக அமையும். பெரும்பாலான வைத்தியசாலைச் சந்திப்புக்கள் தோழமைச் சந்திப்புக் களாகவே அமைந்து விடுகின்றன.

### iii) உளவளத்துணைச் சந்திப்பு :

உளவளத்துணை குறுகிய காலத்தில் மிக உச்சமாக வளர்ந்துவிட்ட உளவியலின் ஒரு கூறாக இருந்தாலும் இதன் முக்கியத்துவம் நோயாளரைப் பொறுத்தவரையில் எக்காலத்திலும் இல்லாதவாறு இக்காலத்தில் உலகெங்கிலும் உணரப்பட்டுள்ளது. அதனால் வைத்தியசாலைகளில் உளவளத்துணைப் பிரிவை உருவாக்கி வைத்தியசாலையின் ஏனைய மருத்துவப் பிரிவுகளைப் போல உளவளத்துணைப் பிரிவும் இயங்கிவருகிறது. குறிப்பாக, உளக்காரணிகளால் பாதிப்படைந்து நோயுற்று இருக்கின்ற நோயாளருக்கு உளவளத்துணை மிகப்பெரிய ஆறுதலைக் கொண்டுவருகிறது. இதனைப் பயிற்சி பெற்றவர்களும், தேர்ச்சி பெற்றவர்களுமே மேற்கொள்ள வேண்டும். நோயாளரின் குணப்படுத்தல் படிநிலையில் உளவளத்துணையின் பங்கு பிரதானமானது. எனினும் உளவளத்துணைக்கு வைத்தியசாலை விடுதிகள் மிகப்பொருத்தமான இடமாக அமையாது என்பதையும் மனதிற் கொள்ளவேண்டும். உளவளத்துணைக்கு அமைதியான தனிப்பட்ட சூழலில் அமைந்த இடம் மிக அனுகூலமாக அமையும்.

### iv) அருள்சாதனச் சந்திப்பு :

நோயாளி ஒருவர் கடவுள்மீது கொண்டுள்ள விசுவாசம் – நம்பிக்கை மட்டில் அவருக்குக் கிடைக்க வேண்டிய ஆன்மீக நலன்களை அவரின் மறைக்குருவிடமிருந்து பெற்றுக்கொள்ள நோயாளிக்கு உரிமை உண்டு. அதேபோல நோயாளியின் மட்டிலே குருவுக்கான கடமையும் உண்டு. உதாரணமாக, நோயுற்றிருக் கின்ற கத்தோலிக்க விசுவாசி ஒருவர் தம் (வைத்தியசாலை) ஆன்மகுருவிடமிருந்து பாவமன்னிப்பு, திவ்விய நற்கருணை, நோயில்பூசுதல் போன்ற அருள்சாதனங்களைப் பெறமுடியும். இவற்றைக் கருத்திற் கொண்டு வைத்தியசாலையின் ஒழுங்கு முறைகளில் ஆன்மகுருவின் வைத்தியசாலையுடனான ஈடுபாடுகள் நோக்கப்பட வேண்டும். அருள்சாதனச் சந்திப்பு நோயாளர் குணம் பெறுவதில் முக்கியபங்கு வகிக்கிறது என்பது ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்படுகின்ற உண்மையாகும்.

v) மேய்ப்புப்பணிச் சந்திப்பு :

நோயாளிக்கும் நோயாளியைச் சந்திக்கின்றவருக்கும் (உதாரணம், ஆன்மகுரு) இடையிலான உறவு ஓர் ஆட்டுமந்தைக்கும், மேய்ப்பனுக்கும் இடையில் உள்ள உறவிலிருந்து பிறப்பது போன்றதாகும். எவ்வாறெனில் மந்தையின் பல்வேறு தேவைகளை அறிந்து உணர்ந்தவராக அவற்றை நிறைவேற்றுவதிலேயே காலத்தைக் கழிப்பவராக இருப்பார். உதாரணமாக, வற்றாத நீர் நிலைகளுக்கும், பசும்புல் மேய்ச்சலுக்கும் இட்டுச்செல்வதும், ஏனைய காட்டு விலங்குகளி லிருந்து பாதுகாப்பு வழங்குவதும், நோயுற்ற வேளைகளில் பராமரிப்பதும், காயமுற்ற வேளைகளில் கட்டுப்போடுவதும் நடக்கமுடியாத நேரங்களில் தோளில் தாங்கிச் செல்வதும் மேய்ப்பனின் பணியாக இருந்தது. இப்படியான ஒரு கண்ணோட்டத்திலிருந்தே மேய்ப்புப்பணிச் சந்திப்பு நோக்கப்படவேண்டும்.

மேய்ப்புப் பணிச் சந்திப்பு முக்கியமாக நோயாளரை மையப்படுத்தியதாக இருந்தாலும் வைத்தியர், தாதியர்கள், ஏனைய ஊழியர்கள், நோயாளிகளின் குடும்பத்தவர் என்ற இதர மக்களையும் உள்ளடக்கியதாகவே அமையவேண்டும். ஏனெனில் ஒரு நோயாளியோடு தொடர்புடைய - வைத்தியர், தாதியர், குடும்பத்தினர் அனைவரும் ஏதோ ஒரு வகையில் நோயாளியின் வேதனையைச் சுமந்தவர்களாகவே இருப்பர். ஆகவேதான், அவர்களுக்கும் மேய்ப்புப்பணிச் சந்திப்பு போய்ச்சேர வேண்டியிருக்கிறது. மேய்ப்புப்பணிச் சந்திப்பை ஒரு மதகுருவானவர்தானா அல்லது துறவிதானா செய்யவேண்டும்? என்ற கேள்வி எழலாம், இதற்கான பதில் இலகுவானது. யார் யார், எவர் எவர் நோயாளருக்குச் சிகிச்சையளிக்கின்றார்களோ, குடும்பத்தவர்கள் போன்றவர் களின் தேவைகளை உணர்ந்து இவர்களோடு சேர்ந்து பயணிக்க ஆயத்தமாயிருக்கிறர்களோ அத்தனை பேரும் மேய்ப்புப்பணிச் சந்திப்பை மேற்கொள்ள முடியும் என்பதை மருத்துவ மேய்ப்புப்பணிக் கல்வித் (Clinical Pastoral Education)

துறைசார்ந்தவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இதற்கு இத் துறையில் ஆழ்ந்த அறிவும், பயிற்சியும், தேர்ச்சியும் இன்றி மேய்ப்புப்பணிச் சந்திப்பைச் செய்ய முடியாது.

இவ்மேய்ப்புப்பணிச் சந்திப்பு எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது என்றால் அதற்குக் காரணம் உண்டு. ஒருவர் நோயாளியாக இருக்கிறார் என்றால் அவர் உடல் வேதனைகள் ஒரு புறமிருக்க உள்ளத்திலே பாரிய துன்பத்தைச் சுமப்பவராக இருக்கலாம். உடல் வருத்தத்தினால் வந்த துன்பம் மட்டுமல்லாமல் அவரின் குறைகள், செய்த தவறுகள், குற்ற உணர்வுகள் சேர்ந்து துன்பத்தைக் கூட்டியிருக்கும். அதனால், நோய் உடலை மட்டுமல்ல உள்ளத்தையும் (ஆன்மாவையும்) தாக்குகிறது. வைத்திய ஆய்வுகளின்படி சுமார் 75% மான நோய்கள் உளப்பாதிப்புக்களால் (Psychosomatic) ஏற்படுவதாக ஆய்ந்தறியப்பட்டுள்ளது. நெஞ்சுவலி அல்லது அஸ்மா என அனுமதிக்கப்படும் நோயாளியின் நோய்க்கான காரணம் பல சந்தர்ப்பங்களில் உளம் சார்ந்ததாகவும் கண்டுணரப் பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் ஏற்பட்ட இழப்புக்கள்- துணைவரின் இழப்புக்கள் - துன்பமான நிகழ்வுகள் - தொழில் பறிபோதல் போன்ற காரணிகள் உள்ளத்தைப் பாதிக்கலாம். ஆக, உடலோடு நேரடியாகத் தொடர்புபடாத புறக்காரணிகள் உடலைப் பாதிப்படையச் செய்கிறது. அவை நோய்களாக வெளிப்படுகின்றன.

இவற்றைக் கண்டுணரவோ அல்லது கண்டுணர்ந்த பின்னர் ஆற்றுப்படுத்தவோ வைத்தியருக்கோ அல்லது தாதியருக்கோ முடியாது போகிறது. காரணம், இதற்கான போதிய பயிற்சியும், தேர்ச்சியும் ஒருபுறமிருக்க ஆற்றுப் படுத்தலுக்கான நேரம், சூழல் கிடைப்பதில்லை. இங்குதான் உளவளத்துணையாளர், மேய்ப்புப்பணிச் சந்திப்பைச் செய்பவர், (ஆன்மகுரு) போன்றோரின் உதவி ஒரு வைத்தியசாலைக்கு மிகச் தேவையானதும், அவசியமான ஒன்றாகவும் சுட்டிக்காட்டப் படுகிறது.

## 3) சுகம் அளித்தலும் குணம் பெறுதலும்

இவ்விடத்தில்தான் சுகப்படுத்தலுக்கும் (Curing) குணப்படுத்தலுக்கும் (Healing) இடையிலான தொடர்பினை மேலும் ஆழமாக நோக்க வேண்டி இருக்கிறது.

சுகப்படுத்தல் என்னும்போது வைத்தியர்களும், தாதியர்களும் நோயாளிக்கு அளிக்கின்ற சிகிச்சையின் வழியாக நோயிலிருந்து உடல் ரீதியான பாதிப்பிலிருந்து சுகம் பெறுகிறார் என்பதாகப் பொருள்படும். உதாரணமாக விபத்தொன்றில் படுகாயமடைந்து அவயவம் ஒன்றை இழந்த நிலையில் வைத்திய சிகிச்சையின் வழியாக உடல் ரீதியான (Physical) சுகம் பெறுகிறார் என்றாலும், அவயவம் ஒன்றை இழந்த இழப்பு நிலையிலிருந்து முழுமையாகக் குணம் பெறாதவராக இருக்கலாம். ஆக, மருத்துவ சிகிச்சையின் வழியாக நோயாளர்கள் சுகம் பெறுகின்றனர் என்றாலும் முழுமையான குணமடையாதவர்களாக (Wholistic Healing) இருக்கலாம்.

குணப்படுத்தல் என்னும்போது நோயாளி தன் வாழ்வின் நிஜத்தினை ஏற்றுக்கொண்டவராக நான் குணமடைந்தவர் என்பதை நோய்வாய்ப்பட்டிருக்கும் காலோட்டத்தில் உள்ளூர அனுபவிக்கின்ற நிலையாகும். எவ்வாறெனில் குறிப்பிட்ட நோயாளி தன் நோயிலிருந்து சுகம் பெறமுடியாத சந்தர்ப்பத்திலும் தனது நிலையினை முழுமையாக ஏற்றுக்கொண்டு குணம்பெற்றவராக மாறமுடியும் - வாழ முடியும் என்பதேயாகும். உதாரணமாக தீராத அல்லது மாறாத நோயினால் (Terminal Disease) பீடிக்கப்பட்ட ஒருவர் அந்நோயிலிருந்து முழுமையான சுகம்பெறாத நிலையிலும் குணமடைந்தவராகலாம். ஆக, ஒரு நோயாளி தனது உடல் நோயிலிருந்து முழுமையாக சுகம்பெறாமல் குணமடையலாம் என்பது சாத்தியமாகிறது. தனது நீண்ட எதிர்காலத்தை எண்ணிக் கவலைப்படாமல் நிகழ்காலத்தின் ஒவ்வொரு பொழுதையும் தன் உடல் வேதனைகளோடு இணைந்து வாழ பயன்படுத்தக் கற்றுக்கொள்கின்றார். ***ஒரு முரண்பாட்டில் இன்னோர் உடன்பாடு பிறக்கிறது***. அவ்வளவுதான்!....

# 2. ஆத்துமாவின் சத்தம் – ஒரு தற்கொலைக் கொடூரம்

யாழ். போதனா வைத்தியசாலை புனித வேளாங்கண்ணி சிற்றாலய ஆன்மகுருவாகப் பணிபுரியும் என் அனுபவத்திலே ஏறக்குறைய ஐம்பது பேரளவில் தமக்குத்தாமே எரியூட்டிய தற்கொலையாளிகளைச் சந்தித்திருக்கிறேன். மிக மோசமாகத் துன்புறுகின்ற நோயாளர்களில் இவர்கள்தான் முதலிடம் பெறுகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள்.

இவர்களோடு பேசும் போது இவர்கள் பலரின் அப்போதைய திடீர் முடிவு ஆத்திரத்தில், கோபத்தில் எடுக்கப்பட்டது என்பதை கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. இவர்களில் அநேகர் உண்மையாக உளப்பூர்வமாகி, சாவதற்கு அல்லது தம் உயிரை மாய்ப்பதற்கு இச்செயலைச் செய்ததாகத் தெரியவில்லை. எனினும் இவர்களில் பலர் மிக பரிதாபகரமாக அவஸ்தைப்பட்டு துடிதுடித்து இறந்து போவதாகவும், ஏனையோர் மிக நீண்ட தொடர் வேதனையின் பின் உயிர்தப்புவதாகவும் வைத்தியசாலைப் பதிவேடுகள் நிரூபிக்கின்றன.

இப்படி, இவர்களின் சோகமான கதைகளுக்குச் செவிமடுக்கின்ற வேளையில் ஒருபக்கம் எந்த அளவுக்கு இவர்கள் வாழுகின்ற சமுதாயத்தில் சமூகத்தின் பார்வையும் மனப்பான்மையும் கொடூரமானது என்பதையும், மறுபக்கம் எந்த அளவிற்கு இவர்கள் சமுதாயத்தின் சவால்களுக்கும், சந்திக்கும் பிரச்சினைகளுக்கும் முகங் கொடுத்து வாழத்தெரியாத 'அப்பாவிகள்' எனவும் எண்ணத் தோன்றுகிறது.

இதுபற்றிய மேலதிக கருத்துக்களும், அனுபவங்களும் ஒரு புறமிருக்க மறுபுறத்தில் உள்ளத்தை உருக்கிய ஒரு சந்திப்பையே இங்கு தர விரும்புகிறேன்.

2001 வைகாசிமாதம் இறுதிப்பகுதியில் கணவனை இழந்த ஓர் இளம் பெண் தனக்குத்தானே எரியூட்டிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். கணவனை இழந்தபோது அவளின் தலைப்பிள்ளையின் வயது உதரத்தில் அவனை உற்பவித்திருந்த அந்தச் சில நாள்களே!..... இப்போது அந்த ஒரே மகனுக்கு வயது 11.

கணவனை இழந்தவளுக்கு இருக்கிற துன்பதுயரங்கள், தொல்லைகள் போதாதென்று, புறத்தே வெளியிலிருந்து எத்தனையோ சவால்கள்!.... அத்தனையையும் எதிர்கொள்ள முடியாதவளாக வாழ்ந்துவரும் நாள்களில் திடீரென ஒருநாள் தன்னைச் சுற்றியிருந்து வேதனைப்படுத்துவோரைப் பயப்படுத்தும் நோக்கத்துடன் தன்னைத்தானே எரியூட்ட முயற்சிப்பது போல செயற்பட்ட வேளையில் நெருப்புப் பற்றியெரிந்த நிலையில் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறாள்.

"இத்தனைபேர் என்னிடம் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள் என்று இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. எல்லோரிடமிருந்தும் நிறைவான அன்பைப் பெற்றேன்" என்று கூறியவள் தனது அன்புக் குழந்தையை, தனக்கென்றிருந்த ஒரே செல்வத்தைப் பார்க்க மறுத்தாள். காரணம், தனது கோலத்தைக் கண்டு, அவளுக்கென்றிருந்த அந்த ஒரே செல்வம் பதைபதைத்துவிடுவான் என்பதால்தான். இருப்பினும், தாயின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போனதினால் தாயாரின் நிலைமையைப் படிப்படியாக எடுத்துச் சொல்லி, ஆற்றுப்படுத்தி, அவன் தாயாரைப் பார்க்க, கூட்டிச்செல்லப்பட்டபோது நடந்த சந்திப்பும், சம்பாஷணையும்தான் உள்ளத்தை உருக்கும் காட்சியாக இருந்தன.

ஒரே பிள்ளையல்லவா. தந்தையை இழந்த பிள்ளை. தாய்ப்பாசத்தோடு தனியன்பு ஊட்டி வளர்க்கப்பட்டவன். மகன், தாயைக் கண்டதும் கலங்கினான். கண்ணீர் வடித்தான். சற்று நேரம் கண்ணீரே கதை பேசின!...!...!

☹ "ஏன்ர செல்லம் எப்படி இருக்கிறீங்க?.....!.." வேதனையைக் காட்டிக்கொள்ளாமல் அவள் மெல்ல வாய் திறந்தாள்.

⇨ "நல்லாயிருக்கிறன்... அ...ம்...மா..." கண்ணீர் மல்கப் பதில் சொன்னான்.

☹ "ஏன் குஞ்சு அழுறீங்க...? அழாத என்ர செல்லம் ....என்ன சாப்பிட்டீங்க செல்லம்?"

⇨ "சோறு"

☹ "யாரண தீத்திவிட்டது?"

⇨ "ஒத்தரும் இல்ல. நீங்க எப்ப வீட்ட வருவீங்க அம்மா?"

☹ "என்ர செல்லம். அம்மா கெதியா வந்திடுவன்அண... அழக்கூடாது என!... 'ரொய்லட்' எல்லாம் யாரு கழுவி விடுறது?..."

⇨ "இப்ப நான்தானம்மா கழுவுறது"

☹ "என்னண.... என்ர குஞ்சு... மாமா, அன்ரி எல்லா உன்ன நல்ல பாப்பாங்க. கவலைப்படாத செல்லம் குளிச்சீங்களா? யாரு குளிப்பாட்டினது?.....

⇨ "நாந்தானம்மா. எப்ப... நீங்க... வீட்ட.... வருவீங்க..."

☹ "மெல்லிய சுடுதண்ணியில முழுகவேணும். காதப் பொத்திக்கிண்டு முழுகவேணும். ரெண்டு கிழமைக்கு ஒருக்கா முழுக வேணும் எண்டு அன்ரியிற்ற சொல்லுங்க குஞ்சு!"

⇨ "ஓமம்மா. நீங்க எப்ப வீட்ட வருவீங்க?..."

☹ "கெதியா அம்மா! வீட்ட வருவன்!.... என்ர செல்லம் பள்ளிக்கூடம் போனீங்களா?..."

⇨ "ஓமம்மா... இண்டைக்கு நான் வாசிப்பில முதலாம் இடம். எப்ப நீங்க வீட்ட வருவீங்க?...."

☹ "என்ர செல்லம்! குஞ்சு... நீ நல்லாயிருப்பா!... நீ கெட்டிக்காரனா வருவா!... அம்மாவை நினைப்பியா?"

⇨ "ஓம்மா!.... நீங்க எப்ப வீட்ட வருவீங்க அம்மா!..."

☹ "அம்மா இரண்டொரு நாளில வருவன்!.. என்ர செல்லம். என்னண.. நல்லாப் படிக்கணும். கெட்டிக்காரனாவரணும். பள்ளி கூடத்தில அம்மாவக் கேட்கயில்லையா?....!..."

⇨ "ரீச்சமாரும், வகுப்பு ஆசிரியரும் 'அம்மாவுக்குச் சுகம் வரும் நீ நல்லாப் படிக்கணும், நாங்க நல்லா மன்றாடுவம்' எண்டு சொன்னாங்க அம்மா!... எப்ப வீட்ட வருவீங்க!...?.."

☹ "அம்மா வருவன் செல்லம்!.... படுக்கும் போது "பாப்பா பிடிக்கிற தில்லையா?....

⇨ "இல்லையம்மா!... எப்ப வீட்ட வருவீங்க?

☹ "அம்மா கெதியா வருவன்!... என்ர செல்லத்துக்கு அம்மா எதில முத்தம் தாறது!....

விம்மி விம்மி அழுதான்.

☹ "பாதர்... என்னுடைய வேதனை தாங்க ஏலாம சாகவேணும் எண்டு காலையில சொன்னன். ஆனா, என்ர செல்லத்தோட கதச்ச பிறகு உயிர்தப்ப வேணும் போல இருக்கு!...செத்தாலும் உயிர்க்க வேணும் போல இருக்கு!.... தப்புவேனா பாதர்!... பாதர்!... பாதர்!...

சுற்றியிருந்த நோயாளர்கள், பார்க்க வந்தவர்களின் கண்கள் குளமாகின. பதினொரு வயதுச் சிறுவன், ஆனால், அவன் பால்குடி மாறாத பாலகனைப் போன்ற நிலையில்தான் வளர்க்கப் பட்டிருக்கிறான்!.. உண்ண, உடுத்த, உடைமாற்ற, தலை சீவ, கழுவ, தோய்க்க, அன்புசெய்ய, அரவணைக்க, ஆரத்தழுவ என்று எல்லாமே அவனுக்கு அவள்தான் – அவளுக்கும் அவன்தான்.

"நீங்க எப்பம்மா வருவீங்க...?" என்பவனுடைய ஏக்கத்திற்கு "அம்மா கெதியா வீட்ட வந்திடுவன்!..." என்ற எதிர்நோக்கிற்குப் பதில் எதிர்மறையிற் கிடைத்தது. சுமார் மூன்று கிழமையின் பின் வீட்டிற்கு வந்தாள் அவள், உயிர் பிரிந்த உடலுடன்!...

"எல்லாமே எனக்கு என்ர செல்ல மகன்தான்" என்றவளுக்கு ஏனிப்படியாயிற்று? என்று அவளைமட்டும் கேட்காமல் இவளைச் சுற்றியுள்ள சமூகத்திடமும் கேட்கவேண்டிய கேள்வி!....

இப்படியான முடிவை எடுக்க இத்தாயைத் தூண்டியது என்ன? இதற்கு யார்(கள்) காரணம்? யாது(கள்) காரணி? அவளை மட்டுமல்லாது, இவனைச் சுற்றியுள்ளவர்களும் பதில்காண வேண்டிய வினா!....

இதனால், இத்தாய் சாதித்ததுதான் என்ன? சாதிக்காமல் இருக்கலாம்!... போதித்தது என்ன? ஆனால்....

"எப்ப அம்மா வீட்ட வருவீங்க?"என்பவனுடைய ஏக்கம் தீருமா? எப்போது தீரும்? எப்படித் தீரும்?

நான்
புரட்டாசி - ஐப்பசி, 2001

# 3. யார் பொறுப்பு?

## பொறு; இப்போதைக்கு அது இருக்கட்டும்......... இக்கதையைக் கேளு.

அண்மையில் வயோதிபப் பெண் ஒருவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சந்திக்க நேர்ந்தது. முதுமையும், இயலாமையும், நோயும் சேர்ந்து கொஞ்சம் தளர்ந்த நிலையிலேயே காணப்பட்டாள். தான் நினைப்பதை மற்றவர்களுக்குச் சொல்லுவதில் சிலவேளைளில் தெளிவின் மையும், தடங்கல்களும் இருந்தன. அவ்வப்போது முரண்பாடான கருத்துக்களைக் கூறினாலும் அவ்வயது முதிர்ந்த தாயின் கதையினிலே சமுதாயம் அறிந்துகொள்ள வேண்டிய பல விடயங்கள் இருந்ததை உணர்ந்தேன்.

இக்கதை, ஒருவகையில் ஒரு பக்கச்சார்பானதுதான். மறுபக்கத்தை எட்ட முடியாத நிலை. அப்படி இருந்தும் இத்தாயின் கதையை அறிந்துகொள்வதில் பல அர்த்தங்கள் இருக்கின்றன என்பதால் தொடர்கிறேன்.

திருமணம் முடித்ததாகச் சொல்லுகின்றாள், திருமண மாகி ஆரம்ப நாள்களிலேயே கணவனின் குடிப்பழக் கத்தினால் உண்டான கொடுமைகளின் காரணமாக, குடும்ப வாழ்வினை விட்டுவிட்டதாகக் குறிப்பிடுகின்றாள். இளமையிலேயே தன் குடும்பத்தைப் பிரிந்து இன்னொரு குடும்பத்திலே பணிப்பெண்ணாக இணைந்து கொள்கிறாள். இக்குடும்பத்தில், வீட்டுத்தலைவன் (அரச ஊழியன்), தலைவி, பிள்ளைகள்,பிள்ளைகளுள் சிலர் இப்போது வெளிநாடுகளில் இருக்கின்றார்கள்.

இப்போது இத்தாய்க்கு எழுபத்தினான்கு (74) வயது. அவளின் கூற்றின்படி ஏறக்குறைய கடந்த நாற்பது (40) வருடங்களாகப் பணிப்பெண்ணாக அக்குடும்பத்தோடுதான் அவளின் சீவியம். அவள் வாழ்நாள்களில் அரைவாசிக்கு மேல் அக்குடும்பத்தோடு முடிந்திருக்கிறது. இந்த நாற்பது (40) ஆண்டுகளும் அவ்வீட்டில் கூட்டுவது, துடைப்பது, தோய்ப்பது, சமையல், சங்கக்கடை, சாமான் வாங்குவது என்று கழிந்திருக்கிறது!.....

அவளுக்கென்று சொத்துக்கள் இருப்பது சந்தேகமே. சந்தேகத்திற்கு இடமின்றி இருப்பதோ உடுத்த ஒருசில துணிமணிகள், இரண்டு மூன்று வெற்றுப் போத்தல்கள், சாப்பிட ஒரு கோப்பை, குடிக்க ஒரு 'ரம்ளர்' ஆகியவற்றோடு கூட ஐ. சியும் **(Identiy Card)** உண்டு.

தற்போது, காயம் ஒன்றிற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றாள். வீட்டுத் தலைவனைத் தவிர அப்போது வீட்டில் யாரும் இல்லாத காரணத்தினால் அவள் இன்னொருவரின் உதவியுடன் வைத்தியசாலைக்கு வந்திருக்கிறாள்.

நாற்பது (40) ஆண்டுகள் குடும்பத்தில் ஒருத்தியைப் போல வாழ்ந்து பணிபுரிந்தவளுக்கு வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவென்று வந்தவளுக்கு கொடுக்கப்பட்ட பணத்தின் தொகை 30ரூபா மட்டுமே. ஒரு வருடத்திற்கு 1.30சதம் விழுந்

திருக்கிறது போலும்...... "எனக்கு வயது 35... எனது தாய், தந்தையுடனான தொடர்பு ஆகக்கூடியது 36 ஆண்டுகளே... ஆனால், அதனைவிட இந்த அம்மா இக்குடும்பத்தோடு இவ்வளவு நீண்ட கால உறவிருந்தும் இப்போது.." என்று கவலையோடு சொல்லிக்கொண்டிருந்தாள் அத்தாயை அன்போடு பார்த்தெடுக்கும் ஒரு தாதி.

இத்தாயைப் பார்க்க வீட்டுத்தலைவன் ஒரே ஒரு தடவை வந்திருக்கின்றார், கரடி பிறை கண்டதுபோல. அதனால், அவள் பெற்றுக்கொண்டது ஒரு ரீ (தேநீர்), ஒரு பிஸ்கட் பெட்டி, 10 ரூபா காசு. "இப்ப... என்ன அவசரம் வருத்தம் மாறவிட்டு ஆறுதலாகவாவன்." இது அவர் அவளுக்குக் கொடுத்த "அட்வைஸ்" (ஆலோசனை).

இந்நிலையில் அவள் இறந்துவிட்டால் (நான் விரும்பவில்லை. ஆனாலும்....) அடுத்த நாள் பத்திரிகையில் "அரச செலவில் அடக்கம்" என்பதோடு இறுதிக் கிரியைகள் இலவசமாகவே முடிந்திருக்கும்!....

அப்படி நடக்காத பட்சத்தில், "அன்னை திரேசா.." என்று தொடர்ந்தார்கள். "அவள் இறந்து ஐந்து வருடங்கள் ஆகப்போகின்றது" என்றேன். "இல்லை... அன்னை திரேசா சிஸ்ரமாரிடம் இந்த ஆச்சியைச் சேர்க்க...." இவ்வில்லத்தை நம்பி அந்த ஜீவன் இன்னும் மூச்சு விட்டுக் கொண்டிருக் கிறது!...

"என் சமூகமே உன் பதில் என்ன?" இது என் கேள்வி அல்ல. இந்தத் தாய் கேட்கத் துடிக்கிறாள், முடியவில்லை. அதனால், அவ்வம்மாவின் உணர்வுகளுக்கு வார்த்தைகளைப் போட்டுப் பார்த்தேன். அவ்வளவுதான். இது இப்படி வினாவாக அமைகிறது.

**நான்**

**கார்த்திகை ~ மார்கழி, 2001**

# 4. "தப்பிப் பிழைத்தான்"

கடந்த 10 வருடங்களாக இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற குடும்பம் அது. தாய் தந்தை, 3 பிள்ளைகளைக் கொண்டது அச்சாதாரண வாழ்க்கைத் தரத்தினுடைய குடும்பம்.

2ஆவது மகனுக்கு வயது 12. 7ஆம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கின்றான். படிப்பிலே கெட்டிக்காரன். வீணான 'சோலி'களுக்குப் போகாத 'பெடியனா'கத் தோற்றமளித்தான்.

வகுப்பில் ஒவ்வொரு மாணவனுக்கும் உரிய பாடப் புத்தகங்கள் இல்லாத பிரச்சினை, தீராத தொடர் கதையானதால் குறிப்பிட்ட பாட நூலை 3 மாணவர்கள் பகிர்ந்து படிக்க வேண்டிய சூழ்நிலை. பாடசாலை நேரத்தில் வகுப்பு ஆசிரியர் கொடுத்த வேலையைச் செய்து கொண்டிருக்கும் வேளையில், அடுத்திருந்த மாணவன் அதே வேலையைச் செய்வதற்காக பாடநூலை ஆசிரியரின் அடிப் பயத்தில் பறித்தெடுக்க முயல்கின்றான். முடியாமற் போகவே, அம்மாணவனின் தலையைப் பிடித்துத் திருகி இருக்கின்றான்.

அதனால், அம் மாணவன் மயக்கமுற்று, பின் ஒருவாறாக வீடு வந்து சேர்ந்துவிடுகின்றான். பிற்பகல் 3 மணியளவில் படுக்கையில் மயக்கமுற்றுக் கிடப்பதைக் கண்ணுற்றதால் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றான்.

தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றான். "காலையில் கண் விழிக்கவில்லை என்றால் கொழும்புக்குத் தான் கொண்டுபோக வேண்டும்!..." என்று குடும்பத்தவர் களுக்கு வைத்தியர்கள் கூறிவிட்டனர். பிற்பகல் 3 மணியளவில் மயக்கமுற்றவன் மறுநாள் அதிகாலை 2 மணிக்கே கண்விழிக்கின்றான். சுமார் 11 மணித்தியாலங்கள் சுய நினைவிழந்த நிலையில் மிக ஆபத்தான நிலையில் இருந்து "தப்பிப் பிழைத்தான்" என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

- இது ஒரு சிறிய செயல் விளையாட்டாகக்கூட இருக்கலாம்.

- அம்மாணவன் கோபத்தால் ஏற்பட்ட 'தற்செய'லாக இருக்காலாம்.

- ஆபத்தான விளைவு முற்றும் எதிர்பார்க்காமல் நடந்திருக்கலாம்.

ஆனால், 12 வயது நிரம்பிய ஒரு மாணவன் தன் சக மாணவனைக் கண்டிப்பதற்காக இப்படி செயற்பட்டிருக் கின்றான் என்பது உண்மை. இம் மாணவன் தண்டிக்கப்பட வேண்டும் என்பது இதனை எழுதுவதன் நோக்கமல்ல.

இப்படியான நிகழ்வுகள் எம் சிறார்களை, மாணவச் செல்வங்களை, இளைஞர்களை செய்யத் தூண்டுவதற்கான காரணிகளை நோக்குவது நமக்கு நன்மை பயக்கும் என நம்புகின்றேன். அத்துடன், இவர்களை உருவாக்குகின்ற வர்களின் பொறுப்புப் பற்றிச் சிந்திப்பதும் இங்கு பொருத்தமாக அமையும்.

* **குடும்பப் பின்னணி:** அதில் பெற்றோர், பிள்ளைகள் மட்டிலான உருவாக்கம்.

* **வாழுகின்ற சூழல்:** பழகுகின்ற நண்பர்கள், சந்திக்கின்ற சம்பவங்கள்.

* **வகுப்பறைகள்** : அங்கு பயிற்றுவிக்கும், வழிநடத்தும் ஆசிரியர்கள்.

* **பொழுதுபோக்குகள்** : பார்க்கின்ற படங்கள் அதில் காண்கின்ற காட்சிகள்.

என்று இன்னும் பல காரணிகள் இவ் இளையோரின் வாழ்க்கைப் பாதையில் பாதிப்பை, தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஏன் தாயின் வயிற்றில் உருவான போதும், அதன் பின்னரும் நடந்த நிகழ்வுகள் ஒருவரின் இன்றைய நடத்தைக்குக் காரணங்களாக அமையலாம் என்று உளவியலாளர்களும், மனோதத்துவ நிபுணர்களும், ஆன்மீகப் பெரியார்களும் கூறுகின்றார்கள்.

சமூகத்திற்குரிய இன்றைய இளைஞர்களை உருவாக்குவதில் உள்ள பொறுப்பிலிருந்து, கடமையி லிருந்து யாரும் விலகவோ, தப்பித்துக்கொள்ளவோ முடியாது.

தெளிவு

மார்கழி - தை, 2002

# 5. "ஐயோ...... இப்படி ஆயிற்றே!......"

'மனிதன் அடிப்படையில் நல்லவன்' என்று மெய்யியல் கூறுகின்றது. மனிதன் நன்மைகள் புரியவும், நன்மைகளால் நிறைந்தவனாகவும் இருப்பதில்தான் மனிதத்துவ 'இருத்தலின்' அர்த்தம் இருக்கிறது எனலாம். ஆக, மனிதன் நன்மை செய்ய விரும்புகின்றான் ஆசிக்கின்றான்.

இருப்பினும், அவன் பலவீனன் என நம் அனுபவம் கூறுகின்றது. தான் செய்ய விரும்பாத, தீமையான, கேடுவிளைவிக்கும் செயல்களைச் செய்துவிட்டு "ஏன் நான் இப்படி நடந்து கொண்டேன்?" என்று தன்னைத்தானே கேட்டுவிட்டு அதே போன்ற செயல்களை மீண்டும் செய்துவிட்டு அவற்றை நியாயப்படுத்தவும் முனைகின்றான். சில சந்தர்ப்பங்களில் அறியாமல் தவறு இழைப்பவன், பின்னர் ஒரு செயலின் கனாகனத்தை அறிந்து கொண்டும் கூட தப்புச் செய்கின்றான். உதாரணமாக மற்றவர்களின் உடைமையை அவர்களின் அனுமதி இல்லாமல் எடுக்கக்கூடாது எனத்தெரிந்தும், ஏதோ ஒரு சூழ்நிலையில், 'ஆபத்துக்குப் பாவமில்ல' என்று நியாயப்படுத்திக் கொண்டு அபகரிப்பவன் நாளடைவில் களவு என்ற குற்றத்தைப் புரிகின்றான்.

எல்லாரும் தவறுகள் செய்கின்றவர்கள். பிழைகள் விடுகின்றவர்கள். குற்றங்கள் புரிகின்றவர்கள். "குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி என்பதேது..." என்ற பாடல் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. அவ்வாறாயின், நாம் எல்லாரும் நிம்மதி இழந்தவர்களா? என்ற கேட்கத் தோன்றும்.

இன்று, பலர் பல விதமான உளத் தாக்கங்களினால், பாதிப்புக்களினால் உடல் நோய்களுக்கும் உள வருத்தங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றார்கள். இந்த

வரிசையில், குற்றப்பழி உணர்வினால் நோயுற்றிருப்பவர்கள் கணிசமான தொகையினராக இருப்பது கண்கூடு.

குற்றப்பழி உணர்வால் தம் வாழ்வில் வேண்டாத, வீணான துன்பங்களை அனுபவிப்பவர்கள் பலர். ஒரு சிலரின் அனுபவப் பகிர்தலை இங்கு நோக்குவது பயனளிக்கும்.

* "எனது காலம் வீணாகப் போய்விட்டதே!.... என்னுடைய நேரத்தையும், ஆற்றலையும், திறமையையும் வீணடித்து விட்டேனே!...." என்று இருபத்தியாறு வயது மதிக்கத்தக்க ஒரு பட்டதாரி யுவதி கலங்கினார். குற்றப்பழி உணர்வால் மிக மோசமாகப் பாதிக்கப்படாவிட்டாலும், நாளடைவில் இவ்வுணர்வால் பாதிப்புற வாய்ப்புக்கள் இருக்கின்றன. இவரைப் பொறுத்தவரையில் கழிந்து போன நாள்களை நினைந்து கவலையுறாது, நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தொலைத்து விடாமல் முன்னேற முயலவேண்டும். நரைதிரையா ஆகிவிட்டது!.... இவரின் எதிர்காலம், இனி இருக்கின்ற காலத்தை ஆக்கபூர்வமாகச் செயற்படுத்துவதிலேதான் தங்கியிருக்கின்றது - கடந்ததை நினைத்துக் கலங்காமல் .

* "எனது பெற்றோரை கடைசி நேரத்தில் பார்த்தெடுக்க முடியவில்லையே!..." என்று வெளிநாட்டிலிருந்து திரும்பிய ஒருவர் கண் கலங்கினார். பெற்றோர் இறந்து 4, 5 வருடங்கள் ஆகியும், "என் பெற்றோரைப் பார்த்தெடுக்க முடியவில்லையே" என்ற உணர்வு இன்னும் அவரை வாட்டுகின்றது. வேண்டுமென்று பெற்றோரைக் கவனிக்காமல் நடந்திருந்தால் வேறு விடயம். ஆனால், இச்சூழல் குறிப்பிட்ட நபரின் ஆற்றலுக்கு சிலவேளைகளில் அப்பாற்பட்டதாகவும், தவிர்க்க முடியாததும் ஆகலாம். ஆக, இவர் பெற்றோரின் அபிலாசைகளுக்கு, நினைவுகளுக்கு உயிர்கொடுப்பதனால் இவரின் குற்ற உணர்வை நீக்கலாம் வீணாக வேதனைத் தீயில் வேகாமல்.

* "காதலித்தவரைக் கைவிட்டு, வேறொருவரைக் கலியாணம் செய்ததால் இன்று இத்தனை வேதனைகளை அனுபவிக் கின்றேனே!" என்று சொல்லித் துன்புற்றார் நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒருவர். "நம்பியவரை ஏமாற்றி விட்டேனே" என்ற

குற்ற உணர்வு இவரை வாட்டுகின்றது. எனினும், கைப்பிடித்தவரை கண்கலங்காது நாணயத்தோடு வாழ்விப்பதிலும் பிரமாணிக் கத்தோடு வாழ்வதிலும் இவருக்குப் புதிய வாழ்வு மலரும்.

* "இந்தப் 'பேசன்ர' (நோயாளியை) கொஞ்சம் கவனமாகப் பார்த்திருந்தால் காப்பாற்றி இருக்கலாம் !.....?" என்று நொந்து கொள்கின்றார் தாதியொருவர். உயிர் காக்கும் பணியில் வாழ்வா அல்லது சாவா என்று போராடிக் கொண்டிருப்போரிடையே பணிபுரிவோருக்கு இவ்வுணர்வு கடைமையுணர்ச்சியுடன் சேவை செய்யத் தூண்டலாம்.

* "எனது குழந்தை எப்போதும் என் கண்முன்னே உள்ளது அதை நினைக்கப் பயமாகவும் இருக்கிறது!..." என்று ஒழுக்கப் பிறழ்வினால் சிசுவை உற்பவித்து, பின்னர் "சிசுச்சிதைவு" செய்த பெண்மணி உள்ளம் வெதும்பினார். வாழ்வில் கறைபடிந்த ஓர் அத்தியாயமாக இது இருந்தாலும், இதற்கு இவள் மட்டுமே பாத்திரவாளி அல்லர். இவ்வனுபவத்தையும் வாழ்வின் சவாலாக ஏற்று, வாழ்ந்து காட்டுவதன் மூலம் இவளின் குற்றப்பழி உணர்வைப் போக்கலாம்.

இவ்வாறு குற்றப்பழி உணர்வு அநேகரில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றது. குற்றப்பழி உணர்வால் உண்டாகும் தாழ்வு மனப்பான்மை யினால் பயந்த, உறுதியற்ற ஆளுமையைக் கொண்டவராக ஒருவர் விளங்குவார்.

எனவே, இனிமேலும் தீய செயல்களைச் செய்ய மாட்டேன் என்ற உறுதி, தன்னைத்தானே மன்னித்தல், புரிந்த குற்றத்திற்குப் பரிகாரந் தேடல், பாதிப்புற்றவரிடம் மன்னிப்பு வேண்டல், உறவைப் புதுப்பித்தல் போன்ற பண்புகளை வளர்த்துக்கொள்வதால் குற்றப்பழி உணர்விலிருந்து விடுபட்டு, சுகமான ஆளுமையை எம்மில் உருவாக்கலாம்.

நான்

தை - மாசி. 2002

# 6. எரிகின்ற சமூகத்தின் எரியும் இன்னொரு சம்பவம் !....

"நான்" உளவியல் சஞ்சிகையில் கடந்த வருடம் 2001ஆம் ஆண்டு புரட்டாசி-ஐப்பசி இதழுக்கு "ஆத்மாவின் குரல் - ஒரு தற்கொலைக் கொடூரம்" என எழுதப்பட்ட அனுபவப் பகிர்தலை வாசித்துவிட்டு, பலரும் பல கருத்துக்களைப் பரிமாறியிருந்தார்கள். அதிலும் தனிப்பட்ட முறையில் என்னோடு பகிர்ந்து கொண்டவர்கள் பலர்.

"வாசிக்கும் போது கண் கலங்கிவிட்டது" என்றார் என் நண்பர்(நண்பி) ஒருவர்.

"வாசித்துவிட்டு என்னை அறியாமலே அழுதுவிட்டேன்" என்றார் இன்னொருவர்.

"பார்த்திட்டு என்ர மனிசி அழுதிற்றா" என்றார் ஒரு குடும்பத்தலைவர்.

"இப்படியும் நடந்ததோ?" என வியப்புற்றார் ஒரு தாய்.

"எப்படி உங்களால் கேட்க முடிந்தது?" என வினவினார் மற்றொருவர்.

ஒருவகையில் இவ்வினாக்களுக்கு விடைகொடுக்க வேண்டியது எனது கடமையாகிறது. முதலில், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பார்கள். அதேபோல் நாம் அடைந்த துன்பத்தைப் போல யாரும் அனுபவிக்கக் கூடாது என்ற நோக்கினை அடிப்படையாகக் கொண்டு என் அனுபவத்தை அறியத்தந்தேன்.

அடுத்து, இவ் அனுபவப் பகிர்தலில் (புரட் - ஐப்பசி, 2001) கதைக்கோ, கற்பனைக்கோ இடமில்லை. காரணம், கற்பனை செய்ய முடியாத, இயலாத ஓர் உண்மைச் சம்பவம். கனவில் கூட யாரும் காணக்கூடாத நிகழ்வு அது!... இப்படியான துன்பம் இனிமேல் எவருக்கும் நிகழ்க்கூடாது என்பதுதான் என் உள்ளத்தில் ஓங்கி ஒலித்த உணர்வாகும். அதனாற்றான், அச்சம்பவத்தினை வெட்டாமல் - கொத்தாமல், கூட்டாமல் - குறைக்காமல், பார்த்ததை - கேட்டதை - நடந்ததை - உணர்ந்ததை - அனுபவித்ததை அப்படியே எழுதத் துணிந்தேன். (இச்சம்பவத்தினை படிக்காதவர்கள் படித்துப் பாருங்கள் உண்மை புரியும்.) கடந்த சில ஆண்டுகளாக நோயாளர்களுடனான தொடர்பிலும், உறவிலும் மிக மோசமாகத் துன்புறுகின்றவர்கள் யார் என்றால் அது தம்மைத்தாமே எரியூட்டுபவர்களே எனலாம்!.... மிக அவஸ்தையான மரணமடைபவர்களும் இவர்களே. செத்து உயிர்த்தால்தான் சாவு என்றால் என்ன என்று தெரியும் என்பதைப் போல் இவர்களுடைய துன்ப வேதனையை நாம் அனுபவித்து, விளங்கவைக்க முடியாது. எனினும் எரிகின்ற சமுதாயத்தின் எரியும் இன்னொரு சம்பவத்தினைத் தருகிறேன். கேட்கவே நெஞ்சம் பதறுகின்றது. பரவாயில்லை, இவ் அனுபவப் பகிர்தலால் (உயிர்) வாழ்வதன் அர்த்தத்தில் ஒருவராகிலும் உறுதிபெற்றால் அதுவே, என் எழுத்துக்களின் வெற்றியாகும்.

"ஐயா..... பாதர் எங்கட வோட்டில் (Ward) இன்னொரு எரிஞ்ச பேசன்ற் (Patient) இருக்கிறா. வந்து பாருங்களேன்" என்று வேண்டினாள் ஒரு தாதி. சென்று பார்த்தேன். அந்தோ பரிதாபம்!.... எரிந்தவர்களுக்கு என்றே ஒதுக்கப்பட்ட ஓடை

அது (யாழ். போதனா வைத்தியசாலையின் 23ஆவது விடுதி தெரிந்தவர்களுக்கு நன்கு புரியும்)!.... "என்ன நடந்தது?" என உடனடியாகக் கேட்கக் கூடாது. அப்படி கேட்காமலே பட்டென்று பதில் வந்தது.

"விளக்குத் தட்டுப்பட்டதால" அல்லது "குக்கர் வெடித்ததால" அல்லது "மண்ணெண்ணெய் என்று பெற்றோலை ஊத்தியதால" என்று பல ஆலாவனைகள் சொல்லிச் சோடிப்பார்கள். கொஞ்சக் காலம் இப்படிப்பட்ட வர்களைப் பார்த்த அனுபவமோ என்னவோ முதலில் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்பேன். "பிறகு, போகப் போக எல்லாம் உனக்குப் புரியும்" என்று என் மனம் என்னை ஆற்றுப்படுத்தும். ஆகவேதான், சுற்ற உள்ளவர்கள் முதலில் சொல்லும் "கதை"களுக்குக் காதுகொடுப்பேன் ஏதோ ஒன்றும் புரியாதவன் போல. "காலம் போகப் போக இவருக்கும் புரியும் என்பதும் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியும்.

"நாமிருவர் நமக்கிருவர்" என்கிறார்களே இப்போது!... அதுபோல அக்குடும்பத்தில் கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள். சுமார் 28வயது மதிக்கத்தக்க அவள், குடும்பம் நடத்தத் தெரிந்தவள். அந்த அளவுக்கு அறிவும், ஆற்றலும் படைத்தவள். கணவன் குடும்பத்தைக் காப்பாற்றக் கூடியவன். பொருளாதார ரீதியில் "ஆகா ஓகோ" என்றில்லா விட்டாலும் சுமாரான நிலையில் இருக்கின்றார்கள். பின் ஏன் இப்படி நடந்து கொண்டாள்? அப்பெண்ணே கூறுகிறாள், கேளுங்களேன்.

அதற்கிடையில் எமது உடலில் ஏறக்குறைய 40% க்கு (நாற்பது வீதம்) மேல் எரிகாயங்களுக்கு உட்பட்டால் "ஆளின்ர நிலைமை அவ்வளவு சரியில்லை" என்று வைத்திய வட்டாரம் கூறும். அதாவது 40% க்கு மேல் எரிந்தவர் இறந்தே போவார் என்பதல்ல. மாறாக, இந்த நிலையில் உயிர் பிழைப்பது கஷ்டம் என்பதையே 'நிலைமை கொஞ்சம் சரியில்லை' போன்ற வார்த்தைகள் உணர்த்தும் உண்மையாகும்.

இவளைப் பொறுத்தவரையில் எரிகாயங்கள் 100க்கு 95வீதம் என்று வைத்திய அறிக்கையைப் பார்க்காமலே கணித்துவிடலாம். எப்படி உயிர்தப்புவாள்? அப்படித் தப்பினாலும் அவளின் நிலை என்ன? என்னையே நான் கேட்டுக்கொண்டேன்.

அதனைத்தான் அப்பெண்மணியும் சொன்னாள்: "டொக்ரர்... என்னை தப்பவிடாமல் கொன்றால், ஓர் உண்மையைக் கூறுவேன்!...." அவளின் வார்த்தையில் அதிர்ந்துபோய் நின்றுகொண்டிருந்தவர்கள் மௌனமாகி னோம். அவள் நினைத்தாள் போல "மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி" என்று!..... அதனால், உண்மையைச் சொல்லத் துணிந்தாள் என எண்ணத் தோன்றுகிறது.

"என் கணவர் மிக நல்லவர். நாங்கள் சந்தோஷ மாகத்தான் இருந்தோம்..." "அப்ப, ஏன் இப்படிச் செய்தாய்? உனக்கு என்ன விசரா?" என கேட்க வேண்டும்போல இருந்தது. அதற்கு நேரம் தராமல் அவள் தொடர்ந்தாள். "நான் சீதனம் இல்லாம கலியாணம் செய்ததால என்ர மாமனார் என்னை அடிக்கடி அடித்துத் துன்புறுத்துவார். என்னுடைய பெற்றோரும் வன்னியில... வீட்ட விட்டுட்டு ஓடுவம் எண்டாலும் வெட்கம்.... வேறாக போவம் எண்டாலும் புருஷனுக்கு மரியாதையில்ல... எனக்கு இனிமேலும், இதற்குமேல் வாழ விருப்பமில்லை... அதனாலதான் இப்படி செய்தன்!...." என விம்மினாள்.

"அந்த நேரத்தில்தானும் உன்ர மனிசன், பிள்ளைகள நினைகேலையா?...!.." என்று கூடநின்ற ஒருவர் குறுக்கிட, "நினைச்சிருந்தா இப்பிடி செய்திருக்க மாட்டேனே!...!....!..." என விம்மி....விம்மி... விழிநீர் சொரிந்தாள்.

இவ்வேளையில், உங்களிடம் ஒன்றைக் கேட்கட்டுமா?....

* உங்களைத்தான் கேட்கிறன்!....
கெஞ்சிக் கேட்கிறன்!...
கும்பிட்டுக் கேட்கிறன்!...
இவள்(ன்)களை
வாழ விடுங்களேன்!....!....!....

அதேவேளை இவளைப் போன்றவர்களிடம் ஒன்றைக் கூறட்டுமா?...

* உடனடித் தீர்மானங்களால் ஏற்படும் தூண்டுதல்களுக்கு இசைவாக ஒருபோதும் செயற்படாதிருக்க மனவுறுதி கொள்வோமா?

* முரண்பாடுகளுக்கும், சிக்கல்களுக்கும் முகங்கொடுக்க முடியாத வேளையில் நம்பிக்கைக்குரிய யாருடனாவது பேசுகின்றோமா?

* வழிகாட்டக்கூடிய (உளவள) உதவியாளர்களை நாடுகின்றோமா?

* பிரச்சினைகள் எழுகின்றபோது குறுக்கு வழிகளை நாடாமல், கோழைத்தனமாக நடந்து கொள்ளாமல், என்னவந்தாலும் ஏதுற்றாலும் துணிவோடு முன்செல்வேன் என்ற மனமுதிர்ச்சியைப் பெறுவோமா?

சுற்றத்தவர்களுக்கும், இவளைப் போன்றவர்களின் சொந்தக்காரர்களுக்கும் ஒன்றைச் சொல்லி வைக்கட்டுமா?

* பிரச்சினைகள் ஏற்படும்போது வெருட்டுவதற்காகவோ அல்லது விளையாட்டாகவோ தானும் மண்ணெண்ணெய் நெருப்புப் பற்றிப் பேசுகின்றவர்கள், அவற்றோடு சகவாசம் கொள்ள விரும்புபவர்கள் மட்டில் அக்கறையோடு செயற்படுவோம்.

எரியும் சமூகத்தில்
எண்ணையய் வார்க்காமல்
'எரியும்' கலாசாரத்தை
இல்லாது ஒழிப்போம்.

நான்
பங்குனி - சித்திரை, 2002

# 7. வைத்தியசாலை ஆன்மகுருவின் பணி விரிவாக்கப்படுகிறது

## அன்புராசா அடிகளாருடன் ஒரு நேர்காணல்

பேட்டி கண்டவர் T. கண்ணன்

**கேள்வி : யாழ். போதனா வைத்தியசாலையின் ஆன்மீக குருவாகப் பணிபுரிகின்றீர்கள். இப்பணி பற்றி மக்கள் அறிந்து கொள்ளும் விதமாக உங்கள் அனுபவங்களை, பாதுகாவலன் பத்திரிகை ஊடாகப் பகிர்ந்து கொள்வீர்களா?**

பதில் : நிச்சயமாக, எனது சிறிய இவ் அனுபவத்தை உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். 1972ஆம் ஆண்டு இச்சிற்றாலயத்தை யாழ். அடைக்கல அன்னை ஆலய பங்குத் தந்தையாக இருந்த தேவதாசன் அடிகள், ஆயரின் உதவியுடன் உருவாக்கினார்.

இக்காலப் பகுதியில் வைத்தியசாலையின் சிற்றாலய ஆன்ம குருவின் பணியினை யாழ். அடைக்கல அன்னையின் ஆலய பங்குக் குருவே கவனித்துக் கொண்டிருந்தார். எனினும், இப்பணியின் தேவை, காலம் செல்லச் செல்ல, பரந்து விரிந்ததாகவே அமைந்தது. தேவைகளும் அதிகரித்தன.

**கேள்வி : இந்தப் பணி அமலமரித் தியாகிகளிடம் கைமாறப்பட்டது எப்போது என்பது பற்றிச் சற்றுக் கூறுவீர்களா?**

பதில் : அருள்திரு தேவதாசன் அடிகளைத் தொடர்ந்து 1979ஆம் ஆண்டு அமலமரித் தியாகிகளினுடைய பணி வைத்தியசாலையில் ஆரம்பமாகியது. தேவை எங்கோ அங்கே சேவை என்ற மனநிலையில் அருள்திரு. டானியல் அ.ம.தி. அடிகளார் வைத்தியசாலையின் முதல் முழுநேர ஆன்ம குருவாகப் பணிபுரிய முன்வந்தார். இவரின் பணி 1979ஆம் ஆண்டு ஆனி மாதம் முதல் 1987ஆம் ஆண்டு ஆவணி வரை சுமார் 8 வருடங்கள் நீடித்தது. இவருடைய காலப்பகுதியிலேயே இச்சிற்றாலயம் புனரமைக்கப்பட்டது. 1979ஆம் ஆண்டில் இப்பணியை ஏற்று, இற்றைவரை சுமார் 21 ஆண்டுகளாகத் தொடர்ந்து அமலமரித் தியாகிகளே வைத்தியசாலையின் ஆன்மகுருக்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள்.

**கேள்வி : 21 ஆண்டுகள் மிக நீண்டகாலம். அக்காலப் பகுதியில் ஆன்ம குருக்களாக யார் யாரெல்லாம் பணியாற்றினார்கள் என்று கூறமுடியுமா?**

பதில் : நிச்சயமாக அது என் கடமையும் கூட. அருள்தந்தையர்களான டானியல், அ.ம.தி., ஜீவேந்திராபோல் அ.ம.தி., செபஸ்ரியன் அ.ம.தி., எட்மன் றெறினோல்ட் அ.ம.தி.,

ஸ்ரனிஸ்லோஸ் அ.ம.தி., யோகராசா அ.ம.தி. ஆகியோர் இந்த 21 ஆண்டுகளில் பணிபுரிந்தவர்களாவர்.

இவர்களோடு இணைந்து பல ஆண்டுகளாக உழைத்தவர்களில் திரு. எட்வேட் குடும்பத்தினர், திருமதி பொன்னுக்கோன் (ஓய்வு பெற்ற தாதி), திருமதி உடையார் (தாதி), திரு. ஜேக்கப் (தாதி), திருமதி. மேரி மாக்கிரட் போன்றோரை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென எண்ணுகின்றேன்.

**கேள்வி : சிற்றாலய வரலாற்றினைச் சுருக்கமாகக் கூறினீர்கள். தற்போது, சிற்றாலயம் புதுப்பொலிவுடன் மட்டுமல்லாது இப்பணியினை எதிர்காலப் பார்வையுடன் நீங்கள் சிந்தித்துச் செயல்வடிவம் கொடுக்க முனைவதாகத் தோன்றுகிறது. இது பற்றி.........?**

பதில் : பல ஆண்டுகளாக இங்கு ஆன்ம குருக்களாக இருந்தவர்கள் கண்ட கனவே இப்போது நனவாகி இருக்கிறது. ஏனென்றால், ஆலய ஆராதனைகளோடு மட்டும் நின்றுவிட்டால், எமது வைத்தியசாலைப் பணி முழுமை பெறமுடியாது, பெறவும் கூடாது. மாறாக நோயாளர்களை, நோயாளர்களுக்குப் பணிபுரிபவர்களைப் பராமரிப்பவர்களைத் தொடுகின்ற, இவர்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற பணியாகப் பரிணமிக்கவே ஆத்மீக சமூக உளநலப் பணியகம் ஒன்றை உருவாக்க நீண்ட காலமாக நாங்கள் சிந்தித்துக் கொண்டிருந்தோம். அதன் செயல்வடிவம்தான் சிற்றாலயத்தோடு இணைந்த இப்பணியகம் ஆகும்.

**கேள்வி : இப்பணியகம் எவ்வித பணிகளையெல்லாம் ஆற்றத் திட்டமிட்டிருக்கிறது என்பதை விளக்கிச் சொல்லுவீர்களா?**

பதில் : *நோயாளிகளையும் வைத்தியசாலையில் பல தரப்பட்ட நிலைகளில் பணிபுரிபவர்களையும் சந்தித்தல்.

* வைத்தியசாலை சந்திப்புக்களை ஊக்குவிக்க பொதுநிலையினரை ஒன்று கூட்டல்.

* வைத்தியாலையில் பணிபுரிபவர்களுக்கு மாதாந்த ஒன்று கூடலை ஒழுங்கு செய்தல்.

* தேவை ஏற்படுகின்ற வேளைகளில் ஆன்மகுரு தங்கிச் செல்லல்.

* புதுப்பித்தல் பயிற்சி நெறிகளையும், கருத்தரங்குகளையும் காலத்துக்குக் காலம் ஒழுங்கு செய்தல்.

* இவற்றோடு இன்னும் பல பணிகளை இப்பணியகம் தேவை ஏற்படும்போது தன்னோடு இணைத்துக் கொள்ளும் என்பது எனது நம்பிக்கை.

**கேள்வி : இன்றைய காலத்தில் அதுவும் ஒரு போர்ச் சூழலில் துணிந்து கட்டடப் பணிகளில் இறங்கியுள்ளீர்கள். இப்பணிக்கான பணம் மற்றும் உதவிகளையும் எப்படிப் பெற்றுக் கொண்டீர்கள்?**

பதில் : நல்ல கேள்வி. பல நல்ல உள்ளங்களின் முயற்சியும், பிரயாசையும், தியாகமும்தான் இங்கு வழிவகுத்தன. குறிப்பாக இம் முயற்சிக்கு உதவி மட்டுமல்லாது ஊக்கமும், உற்சாகமும் தருகின்ற அமலமரித் தியாகிகள் குடும்பத்திற்கும், யாழ். மாகாணத்தின் அ.ம.தி. முதல்வர் அருள்திரு. ஜீவேந்திராபோல் அ.ம.தி. அவர்களுக்கும் நன்றி கூற வேண்டும். எமது தேவை உணர்ந்து உதவி புரிகின்ற முன்னாள் வைத்தியசாலை ஆன்ம குருவும், பிரான்சு - இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக ஆன்மகுருவுமான அருள்திரு. செபஸ்ரியன் அ.ம.தி. அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இலைமறை காய்களாக என்னுடன் தோளோடு தோள்நின்று பல வழிகளில் உழைக்கின்றவர்களையும் பாராட்டுகின்றேன்.

கேள்வி : வைத்தியசாலைச் சிற்றாலய ஆன்மீக குரு என்ற வகையில் உங்கள் பணி யார் யாரைச் சென்றடைகிறது? எப்படியான மக்களைச் சந்தித்திருக் கிறீர்கள்?

பதில் : ஓர் இறையியல் அறிஞர் கூறுவதுபோல இரண்டு வகையான கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். ஒன்று ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்தவர்கள் என்ற பெயரைக் கொண்டு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்பவர்கள். இரண்டாவது வகையினர், கிறிஸ்தவர்கள் என்று பெயரிடப்படாமல், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்பவர்கள். கத்தோலிக்க இறைமக்களுக்காக ஆன்மகுருவாகப் பணிபுரிய அனுப்பப்பட்டாலும், இப்பணியினுடைய பண்பும் தன்மையும் அதிலும் சிறப்பாக இப்போர்க் காலச் சூழலில் உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்டு, சோர்ந்துபோன, நொந்துபோன, காயப்பட்ட, வேதனைப்படுகின்ற பலரை இப்பணியினூடாகத் தொடக்கூடியதாக இருக்கின்றது. காரணம், மனிதனை மனிதத்துவத்தையும் வாழவைக்கவே இறைமகன் இயேசு பணி புரிந்தார்.

கேள்வி : ஒட்டு மொத்தமாக உங்கள் பணிபற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில் : உடைந்துபோன உள்ளத்துக்கு உற்சாகத்தையும், வேதனைப் படுகின்ற இதயங்களுக்கு தேற்றரவையும், அழுகிறவர்களுக்கு ஆறுதலையும், கஷ்டப்படுகின்றவர்களுக்கு ஆதரவையும், விரக்தியுற்ற மனங்களுக்கு வாழ்வில் நம்பிக்கையையும் கொடுக்கின்ற பணியாக அமைகின்றது.

பாதுகாவலன்
03.09.2000

REPORT FROM

# 8. OUR HOSPITAL CHAPLAIN

## A. The present Situation in the Hospital:

The Jaffna Teaching Hospital being the only General Civil Hospital in the whole of Peninsula hundreds of patients flock there daily for treatment. For instance a General Physician in the OPD treats more than a hundred and fifty patients. The present war in the North continues to affect our people severely and makes them more and more sick. However much I labour to care for the welfare of the patients, I see two major burning problems still prevalent, i.e. shortage of medical staff and medicine and related items. This remains a continuous difficulty to provide satisfactory medical care to the patients. The Hospital Authorities always depend on the I.C.R.C even for the limited medical supplies. The ICRC Ship that transports patients and medical items is not regular due to many reasons such as unfavorable weather, Security problems etc.

## B. Ministry of Chaplaincy

We the Oblates took up the Hospital Chaplaincy in Jaffna almost twenty Five Years ago. As you know already, we are continuing this

ministry amidst many challenges and difficulties. At present, the situation in the peninsula has become very crucial. There was only a tiny block at the Chaplaincy that could cater to the ministers and to the patients. With the intention of developing and extending our ministry beyond mere administering of the Sacraments to the patients, We became more conscious of the need for a WHOLISTIC APOSTOLATE, i.e. to concentrate on the totality of the persons.

## C. Longstanding desire is fulfilled

After much hard work, a Center for a Socio, Psycho and Spiritual ministry was constructed and our dream has become a reality. As reported already in the last issue of Yazha Thoni, we have a block now where we can organize our ministry to cater to the newly emerged needs of the affected. I should appreciate Fr. Provincial, Fr. S. Maria Sebastian, the Chaplain for the Sri Lankan Tamils in France and the Oblate Family who were behind this project. I am happy to share with you that it already serves its purpose.

## D. My joy of serving among the poor

I have been working as the Hospital Chaplain for the last two and a half years. I would say that it is very easy to be a Hospital Chaplain nominally but it is a tough task to fulfill the actual demands of this ministry. It is really a challenge in today's context of war and destruction where the basic human rights and dignity of our people are not respected. Still for all I am happy with my apostolate as it is the very need of the Hour of our people and expression of our Oblate charism. I am still happy to say that because of the Oblate Family around and with the help of the many generous people in the Hospital, my work remains fruitful, meaningful and joyful.

Yazha Thoni
January - March, 2001

## 9. ஆஸ்பத்திரியில் கண்காட்சியாம் "வாங்க பார்க்கலாம்"

எத்தனையோ கண்காட்சிகள் நடைபெறுகின்றன. அவற்றில் பலவற்றைப் பார்த்த அனுபவம் உண்டு. அது ஏற்படுத்துகின்ற தாக்கம் அலாதியானது. கல்விக் கண்காட்சி, புகைப்படக் கண்காட்சி, புத்தகக் கண்காட்சி, ஓவியக் கண்காட்சி, கைப்பொருள் கண்காட்சி என்ற தொடரில் அண்மையில் யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் நீண்ட காலத்தின் பின்னர் நடந்தேறிய வர்த்தகக் கண்காட்சியைப் பார்க்காதவர்கள் இல்லையென்றே கூறலாம்.

யாழ்ப்பாணத்தில் "யாழ். வர்த்தக சந்தை" (Jaffna Trade Fair) என்ற பெயரில் இடம்பெற்றது. பல கம்பனிகள் சேர்ந்து பலநூறு இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்கள்

காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன. இந்நிகழ் வானது மக்களினுடைய வாழ்க்கைத் தரத்திலும், ஏன் வாழ்க்கை முறையிலும் கூட பல மாற்றங்களை ஏற்படுத்த எத்தனித்தன; ஏன் ஏற்படுத்தின என்றே கூறலாம்.

இப்படியான ஒரு வகைக்காட்சி வைத்தியசாலைகளில் தினமும் நடைபெறுகின்றது. அதை ஏன் மக்கள் பார்க்கத் தூண்டக்கூடாது என்ற எண்ணம் என்னுள் ஏற்பட்டது. நிச்சயமாக இதற்கான பெயர் கண்காட்சி என அமையாமல் "காயக் காட்சி" அல்லது "நோய்வாய்க் காட்சி" அல்லது "ஆஸ்பத்திரிக் காட்சி" என்ற பெயர்களில்தான் அழைக்கலாம். ஏனெனில் இப்படியான "வைத்தியசாலைக் காட்சிகள்" மிகுந்த பலனைத் தரும் என்பது வைத்தியசாலையுடனான எனது நெருங்கிய தொடர்பிலான அனுபவத்தில் இருந்து கூறக்கூடியதாக இருக்கின்றது.

எப்படி என்று கேட்கிறீர்களா? இதோ நான் பார்த்த "ஆஸ்பத்திரிக்காட்சி" களில் இருந்து சில காட்சிகள்.

☞ "ஐயோ... இப்படி கால் முறியுமெண்டா மோட்ட சைக்கிளைத் தொட்டிருக்க மாட்டேனே அல்லது மெதுவா எண்டாலும் ஓடியிருப்பேனே..."

⇨ இக்காட்சியைப் பார்த்தால் விபத்துக்கள் குறைய வழி ஏற்படாதா?

☞ "ஐயையோ......இப்படி வேதனப்பட்டு சாவனெண்டா மண்ணெண்ணை ஊத்தி கொளுத்தி இருக்கமாட்டேனே. ......"

⇨ இக்காட்சியைக் கண்டிருந்தால்: மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தி அவல மரணமாகும் "கலாசாரம்" மாற்றமடையாதா?

☞ "இப்படி வயிறு எரியுமெண்டா அலரிக்கொட்ட சாப்பிட்டிருக்க மாட்டேனே....?

⇨ இக்காட்சி: தற்கொலை புரியும் சம்பவங்களைத் தடுக்காதா?

☞ "இப்படி நோவும் வேதனையுமெண்டா குடியை எப்பவோ விட்டிருப்பேனே........"

⇨ இக்காட்சி: ஒரு சிலரையாவது குடியிலிருந்து காப்பாற்றாதா?

☞ "இப்படி ஊசி போடுவாங்கள் எண்டு தெரிஞ்சா மரத்தில ஏறி விளையாடியிருக்க மாட்டேனே......"

⇨ இக்காட்சி: வீண் வேதனைகளை விலக்காதா?

☞ "நானே என் உயிரை (சிசுவை) அழிச்சுப்போட்டேனே......."

⇨ இக்காட்சி: ஊமைகளாக்கப்பட்ட சில உயிர்களையாவது வாழவைக்காதா?

☞ "இப்படி மிதிவெடியில கால் போகுமெண்டா தேங்காய் ஆயப்போயிருக்க மாட்டோமே....."

⇨ இக்காட்சி: இன்றைய இளைய சந்ததியில் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கையில் கொஞ்சமென்றாலும் குறைந்திருக்காதா?

☞ "இப்படி வெடிக்குமெண்டா குத்தியிருக்க (மர்ம பொருள்) மாட்டேனே....."

⇨ இக்காட்சி: அநியாய ஆபத்துக்களையும் மரணங்களையும் ஓரளவிற்கேனும் தவிர்க்காதா?

☞ "இப்படி நடக்குமெண்டால் (காய்ச்சல், காயம், பிறசர், இன்னும்பல வருத்தங்கள்) வைச்சுக்கொண்டு இருந்திருக்க மாட்டோமே..."

⇨ இக்காட்சி: ஒருவருக்கு ஏற்பட்ட நோய் மட்டில் அலட்சியப் போக்கை நிவர்த்தி செய்யாதா?

☞ "இவன்(ள்) பாவி மாறிக் குளிகையைத் தந்து என்னைக் கொண்டுபோடுவான்(ள்) போல கிடக்கு..."

⇨ இக்காட்சி: நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பவர் கொள்ளும் அக்கறையைக் கூட்டாதா?

நிறைவாக, மேலே கூறப்பட்ட ஆஸ்பத்திரிக் காட்சிகளோடு, இன்னும் பல காட்சிகள் ஒவ்வொருநாளும் இருபத்து நான்கு மணி நேரமும் ஆஸ்பத்திரியில் ஆயத்தமாகவே இருக்கின்றன. பார்வைக்கு, காலை, மதியம், மாலை என மூன்று நேரங்களில் திறந்து விடப்பட்டிருக்கின்றன. ஆக, பல பருவங்களிலும், தரங்களிலும், துறைகளிலும் உள்ள பொதுமக்களாகிய அனைவரும் பார்ப்பதன் வழியாக அவர்கள் வாழ்க்கை முறையில் நல்ல திருப்பங்கள் ஏற்பட்டு வாழ்வு சிறக்கும் என்பது உறுதி.

நினைவில் நிற்க :

| | |
|---|---|
| கண்காட்சிப் பொருள் | - "ஆஸ்பத்திரிக் கண்காட்சி" |
| இடம் | - வைத்தியசாலை |
| காலம் | - Daily யாக (ஒவ்வொரு நாளும்) |
| நேரம் | - காலை, மதியம், மாலை |
| வயது | - அனைவரும் அனுமதிக்கப்படுவர் |
| பிரவேசம் | - சும்மா (இலவசம்) |
| பயன் | - பல வேதனைகளைத் தவிர்க்கலாம்; ஆபத்துக்களைக் குறைக்கலாம். |

**நீங்களும் பாருங்கள் உங்கள்**
**நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்**
**எங்களுக்கும் அறியத் தாருங்கள்.**

**நான்**
**கார்த்திகை ~ மார்கழி, 2002**

# நேர்காணல்

**கேள்வி: தந்தை அவர்களே, நீங்கள் கடந்த நான்கு வருட காலமாக வைத்தியசாலையில் செய்து வருகின்ற ஆன்மீகப் பணி பற்றியும், அங்கு எவ்வாறான பணிகள் உள்ளன என்பது பற்றியும் கொஞ்சம் சொல்லுங்கள்?**

பதில்: யாழ் போதனா வைத்தியசாலையில் ஆன்ம குருவாகப் பணிபுரிகின்ற எனக்குப் பல பணிகள் காத்திருக்கின்றன. அந்த வகையில் நோயாளர்களைச் சந்திக்கின்ற பணி முதன்மையாக இருக்கின்றது. இந்தப் போர் இப்போது இல்லாதிருந்தாலும் சற்றுக் குறைந்திருந்தாலும், அந்தப் போரின் பின்பதாக இருக்கின்ற போரின் வடுக்களாலே (Post War Effects) உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுடைய விகிதாசாரம் அல்லது எண்ணிக்கை மிகக் கூடுதலாக இருக்கின்றது. அந்த வகையிலே உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டு வருகின்ற நோயாளர்களையும், அதேவேளை இவர்களைப் பராமரிக்கின்ற உத்தியோகஸ்தர்களையும் குறிப்பாக தாதியர்கள், வைத்தியர்கள் ஏனைய பணியாளர் களையும் பொறுத்தவரை அவர்களுக்கு ஆன்ம வலுவூட்டல் தேவைப்படுகின்றது. அதாவது நோயாளர்களுக்கு நான் பணி செய்து வந்தாலும், அவர்களுக்குச் சிகிச்சையளிப்பவர்களுக்கும் அவர்களைப் பராமரிக்கின்றவர்களுக்கும் எனது பணி தேவைப் படுகின்றது என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

கேள்வி: அப்படியென்றால் எந்த வகையில் நோயாளர்களைப் பராமரிக்கின்றவர்களுக்கு உங்கள் பணி அமைகின்றது?

பதில்: வைத்தியசாலையில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கும், ஏனைய பொதுநிலையினர்களுக்கும் மாதாந்த ஒன்றுகூடலை ஒழுங்குசெய்து மாதாமாதம் புதுப்பித்தல் கருத்து நெறிகளையும், பயிற்சிகளையும் ஒழுங்கு செய்கின்றேன். மாதத்துக்கு ஒரு தடவையாவது உளவளர்ச்சியைக் கொடுக்கக் கூடிய கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து அவர்களின் பணிக்கு வலுவூட்டி வருகின்றேன்.

கேள்வி: உங்களால் முழுமையாக இந்தப் பணிகளைச் செய்யக் கூடியதாக உள்ளதா? வேறு யாரிடமாவது உதவி பெறுகின்றீர்களா?

பதில்: நான் செய்வது பெரிய கெட்டித்தனமல்ல. மாறாக இந்தப் பணிகளிலே பலரை ஈடுபடுத்துவது மிகப் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் நான் இல்லாத வேளைகளிலே எனது பணியில் தொடர்ச்சி அங்கு இருக்காது. எல்லாம் என்னிலே தங்கியிருக்க வேண்டும் என்றால், பணியில் தொடர்ச்சியும் இருக்காது, பணியினது வளர்ச்சியும் முற்றுப்பெறாது, பணியின் முதிர்ச்சி நிலையாகவும் அமையாது. எனவேதான் நான் என்னோடு பலரை இணைத்துக் கொள்ளுகின்றேன். உதாரணமாக, அருள்சகோதரி, வைத்தியசாலையில் பணிபுரிகின்ற பணியாளர்கள், பங்குகளிலே இருக்கின்ற பக்திச் சபையினர், மரியாயின் சேவையினர், பல்கலைக்கழக மாணவர்கள், அருட்சகோதரர்கள் ஊடாக வைத்தியசாலைச் சந்திப்புகளைக் கூடுதலாகச் செய்யக் கூடியதாக உள்ளது. தனியாக நோயாளர்களின் துன்பத்தைக் கேட்கவோ, அல்லது அவர்களோடு கூட இருக்கவோ மட்டுமல்ல, கஷ்டங்கள் மத்தியிலே வருகின்றவர்களுக்குச் சில பொருளாதார உதவிகளையும் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். இவ்வுதவிகளை கியூடெக், வின்சன்ற் டி போல் சபையினர், மற்றும் தனிப்பட்டவர்களின் உதவியும் எமக்குக் கிடைக்கிறது.

ஏனென்று சொன்னால் இந்தக்கால கட்டத்திலே, கைவிடப்பட்டவர்களாக, அநாதைகளாக, பராமரிக்க யாரும் இல்லாதவர்களாக, பிள்ளைகளாலே, குடும்பங்களாலே பாதிக்கப்பட்டவர்களாகப் பலர் வைத்திய சாலைக்கு வந்து கொண்டு இருக்கின்றார்கள். இவர்களுக்கு ஓரளவேனும் எங்களால் முடிந்த உதவிகளைச் செய்யக்கூடியதாக உள்ளது.

**கேள்வி: வைத்தியசாலையில் போதிய வசதிகள் இருப்பதாக உணர்கின்றீர்களா?**

பதில்: நான் நினைக்கின்றேன், தென் பகுதியில் இருக்கும் ஏனைய வைத்தியசாலைகள்போல் எமது வைத்தியசாலையில் வசதிகள் நிச்சயமாக இல்லை. இப்போதுதான் ஓரளவு போரின் அழுத்தங்கள் சற்றுத் தணிந்து அமைதிநிலை ஏற்படுகின்ற நம்பிக்கையில் நாம் இருக்கின்றோம். அந்தவகையில் மருந்துத் தட்டுப்பாடுகள், மருந்துத் தடைகள் எல்லாம் நீக்கப்பட்டு மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் வரத் தொடங்குகின்றன. பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

வைத்தியசாலையில் இருக்கின்ற தேவைகளோடு ஒப்பிடும்போது, வைத்தியர்களுக்கான பற்றாக்குறையும், தாதியர்களுக்கான பற்றாக்குறையும் இங்கு கூடுதலாக இருப்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கின்றேன். ஏனென்றால் இப்போதெல்லாம் தமது படிப்புக்களை முடித்துக்கொண்டு நாட்டுநிலை, குடும்ப நிலை என்றும் தென்பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்கும் செல்லுகின்ற வர்களாகவே அனேகமான வைத்தியர்கள் இருப்பதினாலேயே எமது பகுதிகளிலே இருந்து சேவைபுரிய அழைக்கப் படுகின்றவர்கள் வெவ்வேறு இடங்களுக்கும் செல்வதினாலேயே இங்கு பற்றாக்குறை நிலவுகிறது. குறிப்பாக மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வேலைபார்க்க அவர்கள் ஏதோ ஒரு வகையிலே பின்னடிப் பதனாலே இந்தப் பற்றாக்குறை தொடர்ந்த வண்ணமாய் உள்ளது.

**கேள்வி: புதிய அரசினால் வருகின்ற ஒரு நல்ல சூழலில் யாழ். வைத்தியசாலையில் உள்ள மருந்துகள், ஏனைய நிலைமைகள் முன்னேற வாய்ப்புகள் உண்டா?**

பதில்: நிச்சயமாக வாய்ப்புக்கள் உண்டு. மருத்துவத் தடைகள் நீக்கப்பட்டு இருப்பதினால் போதிய மருந்துகளும், மருத்துவ உபகரணங்களும் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்படும். அத்தோடு, ஏனைய பகுதிகளில் இருந்து மருத்துவர்களும் ஏனைய ஊழியர்களும் இங்கு வந்து வேலைசெய்ய வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன. இவற்றிற்கு வருகின்ற காலம்தான் பதில் சொல்லும்.

**கேள்வி: தற்போது எவ்வாறான நோய்களோடு நோயாளர்கள் வருகின்றார்கள்?**

பதில்: நான் முன்பு குறிப்பிட்டது போன்று, போர்க்காலத்திலும் பார்க்க, போர் தணிந்துள்ள இக்காலத்தில், போரினுடைய வடுக்களும், அதனது உண்மையான தாக்கங்களையும், அழுத்தங்களையும் இப்போது அதிகமாகப் பார்க்கக்கூடியதாக உள்ளது. இப்போதுதான் அவர்கள் பல உடல், உள வருத்தங்கள் பற்றியும் அதன் காரணங்கள் பற்றியும் சிந்திக்கத் தொடங்குகின்றார்கள். உண்மையில் போரின் தாக்கம் எந்தளவுக்கு இருக்கின்றது என்று எங்களால் ஊகிக்கக்கூடியதாக உள்ளது. பெண்கள், குழந்தைகள் இந்தப் போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். சிறுவர் துஸ்பிரயோகம், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் துன்பங்கள் என்று இன்று பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றோம்.

கசிப்பு பாவிப்பதன் வழியாக உடல் நோய்களாலே அனுமதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை மிகக் கூடுதலாக உள்ளது. இதற்கும் போர்க்காலச் சூழல் துணை செய்தது எனலாம். அடுத்து வீதி விபத்துக்களாலே காயங்களுக்கும், படுகாயங்களுக்கும் உள்ளாகி அனுமதிக் கப்படுகின்றனர். இன்னும் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையும் சுமாராக இருப்பதையும் நாம் பார்க்கலாம். இங்கு ஒன்றைக் கூறியே ஆக வேண்டும். தற்பொழுது கூடுதலாக அனுமதிக்கப்படுகின்றவர்கள் யாரென்றால் வெட்டுக் கொத்துக் காயங்களுக்கு, அதாவது குடும்ப, கிராமச் சண்டைகளினால், காயப்படுகின்றவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதை அவதானிக்கலாம்.

இவற்றை அவதானித்து சிறு ஆய்வை மேற்கொண்ட வேளையிலே, இந்த உண்மையைக் கண்டுகொள்ளக்கூடியதாக இருந்தது. அதாவது கிட்டத்தட்ட வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுபவர்களில் 1/4 பங்குக்கு அதிகமானவர்கள் இப்படியான அனாவசியமான சண்டைகளில் வெட்டுக் கொத்துப்பட்டு, அடிபட்டு, காயப்பட்டு, முறிபட்டு வருபவர்களாகவே இருக்கின்றனர்.

**கேள்வி: பாலியல் துஷ்பிரயோகத்தாலும், சிறுவர் துஷ்பிரயோகத்தாலும் பலர் வைத்தியசாலைக்கு வருவதாகக் கேள்விப்படுகின்றோம். அவர்களைப் பொறுத்தவரை உங்கள் பணி எவ்வாறு இருக்கின்றது?**

பதில்: எங்களுடைய சமுதாயத்தைப் பொறுத்தவரை, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று இந்தப் பாலியல் துஷ்பிரயோகத்தால் சிறுவர்களும், பெண்களும் பல தாக்கங்களுக்கும், பாதிப்புக்களுக்கும் உள்ளாகியுள்ளனர். எமது சமூகத்தினால் இழைக்கப்படுவது ஒருபுறமிருக்க, இராணுவ கெடுபிடிகளாலும், அதேவேளை இராணுவ கெடுபிடிகள் அதிகமில்லாதபோதும், அவை சத்தமில்லாத முறையிலும் நடப்பதை இங்குகூற வேண்டியுள்ளஃது. அதேவேளை இந்த சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்ற வர்களுக்கு உளவளத்துணை வழங்கப்படுகின்றது. அத்துடன் சிறுவர் உரிமைகளின் மட்டில் செயற்பட District Child Protection Committy என்று யாழ். மாவட்டத்தில் இயங்கிவருகின்றது. சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களின் எதிர்காலத்தில் நம்பிக்கையை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**கேள்வி: அண்மையில் வீதி விபத்துக்கள் பற்றி உதயன் பத்திரிகையில் உங்கள் கட்டுரை ஒன்றை வாசித்தேன். அது எமது மக்களுக்குப் பெரிதும் உதவியளிக்கும் என்று நினைக்கின்றேன். இவ்வாறான பல விடயங்களை மக்கள் அறிந்து கொள்ள நீங்கள் அவற்றை வெளிக்கொண்டுவர வேண்டும். ஆனாலும் இன்னும் அதிக வீதி விபத்துக்கள் நடக்கின்றன. அவற்றிற்கு உங்கள் அறிவுரை எதுவாக இருக்கும்?**

பதில்: வீதி விபத்துக்களைக் குறைக்க வீதிகள் உடனடியாகத் திருத்தப்பட்டு படிப்படியாகப் பெரிதாக்கப்பட வேண்டும். நகரப் பகுதிகளுக்குள் வேகக்கட்டுப்பாடு அமுல் செய்யப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக வாகனம் செலுத்துபவர்களும் பாதசாரிகளும் வீதிகளில் கொஞ்சம் பிறர் நலத்தோடு செயற்படுவது அநேக வீதி விபத்துக்களைத் தவிர்க்கும். அடுத்து உதயன், பாதுகாவலன் பத்திரிகைகளிலும் நான் உளவியல் சஞ்சிகையிலும் எனது வைத்தியசாலை அனுபவங் களை, உண்மையான சம்பவங்களை ஓர் உளவியல், சமூக பார்வையில், அதேவேளை ஓர் ஆன்மீகக் கண்ணோட்டத் திலே சமூகத்தை விழித்து அந்தப் பிரச்சனைகளை பார்க்கக்கூடிய நோக்கில் அவற்றை மக்களுக்கு அறியக் கொடுப்பது நன்மை பயக்கும் என எண்ணினேன். தற்கொலை செய்பவர்களையும் அவர்கள் படும் துன்பங்களையும் பார்த்து நான் கண்ணிர் வடித்த சந்தர்ப்பங்கள் உண்டு. தற்கொலை குறிப்பாக, தங்களுக்குத் தாங்களே நெருப்பூட்டி அவஸ்தைப் படுபவர்களே மிக மோசமாகத் துன்பப்படுபவர்களும், மரணமடைபவர்களும் ஆவர். ஆகவே இந்தநிலை மீண்டும் யாருக்கும் வரக்கூடாது என்ற நோக்குடனேயே அதைப்பற்றி பல தடவைகள் எழுதியுள்ளேன்.

**கேள்வி: உங்கள் மனதை மிகவும் வேதனைப் படுத்திய, நீங்கள் சந்தித்த தற்கொலைச் சம்பவம் ஒன்றை உங்களால் பகிர்ந்து கொள்ளமுடியுமா?**

பதில்: பல சம்பவங்கள் இருக்கின்றன. முதலில் நினைவுக்கு வந்த ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். 2001 வைகாசி மாதம் இறுதிப்பகுதியில் கணவனை இழந்த ஓர் இளம்பெண். 11 வயதுடைய ஒரு மகனுடைய தாய். தனக்குத்தானே எரியூட்டிய சம்பவம் எனது உள்ளத்தை எப்போதும் குத்திக்கொண்டே இருக் கின்றது. இது பற்றி "நான்" உளவியல் சஞ்சிகையில் (புரட்டாதி - ஐப்பசி 2001) "ஆத்மாவின் சத்தம் - ஒரு தற்கொலைக் கொடூரம்" என்ற தலைப்பில் எழுதியுள்ளேன். தனக்குத்தானே எரியூட்டினாலும், இறப்பின் இறுதிக்கட்டத்திலும் தன் மகனுக்காக வாழத்துடித்த தாயினுடைய உரையாடலும், "எப்ப வீட்டிற்கு வருவீங்க அம்மா?" என்ற மகனுடைய ஏக்க இரங்கலும் என்னோடு சூழ்ந்திருந்த பலரை, கண்ணீர் வடிக்கச் செய்த பரிதாபக் காட்சியை என்னால் மறக்கமுடியாது.

கேள்வி: குடிவெறியினாலும் தற்கொலை முயற்சியினாலும் சண்டைபிடித்து காயப்பட்டு வருகின்ற காயக்காரர்கள் பற்றி சமூகத்துக்கு என்ன சொல்வீர்கள். வரவிருக்கின்ற இடைக்கால நிர்வாகம் கசிப்பு உற்பத்தி போன்ற பலவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடும். உங்களைப் போன்றோருக்கு பெரும் சுமையும் குறைந்துவிடும் என நினைக்கின்றேன். உங்கள் கருத்து..?

பதில்: கசிப்பு உற்பத்தியாலே மற்றும் மதுபானப் பாவனையாலே இன்று பலர் உடல் உள நோய்களுக்கும், சமூகப் பிரச்சனைகளுக்கும் உள்ளாகிக் கொண்டு இருக்கின்றார்கள். இது ஒரு புற்று நோய்போல் இன்று எம் சமூகத்தில் படர்ந்துள்ளது. இவை பற்றியும் பத்திரிகையிலே எழுதியுள்ளேன். ஏனென்றால் இவை எல்லாம் அடியோடு அகற்றப்படவேண்டிய சமூகத்தின் தீமையாக உள்ளன. மிகவும் மோசமாக கசிப்பு உற்பத்தியும் அவற்றின் தீமைகளும் அதிகரித்துள்ளன.

கசிப்புகளை(வடி) குடித்துவிட்டு அடிதடியிலும் அல்லது வெட்டுக் கொத்திலும், களவெடுப்பதிலும், கொலை செய்வதிலும் இந்த மக்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். ஆகவே இந்த தீமைக்கெல்லாம் அடிப்படையாக உள்ள சில காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றை அகற்றுகின்ற வேளையில் நிச்சயமாக அந்தப் பழைய தமிழ்ப் பண்பாட்டுடன் வாழும் “அந்த நிலை” ஏற்படும் என்ற நோக்குடனும், ஆதங்கததுடனும் எனது சிந்தனைகளையும், கருத்துக்களையும் எழுதி வருகின்றேன். கசிப்பு உற்பத்தியும் பாவனைகளும் பல பிரச்சனைகளுக்கு காரணியாக இருக்கின்றன. இவை அடியோடு அகற்றப்பட வேண்டும் என்ற விடயத்திற்கு மாற்றுக் கருத்து இல்லை.

கேள்வி: உங்கள் பணிகள் கத்தோலிக்கருக்கு மட்டுமா? அல்லது ஏனையவர்களையும் சென்றடைகின்றதா?

பதில்: கத்தோலிக்க இறை மக்களுக்கு ஆன்ம குருவாகப் பணிபுரிய அனுப்பப்பட்டாலும், இப்பணியினது பண்பும், தன்மையும் அதிலும் சிறப்பாக கடந்த வருடங்களில் போர்க்காலச் சூழலில், போரின் பின்னணியிலே உடல் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டு, காயப்பட்டு, நொந்தபோன, சோர்ந்துபோன,

வேதனைப்படுகின்ற பலரை இப்பணியின் ஊடாக தொடக்கூடியதாக இருக்கின்றது. இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால் மனிதனையும் மனிதனது மாண்பையும் வாழவைக்கவே ஆண்டவர் இயேசு வந்தார். அவர் வழியே எமது வழி. மனிதனிலே வேற்றுமைகள் உண்டு. மனிதத்திலே வேற்றுமை ஏது? மனிதத்தை இங்கு காண்கிறேன்.

**கேள்வி: ஒட்டு மொத்தமாக உங்கள் பணிபற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

பதில்: மிகவும் இரத்தினச் சுருக்கமாகச் சொல்வேனே யானால், உடைந்துபோன உள்ளத்துக்கு உற்சாகத்தையும், வேதனைப்படுகின்ற இதயங்களுக்குத் தேற்றுதலையும், அழுகின்றவர்களுக்கு ஆறுதலையும், கஷ்டப்படுகின்றவர் களுக்கு ஆதரவையும், விரக்தியுற்ற மனங்களுக்கு வாழ்கின்ற நம்பிக்கை யையும் அதேவேளையில் சாகின்ற அல்லது செத்துக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு வாழ்வில் அவர்களுடைய இறப்பின் பின்னர் பெறக்கூடிய வாழ்வின் நம்பிக்கையையும் கொடுக்கக்கூடியதாக இருப்பதை இங்கு நான் கூறலாம்.

**கேள்வி: வேறு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

பதில்: யாழ். போதனா வைத்தியசாலை வட பகுதியின் முக்கிய தள வைத்தியசாலையாக இருப்பதனால் நோயாளிகளின் வருகை நாளாந்தம் கூடிக்கொண்டு போகிறது. ஆகவே, மருத்துவப் பணியாளர் பற்றாக்குறை, நோயாளர்களுக்கான போதிய இட வசதியின்மை என்பன நிவர்த்தி செய்யப்பட வேண்டும். அத்துடன் இவ்வைத்தியசாலைக் கட்டடங்கள் மிகப் பழைமையானவை. அத்துடன் நகரச் சத்தஞ் சந்தடிகள் இச்சூழலைப் பாதிக்கின்றது. காலோட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை புதிய இடத்தில் நவீன முறையில் அமைக்கப்படுவதற்கான எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் பொறுப்பானவர்கள் சிந்திக்க வேண்டும்.

**பேட்டிகண்டது : அருள்சகோ. ச.பிரான்சிஸ், 15.02.2002**

**பிரசுரமானது : பாதுகாவலன், 15 - 30 .11.2002**

# ஆ. சிந்தித்தவை

## 1. வேதனை தரும் செயல்

நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரில் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுபவர்களின் சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் பாதுகாக்கப் போதுமான வசதிகள் இல்லையென்றும், இப்படியாக வருகின்ற சடலங்களை வேறு இடங்களில் பேணுவதற்கு உரிய நடவடிக்கையை எடுங்கள் என்றும் வைத்தியசாலைப் பணிப்பாளரால் அரச அதிகாரிகளுக்கு ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தமையை நாம் எல்லோரும் அறிவோம்.

கடந்த வாரத்தில் போரில் கொல்லப்பட்டவர்களில் சுமார் நாற்பத்து ஏழு சடலங்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டதும் அவைகளை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக உரியவர்களுக்கு கையளித்த வேளையில் ஏற்பட்ட பதற்றம் காரணமாகச் சடலங்கள் மீண்டும் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டதும் நாம் எல்லோரும் பத்திரிகையின் ஊடாகத் தெரிந்து கொண்ட விடயம்.

சடலங்களைக் கையளிக்கும் முயற்சி கைகூடாத நிலையில் அவைகளை அரச செலவில் அடக்கம் செய்வதாக இப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இது பற்றியே எனது கருத்தினைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஏற்கனவே நோயாளர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள் பெரும் எண்ணிக்கையான சடலங்களை வைத்தியசாலையில் ஒப்படைத்த வேளையில், ஜீரணிக்க முடியாத பல அசௌகரியங்களுக்கு உள்ளானார்கள், இருப்பினும் அந்தச் சடலங்கள் கையளிக்கப்பட இருந்த வேளையில் அவைகளை பிரேத அறையில் இருந்து அப்புறப்படுத்தி, கொண்டுசென்று கையளிக்கும் முயற்சி கைகூடாத பட்சத்தில் மீண்டும் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. பின்னர், அரச செலவில் அடக்கம் செய்ய அந்த சடலங்கள் மீண்டும் எடுத்துச் செல்லப்பட்டன. இதிலே உள்ள மிக வேதனைக்குரிய விடயம் என்னவென்றால், அடக்கம் செய்ய உடல்களை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்பட்ட பெரிய வாகனம் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு, சடலங்களை ஏற்றிய இடத்தில் வைத்தே கழுவித்துப்புரவு செய்த செயல்தான்.! இத்துர் நாற்றமானது நான் இவ்வரிகளை எழுதும்வரை எழுந்த வண்ணமே இருக்கின்றது. இப்பாதையினால் வந்தவர்கள் பலர் தாங்கமுடியாத துர்நாற்றத்தினால் வாந்தி எடுத்துச் சென்றதை நான் பார்க்கக்கூடியதாக இருந்தது. இச்செயல் பற்றி குறிப்பிட்ட வைத்தியசாலையின் ஒரு மூத்த பணியாளர், "தனது முப்பத்து ஐந்து வருடகால சேவையில் இப்படியாக நாம் வேதனைப்பட்டதில்லை" எனக் குறிப்பிட்டார் இன்னொருவர், "இது பற்றிக் கேட்பதற்கு ஆள்கள் இல்லையா" என மனம் வெதும்பினார்.

வைத்தியசாலைச் சிற்றாலய ஆன்மகுரு என்ற வகையில் இது போன்ற வேதனைக்குரிய மக்களுடைய மனங்களைப் புண்படுத்துகின்ற செயல்கள் நடைபெறாதிருக்க சம்பந்தப் பட்டவர்களை வேண்டிக்கொள்கின்றேன். அதேவேளையில், வைத்தியசாலைப் பணிப்பாளரின் மேற்குறிப்பிட்ட முயற்சியை அரச அதிகாரிகள் கவனத்திற் கொண்டு செயற்படுவது வைத்தியசாலைச் சூழலை ஆரோக்கியமானதாகப் பேண உதவும்.

**உதயன்**
24.09.2000

# 2. நோயாளர் கொழும்பு செல்ல விசேட ஒழுங்கு முறை அவசியம்

யாழ். குடாநாட்டிலிருந்து ஒருவர் வெளியே செல்ல வேண்டுமானால் எத்தனையோ படிமுறைகளில் பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுச் செல்ல வேண்டும். அனுமதி பெறுவதிலும் பிரயாணத்தை மேற்கொள்வதிலும் பல கஷ்டங்களையும் இன்னல்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. பயணத்துக்கான பயணச்சீட்டுப் பெறும்வரை, கிராம சேவையாளர், உதவி அரசாங்க அதிபர் உட்பட ஒருவர் சுமார் ஏழு படிநிலைகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது!..... இதற்காகப் பல மணிநேரத்தையும் பல நாள்களையும் ஏன் சில கிழமைகளையும் செலவிடவேண்டியிருக்கிறது.

இம்மாதம் இரண்டு குழந்தைகளை உடனடிச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து கொழும்பு சிறுவர் வைத்தியசாலைக்கு விமானம் மூலம் அவசரமாக அனுப்ப வேண்டியிருந்தது. ஒரு குழந்தைக்கு வயது ஆறு மாதங்கள், மற்றைய குழந்தை பிறந்து ஐந்து (5) நாள்கள் தான்.

வைத்தியர்களுடைய கனிவான வேண்டுகோளுக்கு இணங்கி, மேலே சொல்லப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அனுமதி பெறுவதையும், பயணச் சீட்டுப் பெற்றுக் கொடுப்பதையும், நடைமுறைச் சிக்கல்களைக் கருத்திற் கொண்டு மனமுவந்து ஏற்றுக் கொண்டேன்.

பச்சிளங் குழந்தைகள் என்ற படியினால் பாதுகாப்பு அனுமதி, பயண அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதிலும், பயணச்சீட்டுப் பெறுவதிலும் எல்லா அதிகாரிகளும் கருணையுடனும், காருண்யத்துடனும் நடந்து கொண்டார்கள். அவர்களுக்கு என் நன்றி உரித்தாகட்டும்.

ஆனால் முதலிலே ஆறு மாதங்களேயான குழந்தையையும், பெற்றோரையும் அனுப்புவதற்காக:

எல்லாமாக ஒன்பது அதிகாரிகளிடத்திலே கையொப்பம் பெறவேண்டியிருந்தது.

இதனால் அவசர சிகிச்சையாக இருந்தும், ஓரிரு நாள்கள் தாமதமாகவே பயணம் மேற்கொள்ளப்பட்டது. வைத்தியசாலைச் சிற்றாலய ஆன்மகுரு என்ற படியினாலே ஒன்பது, பத்து மணித்தியாலங்களைச் செலவழித்து ஓரிரு நாள்களிலேயே இவர்களை அனுப்ப முடிந்தது.

ஆன்மகுரு என்ற படியினால் சிலருடைய கேள்விக்குத் தக்க பதில் கொடுத்து, பலருடைய முணுமுணுப்புக்களுக்குச் செவி மடுக்காது, பல வரிசைகளைத் தாண்டி, இவ்வுதவியைச் செய்ய முடிந்தது.

இந்த அனுபவத்தில் இருந்து நான் விளங்கிக் கொள்ள விளைவது, இத்தனை படிமுறைகளும் பல நோய்களினால் வருந்துகின்ற நோயாளருக்குத் தேவைதானா?

இத்தாமதத்தை நிவர்த்தி செய்ய முடியாதா?

ஏன் ஆபத்திலே இருக்கும் அவசர நோயாளருக்குப் பாதுகாப்பு அனுமதி, பயண அனுமதிப்பத்திரம், பயணச்சீட்டுப் பெறுவதில் விசேட ஒழுங்கு முறைகளை அமைக்கக் கூடாதா?

இம் முழுச் செயற்பாட்டினையும் இலகுவாகவும், எளிதாகவும், துரிதமாகவும் நோயாளர்களின் மேற்கொள்ள அதிகாரிகள் அதிக கவனம் எடுத்து, நோயாளர்களின் இத்துயரத்தைப் போக்க ஆவன செய்வார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

உதயன்

29.01.2000

# 3. ஒட்சிசன் இன்மையால் நிகழும் மரணங்களுக்கு யார் பொறுப்பு?

யாழ். போதனா வைத்தியசாலையில் மருந்துகள் தட்டுப்பாடாக இருக்கின்ற வேளைகளிலே, கூடுதலாக வெளி நோயாளர் பிரிவில் அநேகர் வைத்தியரின் பற்றுச்சீட்டுடன் வெளியார் மருந்தகங்களில் பணம் கொடுத்து மருந்துகள் பெறுவது அவ்வப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இது இப்படியிருக்க கடந்த 11ஆம் திகதி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் (I.C.U.) முப்பத்தியெட்டு (38) நாள் ஆண்குழந்தை ஒன்றும் அறுபத்தியெட்டு (68) வயது நிரம்பிய பெண்ணொருவரும் இறந்துள்ளார்கள்.

இவர்களுக்கு அவசர சிகிச்சையாகப் பாவிக்கப்பட வேண்டிய ஒட்சிசன் அவ்வேளையில் அங்கு கையிருப்பில் இருக்கவில்லை என்றும், ஒட்சிசன் மூன்று (3) நாள்களுக்கு முன்பதாகவே முடிந்துவிட்டது என்றும் இச்சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிய வைத்தியர் மிகவும் கவலையோடு கூறினார்.

அடுத்த கப்பலுக்காகக் காத்திருக்க வேண்டிய நிலை.....! ஏனென்றால் நோயாளர் கப்பலில் கொண்டுவரப்படும் அத்தியாவசிய மருந்துப் பொருள், கடைசி இரண்டு சேவைகளிலும் எடுத்துவரப்படவில்லை என்பதை உறுதிசெய்யக்கூடியதாக உள்ளது.அப்படியாயின், இம் மருந்துப் பொருள்களை அனுப்புவதில் சுகாதார அமைச்சு அக்கறையின்றி இருக்கிறதா? அல்லது கொழும்பிலிருந்து மருந்துப் பொருள்களை அனுப்பும் அதிகாரிகள் அசட்டையாக இருக்கின்றார்களா?

எது எவ்வாறாயினும் ஒட்சிசன் இல்லாமல் இருவர் உயிரிழக்க நேரிட்டது சாதாரண விடயமல்ல.....!

இதற்கு யார் பொறுப்பு?

**உதயன்**

**15.02.2002**

# 4. புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் இன்றைய அவசரத் தேவை

சிகிச்சைக்காக கொழும்பு செல்லவேண்டிய நோயாளர்களின் நடைமுறைச் சிக்கல்கள் நிறைய உண்டு. இந்நோயாளர்களில் மிகவும் வேதனைக்குள்ளாகின்றவர்கள் புற்றுநோயாளர்களே.

பயண ஒழுங்குகளிலே பல தடைகளைத் தாண்டவேண்டி யிருப்பதால் காலதாமதமாகவே இங்கிருந்து புறப்பட்டு மகரகம வைத்தியசாலையை அடைகின்றார்கள். சிலர் மேலதிக சிகிச்சைக்காக இரண்டு, மூன்று தடவைகள் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. இவர்களில் ஒருசிலர், நோய்முற்றி அங்கேயே இறப்பவர்களும் உண்டு. நான் அறிந்தவரை சமீப காலத்தில் இவ்வாறாக மூன்று பேர் இறந்திருக்கின்றார்கள்.

சிகிச்சைக்காக ஒருதடவை போனவர்களில் பலர், மீண்டும் மேலதிக சிகிச்சைக்காக அங்கு செல்ல மறுக்கின்றார்கள். சிலர் மொழிப் பிரச்சினை என்றும், இன்னும் சிலர் தாம் கீழ்த்தரமாக நடத்தப்பட்ட அனுபவத்தாலும், மேலும் சிலர் "இங்கு கிடந்து சந்தோஷமாகச் சாவோம்" என்றும் பல நியாயமான காரணங்களைக் கூறி, அங்கு மீண்டும் செல்ல அறவே மறுக்கின்றார்கள்.

புற்றுநோயாளர்களுக்கு முன்னரைப்போன்று இங்கேயே சிகிச்சையளிக்கக் கூடிய வகையில் அடிப்படை மருத்துவ உபகரணங்கள் ஒருசில மாதங்களுக்கு முன்பதாகவே வந்து சேர்ந்திருப்பதாக அறிகிறோம்.

அத்துடன், பொதுச் சுகாதாரச் சேவைகள் திணைக்களமே புற்றுநோயாளர் சிகிச்சைப்பிரிவின் நிர்வாகத்திற்குப் பொறுப்பு என்றும் தெரியவருகிறது.

அப்படியாயின், அவஸ்தைப்படுகின்ற நோயாளர்களுக்காக இச்சிகிச்சைப் பிரிவையோ அல்லது நிலையத்தையோ மீண்டும் விரைவாகத் துரிதகதியில் ஆரம்பிப்பது இந்நேரத்தில் இந்நோயால் அல்லற்படுகின்ற அநேகருக்கு பெரும் ஆறுதலாகவும், பெரிய வரப்பிரசாதமாகவும் அமையும்.

எனினும், இப்புற்றுநோயாளர் சிகிச்சை நிலையத்தை இப்போது ஆரம்பிப்பதில் சில சிரமங்களும், சிக்கல்களும் இருக்கலாம் என்பதையும் விளங்கிக்கொள்கின்றோம்.

இருப்பினும், எல்லா வசதிகளோடும் தொடங்குவோம் என்றிருந்தால், நிச்சயமாக இன்னும் பல வருடங்கள் ஆகலாம் !......

ஆகவே, இச்சிகிச்சை நிலையத்தை இக்காலத்தின் தேவைகருதி விரைவாக ஆரம்பிக்க வேண்டுகின்றோம்.

**உதயன்**
23.02.2001

## 5. கொழும்பு செல்லும் நோயாளரின் துன்பம் தீர வழி செய்வார்களா?

சிகிச்சைக்காக கொழும்பு செல்லவேண்டிய நோயாளர் "பாதுகாப்பு அனுமதி" (கிளியரன்ஸ்) பெறும் விடயத்தில், படும் சிரமங்களையும், வேதனைகளையும் இப்பகுதியில் அடிக்கடி படித்து அறிந்திருப்பீர்கள்.

1995ஆம் ஆண்டுக்குப் பின்னர், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு கொழும்பு செல்லும் நோயாளர்களைப் பொறுப்பேற்றதிலிருந்து 1999ஆம் ஆண்டு கார்த்திகை வரை நோயாளியும், பராமரிப்பாளரும் "பாதுகாப்பு அனுமதி" இல்லாமல் சிகிச்சைக்காகக் கொழும்பு சென்று வந்தார்கள்; அப்படி ஒருகாலம் இருந்தது.

பின்னர், 1999ஆம் ஆண்டு மார்கழியிலிருந்து நோயாளியின் பராமரிப்பாளர் "பாதுகாப்பு அனுமதி" பெறவேண்டும் என்ற நடைமுறை பிறப்பிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு ஆனியிலிருந்து இருவரும் அதாவது, நோயாளியும், பராமரிப்பாளரும் இதனைப் பெறவேண்டும் என்ற நிலைமை உருவானது.

ஓரிரு நோயாளர் செய்த தவறுக்காக, இப்போதைய நடைமுறை நூற்றுக்கணக்கான கொழும்பு செல்லவேண்டிய நோயாளர்களை அவஸ்தைப்படுத்துகிறது.

கடந்த, சுமார் ஒரு மாத காலப்பகுதியில் நான்கு (4) பச்சிளங் குழந்தைகள் அவசர சிகிச்சைக்காக விமானம் மூலம் அனுப்பப்படவேண்டி இருந்தது. இவர்களின் பராமரிப்பாளர்களான தாய்மார் "பாதுகாப்பு அனுமதி" பெறப்படாத பாடுகள்படவேண்டிய நிலை. இதனோடு சேர்த்து அநாவசியமான காலதாமதமும் கூட.

எனவே, இவ்விடயத்தில் மாற்று ஒழுங்குமுறையோ அல்லது முன்னைய நடைமுறையோ அல்லது விசேட விதிமுறையோ அவசியமாக உருவாக்கப்படவேண்டும் என்பதனைப் பலரும் பல தடவைகள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

ஆனால், நடைமுறையில் இவ்விடயத்தில் மாற்றமோ, முன்னேற்றமோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

எனவேதான், இவ்விடயத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ICRC), வரையறையற்ற மருத்துவக் குழு (MSF) போன்ற வைத்தியசாலையோடு நேரடித்தொடர்புடைய பொதுநல அமைப்புக்கள் தலையிட்டு, ஆக்கபூர்வமாகச் செயற்பட்டால், பல நோயாளர்களின் அநாவசியமான துன்பங்கள் தீரும். பல உயிர்கள் காப்பாற்றப்படும்.

இவ்விடயத்தில், மாற்றம் ஏதும் ஏற்பட வழிபிறக்குமா? முன்னேற்றம் ஏற்பட வழிசெய்வார்களா?

**உதயன்**
28.03.2001

# 6. யாழ். ஆஸ்பத்திரியில் தொடரும் மருந்துத் தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கான மருந்துப்பொருள்கள் அடிக்கடி தட்டுப்பாடாகவும், அவ்வப்போது இல்லாமலும் போவது வழக்கமாகவும் சர்வ சாதாரணமாகவும் மாறிவிட்டது.

இவ்வகையில் கால், கை முறிந்து, உடைந்து நோவோடு வரும் நோயாளர்கள் "காட்போட்" இனால் தற்காலிகமாகச் சுற்றிக் கட்டப்பட்ட நிலையில், கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் 'Plaster of Paris' (POP) இற்காகக் காத்திருக்கிறார்கள். இப்பொருள் வந்துசேர இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏனெனில், மேற்சொன்ன பொருள் இருவார காலமாக இல்லையென்று நோயாளர்கள் வேதனையோடு கூறுகிறார்கள்.

சாதாரணமாகவே இப்பொருள் கையிருப்பில் இருக்க வேண்டிய ஒன்று. அத்துடன் மீண்டும் சண்டை உக்கிரமடைந் திருக்கும் இந்த நேரத்தில் இப்பொருளின் தேவை எத்தகையது என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இக்கட்டான சூழலில் இயங்கும் ஒரு போதனா வைத்தியசாலைக்கு, மிகவும் அடிப்படையான மருத்துவப் பொருள்களை அனுப்பி வைப்பதில் எவ்வளவு அக்கறையோடு சுகாதார அமைச்சு செயற்படுகிறது என்பது இதிலிருந்து நன்கு புலனாகிறது!....

அப்படியாயின், மருத்துவப் பொருள்களின் பற்றாக்குறை, இல்லாக்குறை எல்லாம் தொடர்கதைதானா? இவற்றை நிவர்த்தி செய்ய இனி யாரிடம் போவது? எங்கு எடுத்துச் சொல்வது?

**உதயன்**
10.05.2001

# 7. மருத்துவ மாணவர்களுக்கு

புத்திஜீவிகள், கல்விமான்களின் வெளியேற்றம் எம் பிரதேசங்களை, நாட்டைபொறுத்தவரை ஈடுசெய்யமுடியாத இழப்பேயாகும். இவர்கள் தம் நாட்டைவிட்டு வெளியேறி, வெளிநாடுகளிலிருந்து கொண்டு கிடைக்கும் நன்மைகளை விட, இங்கிருந்து கொண்டு பணிபுரிவது இன்னும் பன்மடங்கு பயன்களையும், திறன்களையும் பெற்றுத்தரும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மையே ஆகும்.

எமது பிரதேசங்களில் உள்ள அன்றாட நெருக்கீடுகள், பிரச்சினைகள் பற்றி எல்லாம் எங்கெங்கு பேசப்பட்டு, ஆராயப்படுகிறதோ அங்கெல்லாம் மருந்துவத்துறையின் பங்கு இன்றியமையாத, அத்தியாவசியமான ஒன்றாகக் கொள்ளப் படுகின்றது.

இம்மருத்துவத்துறையின் பல்வேறுபட்ட தற்காலச் சிக்கல்களை நோக்குகின்ற வேளையிலே, வைத்தியர்களின் பற்றாக்குறை மிக முக்கிய பிரச்சினையாக - குறிப்பாக எமது பிரதேசங்களில் நின்று நிலவுகின்றது.

ஒவ்வொரு வருடமும் ஏறக்குறைய 60, 70 வைத்திய மாணவ, மாணவியர் எமது யாழ். மருத்துவ பீடத்தில் படிப்பை முடித்துக் கொண்டு வைத்தியர்களாக வெளியேறுகின்றனர்.

வைத்திய நிபுணர்களின் பற்றாக் குறையினால் ஐந்து (5) வருடக் கல்வியை இவர்கள் 7, 8 வருடங்களில் முடிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதன் பின்னர் நாட்டின் சூழ்நிலை, குடும்ப நிலை, உயர் கல்வி காரணமாக எமது பிரதேசங்களை விட்டு தென்பகுதிக்கும், வெளிநாடுகளுக்கும் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறார்கள்.

இருப்பினும், எமது பிரதேசங்களில் கொஞ்சக் காலமாவது வைத்தியப் பணி புரிவது, தமது சமூகத்தின்பால் இவர்களுக்குள்ள பாரிய கடப்பாடாகும் என்பதை இங்கு கோடிட்டுக் காட்ட வேண்டிய அவசியமில்லை.

"ஓரிரு வருடங்களாவது இங்கு கல்வி பயிலும் வைத்தியர்கள் எம்மத்தியில் பணிபுரிந்தால் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம்" என்று அடிக்கடி ஆதங்கத்தோடு சுட்டிக்காட்டுவார் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்.

2000ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மன்னார் மாவட்ட பெரியாஸ்பத்திரியில் பணிபுரிய, வைத்தியர்களின் தேவைகள் நிறைய இருந்தும் 17வைத்தியர்கள் பணிபுரிந்த நிலையில் 16 தென்பகுதி வைத்தியர்கள் திடீரென தென்பகுதிக்குச் சென்றவேளையில் அவ்வைத்தியசாலை ஒரே ஒரு வைத்தியருடன் ஒரு சில நாள்கள் குற்றுயிராய்த் துடித்துக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் இம் மாவட்டத்தைச் சேர்ந்த 3, 4 மாணவர்களாவது ஒவ்வொரு வருடமும் படிப்பை முடித்து வெளியேறுகிறார்கள்.

வருங்கால எம் வைத்திய மாணவ மாணவியர் இதனைக் கருத்திற்கொண்டால், எம் பிரதேசங்களில் நிலவும் 'வைத்தியர் பற்றாக்குறை' தீராவிடினும், எம் பகுதிகளில் சில இடங்களில் நிலவும் 'வைத்தியர் இல்லாக்குறை' யாவது நீங்கும்.

**உதயன்**

**07.06.2001**

# 8. விபரீத விளையாட்டுப் போட்டிகள்

அண்மையில் பாலர் பாடசாலை ஒன்றில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றிருக்கிறது. அந்த விளையாட்டுப் போட்டியில் பெற்றோருக்கான ஒரு போட்டியும் நடந்தது. அது எப்படியானது என்றால் கைகளைப் பின்னாலே கட்டிக் கொண்டு பின் பக்கமாக ஓடுவதாகும். உதாரணமாக, வாகனங்கள் **Reverse** எடுப்பது போன்றதாகும்.

இந்தப் போட்டியின் போது விழுந்த ஓர் இளம் குடும்பத் தலைவர் தலையில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சையின் பின் உயிர் தப்பியிருக்கிறார்.

இன்னும் ஓர் ஆரம்பப்பிரிவு பாடசாலை ஒன்றில், சிறுவர்களுக்கான விளையாட்டுக்களில் 'மோதிரம் மாற்றுதல்' விளையாட்டு நடைபெற்றது. இது ஒரு குழு விளையாட்டு. ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு மோதிரம் கொடுக்கப்படும். அம் மோதிரத்தை அக் குழுவில், ஒருவர் மற்றவருக்கு கையைப் பின்னால் கட்டிக் கொண்டு வாயில் வைத்திருக்கின்ற ஈர்க்கினால் மோதிரத்தைப் பெற்றுக் கொண்டு மற்றவருக்குக் கொடுக்க வேண்டும். இந்தப் போட்டியில் இரண்டு சிறுவர்களின் கண்களும் பெரும் ஆபத்தை எதிர் நோக்க வேண்டிய வாய்ப்புகள் நிறையவே உண்டு. இப்படி இருவர் காயமடைந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

எனவே, விளையாட்டுப் போட்டிகளில் இப்படியான போட்டிகளைத் தவிர்த்து, வேறு வகையான எத்தனையோ சிறப்பான சுவாரசியமான போட்டிகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் வீண் விளையாட்டு, விபரீதத்தில் முடியாமற் பார்த்துக் கொள்ளலாம்.

**உதயன்**
14.06.2001

# 9. தவறுதலாக மண்ணெண்ணெய் அருந்தும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

நாம் எதிர்நோக்கும் புதிய புதிய பிரச்சினைகளில் தவறுதலாக மண்ணெண்ணெய் குடித்து அனுமதிக்கப்படும் சிறார்களின் எண்ணிக்கை மிக மோசமாக அதிகரித்து வருவது கண்கூடு. ஏனென்றால், 1985, 90களில் இது ஒரு பிரச்சினை யாகவே இருக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. 1990களில் தவறுதலாக மண்ணெண்ணெய் குடித்து அனுமதிக்கப் பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை மாதமொன்றிற்கு ஒன்று என்பது கூட அரிதாகவே இருந்திருக்கிறது. ஆனால், இப்போது நாளொன்றிற்கு (மாதமொன்றிற்கு 25-35 சிறார்கள் வரை) சுமார் ஒருவர் வீதம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் படுவதை வைத்தியசாலைப் பதிவேடுகள் கூறுகின்றன.

இதற்குக் காரணங்களாக தற்போது மண்ணெண்ணெய் தாராளமாகக் கிடைப்பதும், இடம் பெயர்ந்த நிலையில் மக்கள் சிதறுண்டு வாழுகின்ற சூழலில் ஆங்காங்கே 'சோடா' போத்தல்களிலும், பேணிகளிலும் வைக்கிறார்கள். இதனால் சிறார்கள் மிக இலகுவாக "சோடா" அல்லது தண்ணீர் என்று தவறுதலாகக் குடித்து விடுகின்றனர். அப்படி வாய்க்குள்ளே ஊற்றிய பின்னர் தாங்கள் எதிர் பார்த்த பொருள் இல்லையென்று உணர்ந்தாலும் அதனை வெளியே துப்புவதற்குத் தெரியாத நிலையில் விழுங்கி விடுகின்றனர்.

இது பற்றி யாழ் - போதனை வைத்தியசாலை குழந்தை வைத்திய விடுதியினர், விழிப்புணர்வு ஏற்படுத்தும் விளக்கக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் மண்ணெண்ணெயை சோடாப் போத்தல்களில் வைக்கும்போது குழந்தைகள் அவற்றைச் 'சோடா' என நினைத்துப் பருகிவிடலாம். எனவே மண்ணெண்ணெயை வேறு கொள்கலன்களில் இட்டு முடியுமானவரை குழந்தைகளுக்கு எட்டாத இடங்களில் பாதுகாப்பாக வைப்பது, இப்பிரச்சினையைத் தடுப்பதற்கு சிறந்த

வழியாகும் என்றும் அப்படித் தவறுதலாகக் குழந்தை குடித்துவிட்டால் வாந்தி எடுக்கச் செய்யக்கூடாது. ஏனெனில் அது குழந்தையின் நுரையீரலைச் சேதப்படுத்திவிடும். அதேபோல் தேங்காய்ப்பாலும் பருக்கக்கூடாது. காரணம், அது மண்ணெண்ணெயின் அகத்துறிஞ்சலைக் கூட்டி, உடன் செயலிழக்கச் செய்துவிடும். இவ்விரு செயல்களுமே குழந்தைகளின் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியவையாகலாம். மண்ணெண்ணெய் குடித்த குழந்தையை அருகிலுள்ள அரசினர் வைத்தியசாலைக்கு உடனடியாக அழைத்துச் செல்ல வேண்டும் என்று மேலும் அக்குறிப்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் இத்தகைய சிறார்களின் வகையைப் பார்த்தால், வயது வேறுபாடு இன்றி தவழும் பத்து மாதக் குழந்தை தொடக்கம் பன்னிரண்டு, பதினான்கு வயது வரை அனுமதிக்கப்படுகிறார்கள். இது ஒன்றைத் தெளிவாகக் காட்டுகிறது. அதாவது வீட்டில் பெற்றோரின், வளர்ந்தோரின் அக்கறையின்மையையே காட்டுகிறது. அது மட்டுமல்லாது ஒரே தாய் மூன்று தடவைகள் வெவ்வேறு நாள்களில் தனது குழந்தைகளை வைத்திய சாலைக்கு கொண்டு வந்திருக்கிறார். இதிலும் ஒரே குழந்தை இரண்டு தடவைகள் இதனைச் செய்திருக்கிறது என்றால் அவ்வீட்டிலுள்ள பெற்றோர், குழந்தைகள் மீது கொண்டுள்ள அக்கறையும், பொறுப்புணர்வும் எப்படிப்பட்டது என்று எண்ணத் தோன்றுகிறது.

அடுத்து, எப்படியாகச் சிறார்கள் மண்ணெண்ணெயைக் குடிக்கிறார்கள் எனப் பார்ப்போம். முதலில் சோடாப் போத்தல்களில் இருந்து குடிப்பது தான் அதிகம். இருப்பினும் வீட்டில் 'கலன்'களிலிருந்தும், கடைகளில் 'பரல்'களிலிருந்தும் குழாய்கள் மூலம் உறிஞ்சி எடுக்கப்படும் சந்தர்ப்பங்களைப் பார்த்துவிட்டு, இவ்வாறான முயற்சியிலேயே ஈடுபடும் சிறார்களும் உண்டு. இப்படியாகக் கடையொன்றில் மண்ணெண்ணெயை உறிஞ்சியெடுப் பதைப் பார்த்த குழந்தை இம்மாதிரியான முயற்சியில் தானும் ஈடுபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். இதனைத் தாயானவள் கடைக்காரனுக்கு எடுத்துச்சொன்ன போது. "ஐயோ,அதுமண்ணெண்ணெய் தானே. ஒன்றும் செய்யாது"

என்று கூறியிருக்கிறார். இத்தனைக்கும், தவறுதலாக மண்ணெண்ணெய் குடித்த குழந்தை ஒன்று ஒரு சில வாரங்களுக்கு முன்னர் பரிதாபகரமாக இறந்தது இங்கு குறிப்பிடப்பட வேண்டியாதாகும்.

மண்ணெண்ணெய் குடித்த குழந்தைக்கு தேங்காய்ப் பால் ஏக்காரணம் கொண்டும் கொடுக்கக் கூடாது என நன்கு அறிந்தும் ஒரு தாய் தனது குழந்தை மண்ணெண்ணெயைக் குடித்த போது தேங்காய்ப்பால் கொடுத்திருக்கிறார். இவ்வறிவுறுத்தல் நன்கு தெரிந்திருந்தும் ஏன் அப்படியாகச் செயற்பட்டார் என்று மருத்துவர் கேட்டபோது, “அந்த நேரத்தில் அயல் வீட்டுக்காரர் சொல்விறதத்தானே செய்ய வேண்டும்” என்று விடையளித் தாராம், இதனைப் பற்றி நன்கு விளக்கமறிந்த அந்தத் தாய்.

இன்னொரு சிறுவன் சாப்பிட்டுக்கொண்டிருந்த போது விக்கல் ஏற்பட குசினிக்குள் சென்று பேணியில் இருந்த மண்ணெண்ணெயை, தண்ணீர் என்று பருகியிருக்கிறார். மற்றொரு பன்னிரண்டு வயது நிரம்பிய சிறுவன், தனது நண்பன், “எதையும் உன்னால் செய்யமுடியும்தானே ஏலுமானால் மண்ணெண்ணெய் குடித்துக் காட்டு பார்ப்போம்” என்று சவால் விட்ட போது அவர் குடித்திருக்கிறார்.

இவையெல்லாம், தவறுதலாக மண்ணெண்ணெய் குடித்து அனுமதிக்கப்படும் சிறார்களின் பலதரப்பட்ட, பலவகைப்பட்ட சிக்கல்களைக் காட்டுகின்றன.

எனவேதான், இவ்விடயத்தில் வீட்டில் உள்ள பெற்றோர், வளர்ந்தோர் அதிக அக்கறையோடு, கவனத்தோடு செயற்படின் பல குழந்தைகளின், சிறார்களின் உயிராபத்துக்களையும் வீணான வேதனைகளையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

**உதயன்**
19.06.2001

## 10. அவசர முடிவுகளால் ஏற்படும் இழப்புக்களையும் இறப்புக்களையும் தவிர்க்க...

# வாழ்வுக்குப் பல வழிகளுண்டு

என்றுமில்லாதவாறு, இக்காலத்தில் நாமும் நமது மக்களும் பல பிரச்சினைகளையும், கஷ்டங்களையும், கடும் துயரங்களையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

**இழப்புக்கள்** - இதனைத் தாங்கச் சக்தி இல்லாமை, **பொருளாதாரக் கஷ்டங்கள்** - குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாமை, **வறுமை** - அன்றாட உணவிற்கே அவதிநிலை, **குடும்பத் தகராறுகள்** - உறவு முறிந்து பிரிந்து வாழும் கட்டம், **ஏமாற்றம்** - நம்பியிருந்தவர்கள் காசையோ, கௌரவத்தையோ கண்டவுடன் கைவிட்ட சந்தர்ப்பம், **துரோகம்** - எல்லா வழிகளிலும் பாதிப்புற்று கசப்பான அனுபவங்களோடு கைவிடப்பட்ட சூழ்நிலை, **பயம்** - அத்துமீறல்களால் ஏற்பட்ட செயல்களினால் சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமா என்ற மனநிலை, **பாதுகாப்பின்மை** - எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற உணர்வு போன்ற ஏதாவது ஒரு சில காரணிகளால் நெருக்கீடுகளுக்கு முகங்கொடுக்க முடியாமல், மனமுடைந்து இனி நமக்கு வாழ்வில்லை, வழியில்லை என்று விரக்தியடைந்த நிலையில் உளநலச் சோர்வுகளால், மன அழுத்தங்களால் பலர் தம் வாழ்வைப் பரிதாபமாக முடித்துக்கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இன்னும் சிலர் குடும்பத்தில் உள்ளவர்களை ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பயப்படுத்துவதற்கோ, வெருட்டுவதற்கோ இப்படி முயற்சிக்கிறார்கள் அல்லது ஒருவர் தமது விருப்பத்தை நிறைவேற்ற எதிர்ப்புக்கள் எழுகின்ற வேளையில் அவற்றுக்குத் தீர்வுகாணத் தம் உயிரைத் தாமே பறித்துக்கொள்ளும் செயலில் ஈடுபடுகின்றனர்.

இதனை யாழ். போதனா வைத்தியசாலைப் பதிவேடு உறுதிப்படுத்துகின்றது. 2000ஆம் ஆண்டில் **தற்கொலை - தம் உயிரைத் தாமே மாய்த்துக்கொள்ளும்** - முயற்சியில் ஈடுபட்டவர்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 621 ஆகும். இதில்

வளர்ந்தோர், முதியோர், தாய்மார், இளைஞர், யுவதிகள், பாடசாலை மாணவ, மாணவியர் அடங்குவர். அதாவது சராசரியாகக் கிழமை ஒன்றுக்கு 12 பேர் வீதம் அனுமதிக்கப்படுகின்றனர். இவ் எண்ணிக்கையில் வைத்தியசாலைக்கு வெளியே இறந்தவர்கள், முயற்சித்து வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படாதவர்கள், யாழ். குடாநாட்டின் ஏனைய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை அடங்கவில்லை என்பது அவதானிக்கப்பட வேண்டிய ஒன்று.

ஒப்பீட்டளவில் 2000ஆம் ஆண்டு முன்னைய ஆண்டுகளைவிட எப்படியாக இருக்கின்றது என்று கூறாவிடினும், இது ஒரு பெரும் பிரச்சினையாக இருந்துகொண்டு இருக்கிறது என்பது மட்டும் உண்மை.

இவ் வருடத்தின் முற்பகுதியில் கணவனைப் பயப்படுத்தும் எண்ணத்தோடு தனக்குத்தானே எரியூட்டிய ஒரு குடும்பப் பெண்மணியின் விளையாட்டு விபரீதமானது. பாவம் மூன்றாம் நாள் துடிதுடித்து இறந்தாள்.

இன்னொரு பெண்மணி வயிற்றில் நான்கு மாதக்குழந்தையுடன் தனக்குத்தானே எரியூட்டி இரண்டு கிழமையின் பின் பரிதாபமாக உயிர் நீத்தார்.

மற்றொருவர் ஐந்து மாதங்களாகியும் எரிகாயம் ஆறாமல் இரவும் பகலும் ஆறாத்துயரில் அழுந்திக் கொண்டிருக்கிறார்.

வேறொருவர் "ஐயோ! இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன் சுகப்படுத்துங்கோ" என்று அழுது கையெடுத்து கும்பிட்டார்; இப்படிப் பல சம்பவங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்நிலைமைகளில், நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவரோ மேற்சொன்ன காரணிகளால் ஏற்படுகின்ற ஒரு பிரச்சினைக்கு முகங்கொடுக்க முடியாத சந்தர்ப்பங்களில் வாழ்வை முடித்துக்கொள்ளும் எண்ணம் வரலாம். சிலவேளைகளில் முயற்சித்தும் இருக்கலாம்.

அப்படியென்றால், நீங்களே உங்களுக்கு நிச்சயமாக உதவமுடியாத நிலைமையும் நேரமுமாகும். இவ் வேளையில்தான் கட்டாயமான உதவி தேவைப்படுகிறது. இவ் உதவியை ஆற்றல் உள்ளோரிடமிருந்து பெறவேண்டும். இல்லையென்றால், முன்னைய நிலையை விட பின்னைய நிலை மிக மோசமாகும். எனவேதான், இந்நோக்கத்தோடு எம்மத்தியில் இயங்குகின்ற உளநல (சிகிச்சை) நிலையங்களை அறிந்து வைத்திருப்பதால் அவசரத்தில் எடுக்கும் முடிவுகளால் ஏற்படும் அநியாயமான இழப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

1. யாழ். போதனா வைத்தியசாலை உளநல, மனநல சிகிச் சைப்பிரிவு: 32ஆம், 33ஆம் இலக்க அறைகளில் (அனைத் துப் பருவத்தினருக்கும்).

2. "அகவொளி" குடும்ப உளவளத்துணை நிலையம், பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி. இல. 2856

3. "சாந்தியகம்" 15, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 3338 (அனைத்து வயதினருக்கும்).

4. "சுகவாழ்வு" - சிறுவர்களுக்கான உளவளத்துணை நிலையம், 516/1. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

5. உளநலச் சங்கம், தெல்லிப்பளை வைத்தியசாலை, தெல்லிப்பளை.

6. "வளர்பிறை" பிளச்சஸ் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

வாழ்வுக்கான வழிகள் பலவுண்டு
வாழ முயற்சியுங்கள்
வழி பிறக்கும்.

பாதுகாவலன்
01.07.2001

# 11. வீதி ஒழுங்குமுறைகளை உதாசீனம் செய்வதால் ஏற்படும் விபத்துக்கள்

வீதி விபத்துக்களினால் குடாநாட்டில் படுகாயமடைப வர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனை யாழ். ஆஸ்பத்திரிப் பதிவேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

வீதியில் வாகனங்களைச் செலுத்தும்போது அடிப்படை வீதி ஒழுங்குகளைக் கூட உதாசீனம் செய்து நடந்துகொள்வதாலும் அநேக விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இவ் வீதிவிபத்துக்களுக்கு மற்றொரு முக்கிய காரணம் என்னவென்றால் சில முக்கியமான சந்திகளில் காவலரண்கள் அமைக்கப்பட்டிருக்கும் விதம்!...... உதாரணமாக, கோயில் வீதியையும் (**Temple Road**) பிரதான வீதியையும் இணைக்கும் மூலையிலும், மடத்து வீதியையும் (**Convent Road**) ஆஸ்பத்திரி வீதியையும் இணைக்கும் மூலையிலும் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் காவலரண்கள் அநேக வீதி விபத்துகளுக்குக் காரணமாய் அமைகின்றன.

மோட்டார் சைக்கிளில் செல்லும் ஒருவர் கோயில் வீதியூடாகச் சென்று பிரதான வீதியில் ஏறும்வரை, பிரதான வீதியால் வரும் வாகனங்களையோ அல்லது பிரதான வீதியால் கோயில் வீதிக்குத் திரும்பும் வாகனங்களையோ இலகுவாகப் பார்க்கமுடியாத அளவில் காவலரண்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

அவ்வாறே மடத்து வீதியால் வந்து ஆஸ்பத்திரி வீதியின் இடப்பக்கமாகத் திரும்பும் மூலையில் அமைக்கப்பட்டிருக்கும் காவலரணும் விபத்துக்குக் காரணமாய் உள்ளது.

ஏற்கனவே வீதி விபத்துக்கள் பல இவ்விடங்களில் நடந்துள்ளன. கடந்த வாரத்தில் கோயில் வீதிக் காவலரணுக்கு அருகில் இராணுவ வாகனம் அடித்ததில் ஒருவர் படுகாயமடைந் திருக்கின்றார். எனவே, இவ்விடயத்தில் பொதுமக்கள் கவனமாயிருப்பதும், அதிகாரிகள் காவலரண்களை அகற்றுவதில் கவனமெடுப்பதும் பல உயிர்களைக் காக்கும். மக்கள் கவனமாயிருப்பார்களா? அதிகாரிகள் கவனமெடுப் பார்களா?.

**உதயன்**
12.07.2001

# 12. வேண்டாம் விளையாட்டு மண்ணெண்ணெய் - நெருப்புடன்!

மண்ணெண்ணெய் ஊற்றி தம்மைத்தாமே எரியூட்டி தற்கொலை செய்ய முயற்சிப்பவர்கள் தமது செயலால் மிகமிகப் பரிதாபகரமான மரணங்களைச் சந்திப்பது ஒரு புறமிருக்க, இன்னும் பலர் மண்ணெண்ணெய் - நெருப்புடன் விளையாடுகிறார்கள்!.

அதாவது ஏதோ ஒரு காரணத்துக்காக மற்றவர்களைப் பயப்படுத்துவதற்காகவோ அல்லது வெருட்டுவதற்காகவோ அல்லது அந்நேரத்துக் கோபத்தை, வெறுப்பை வெளிக்காட்டுவதற்காகவோ மண்ணெண்ணெய் - நெருப்பின் உதவியைப் பலர் இன்று நாடுகிறார்கள்! இறுதியில் மிக மோசமான உயிராபத்துக்களையும், மிகப் பரிதாபகரமான மரணங்களையும் இவர்கள் சந்திக்க நேரிடுகிறது. யாழ். போதனா வைத்தியசாலை எரிகாய நோயாளர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் சோகமான அனுபவங்கள் மூலம் இதன் பயங்கரம் வெளிப்படுத்தப்படுகிறது.

பாவம்.......

மண்ணெண்ணெய்க்கும் நெருப்புக்கும் தெரியாதே இவர்கள் வெருட்டுவதற்காகத்தான் இப்படியான செயலில் ஈடுபடுகிறார்கள் என்று!..... இவர்கள் தமது கோபத்தை, வெறுப்பைக் காட்ட வேறு எத்தனையோ வழிகளைக் கையாளலாம். ஒரு போதும் விளையாட்டிற்கேனும் அல்லது முயற்சிப்பதாகக் கூட பாசாங்கு செய்ய இவ்வழியை நாடுவது எதிர்பாராத பாரிய விளைவுகளையே உருவாக்கும் - பலருக்கு உருவாக்கியிருக்கிறது.

இப்படியாகச் செய்து பலர் பல மாதங்களாக ஆறாத்துயரில் அவஸ்தைப்படுவதும், இன்றும் சிலர் மிக வேதனையோடு மரணமடைவதும் பலருக்குப் பாடமாக அமையட்டும்.

**உதயன்**
**24.07.2001**

# 13. பரவிவரும் காய்ச்சலுக்கு தண்ணீரே காரணம்.

தூய்மையான, கொதித்தாறிய தண்ணீரைப் பருகினால் பல நோய்களில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்று வைத்திய ஆலோசனை கூறுகின்றது. குறிப்பாகப் பலவிதமான காய்ச்சல்கள் பரவ தண்ணீரே காரணியாக இருக்கிறது என்றும் சொல்லப்படுகின்றது.

இப்போது மற்றைய காலங்களை விட வரட்சியான நிலைமை உருவாகியிருப்பதால் தண்ணீருக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் கிடைக்கின்ற நீரை பாவனைக்குப் பயன்படுத்துவது சாதாரணமாகிவிட்டது. ஆனால் அதனால் பல நோய்கள் - குறிப்பாக காய்ச்சல் - பலரை மிக மோசமாகப் பாதிக்கின்றது.

யாழ். குடாநாட்டில் காய்ச்சல் மிக மோசமாகப் பரவும் இடங்களில் இப்போது எழுவைதீவும் ஒன்று. இங்கு ஏறக்குறைய 150 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவ்விடத்தின் தெற்குப் பகுதியில் கடந்த ஓரிரு மாதங்களில் சுமார் 30 பேருக்கு மேல் நெருப்புக் காய்ச்சலின் தாக்கத்திற்கு உள்ளாகியிருகின்றனர். இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை, திருச்சிலுவை சுகாதார நிலையம் போன்ற இடங்களில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்குக் காரணம் தெற்குப் பகுதியில் குழிகள் தோண்டப்பட்டு அக்குழிகளில் ஊறும் நீரையே மக்கள் குடி தண்ணீராகப் பாவிப்பதேயாகும். ஏனெனில், இத்தண்ணீரில் கிருமிகள் பரவும் ஏது நிலை அதிகம் என்பதால், நெருப்புக் காய்ச்சல் விரைவாகப் பரவுகிறது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்படிப்பட்ட இடங்களில் மக்கள் குடி தண்ணீரைப் பெறுவதற்கான வழிவகைகளை, மக்கள் தாங்களாகவோ அல்லது தொண்டு நிறுவனங்களின் அல்லது பொறுப்பான அதிகாரிகளின் உதவியுடனோ ஏற்படுத்தும் வரை மக்கள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து கொதித்தாறிய தண்ணீரைப் பருகுவது இந்நோய்களின் தாக்கத்திலிருந்து பலரைக் காப்பாற்ற உதவும்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

**உதயன்**

25.09.2001

## 14. கண்ணிவெடிகள்....... கவனம்.....!

யாழ். குடாநாட்டின் பல இடங்களில் குறிப்பாக போர் நடைபெற்ற பிரதேசங்களில் உயிருக்கு ஆபத்தான வெடிப்பொருள்கள் இன்னமும் இருக்கின்றன என்பதற்கு நாளுக்கு நாள் நடைபெறும் சம்பவங்களும் இவற்றினால் படுகாயமடைந்தவர்கள், உயிரிழந்தவர்களின் பட்டியல்களும் சான்றாக அமைகின்றன. இவற்றைவிட படுகாயமடைந்த வர்களையும், உயிரிழந்தவர்களையும் யாழ். ஆஸ்பத்திரியில் பார்க்கின்றபோது இத்தகவல் மேலும் உறுதிப்படுத்தப் படுகின்றது.

சரசாலை, மட்டுவில், சாவகச்சேரி போன்ற பகுதிகள் உட்பட இன்னும்பல - அதாவது ஏற்கனவே மக்கள் வசித்துக் கொண்டிருக்கும் இடங்களிலும் - மிதிவெடியால் படுகாயமடைவோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

இவர்களில் பலர் எல்லாவற்றையும் இழந்தவர்கள். இத்தகையவர்கள் இருக்கின்ற - மிஞ்சிய - தப்பிய பொருள்களையாவது எடுத்துவருவோம் என்ற எண்ணத்துடன் சென்று, இப்பெரும் ஆபத்தில் சிக்கிக்கொள்கின்றனர். வாழ்க்கைக் கஷ்டத்தைக் குறைக்கப்போய் வாழ்நாள் முழுவதும் அல்லற்படவேண்டிய நிலைக்கு அவர்கள் உள்ளாகின்றனர். அவர்களின் கஷ்டம் அவர்களுக்குத்தான் தெரியும். இருப்பினும், ஒருசில உடைமைகளுக்காகச் சென்று அவற்றிற்கு ஈடாக காலொன்றைக் கொடுக்க முடியுமா?

எனவேதான் இந்த விடயத்தில் விழிப்புணர்வுடன் நடந்துகொள்வது அவசியமாகும். புதையுண்ட, அநாதரவான, கைவிடப்பட்ட(வெடி) பொருள்களின் மட்டில் மிக எச்சரிக்கையாக இருந்துகொள்வது வீணான உயிராபத்துக் களைத் தவிர்த்துக்கொள்ள வழிசெய்யும்.

மேலும், பல இடங்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் மிதிவெடி எச்சரிக்கை அடையாளங்களை எக்காரணம் கொண்டும் அகற்றக்கூடாது. அப்படிச் செய்வது இன்னும் பலருக்கு உயிராபத்தை ஏற்படுத்துவதற்கு ஒப்பானதாகும். இத்துடன் மிதிவெடி சம்பந்தமான கருத்தரங்குகள் மற்றும் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களைக் கேட்டு நடப்பது நாங்களாகவே பல பயங்கரச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த உதவுவதாக அமையும்.

**உதயன்**
30.09.2001

# 15. வலிந்து தாக்கும் சம்பவங்களில் காயமடைவோர் எண்ணிக்கை உயர்வு

யாழ். போதனா வைத்தியசாலை பல நெருக்கடிகளின் மத்தியில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்றும், இங்கு காலத்துக்குக்காலம் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது என்றும் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். இது உண்மைதான்.

ஆனால், இம் மருந்துகளுக்கு என்ன நடக்கிறது? வைத்திய வளங்கள் எதற்காகக் கூடுதலாகச் செலவிடப் படுகின்றன என்று பார்க்கும்போதுதான் அதிசயிக்கும் இன்னொரு உண்மை வெளிப்படுகிறது.

## யாழ். ஆஸ்பத்திரி மருத்துவ வளத்தில் பெரும் பகுதி இதனால் விரயம்

யாழ். போதனா வைத்தியசாலையில் பலநூறு பேர் ஒவ்வொருநாளும் உள், வெளி நோயாளர் பிரிவுகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். கடந்த யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் முறையே 161, 151, 145 பேர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு, இவர்களின் முறைப்பாடுகள் சட்ட வைத்திய அதிகாரியின் (J.M.O) கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றில், விபத்துக்கள் (Accidents), வீதிவிபத்துக்கள் (Road Accidents), தற்கொலை (Suicide), வலிந்து தாக்குதல் (Assault) போன்றவற்றோடு இன்னும் சில அடங்கும்.

சட்ட வைத்திய அதிகாரியின் கணிப்பின்படி, மேற்சொன்னவற்றில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு (2/3) வலிந்து தாக்குதல் (Assault) முறைப்பாடுகளாகவே இருக்கின்றனவாம். அதாவது உளிக்குத்து உட்பட வாள் வீச்சுக்கும், வெட்டுக்கும், கத்திக்குத்துக்கும், தடி அடிகளுக்கும், இரும்புக் கம்பிகளால் அடிபட்டதும், பதுங்கியிருந்து தாக்கியதும் என்று தாக்குதல் விதங்கள் நீளுகின்றன.

தனிப்பட்ட தகராறுகள், உள்வீட்டுப் பிரச்சினைகள், அயல்வீட்டுச்சச்சரவுகள், குழுக்களுக்கிடையிலான மோதல்கள் என்று சொல்லி இச்சண்டைகள் நடை பெறுகின்ற விதமும், தரமும் மிகத் துரிதமாக, அதி உச்ச வேகத்தில் இடம்பெறுகின்றன.

இதிலிருந்து பிறக்கும் திடுக்கிடும் மற்றைய தகவல் என்னவென்றால், இப்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படு பவர்களில் மூன்று அல்லது நான்கு பேராவது இறந்துவிடு கிறார்கள் என்பதுதான். உதாரணமாக, யூலை மாதத்தில் 161 பேரில் 106 பேர் வலிந்து தாக்குதல்களுக்கு (Assault) உள்ளானவர்கள். அதில், 3,4 பேராவது இறந்து போகிறார்கள். இப்படி, சராசரியாக ஒவ்வொரு மாதமும் சம்பவங்கள் நடைபெறுகின்றன இச்சிறிய குடாநாட்டில்!.....

இன்னொரு சந்தர்ப்பத்தில், யாழ் போதனா வைத்திய சாலையின் சத்திரசிகிச்சை விடுதி (WARD) ஒன்றில் முப்பத்தெட்டு (38) பேர் சிகிச்சை பெற்று வந்தனர். அதில் இருபத்தைந்து (25) பேர் வலிந்து தாக்குதல்களுக்கு (Assault) உள்ளானவர்கள். இதனை வேறொரு முறையில் சொன்னால், அப்போது அவ்விடுதியின் சுமார் 65 சத வீதமான வைத்திய வளம் இவர்களுக்காகச் செலவிடப்பட்டிருக்கும்.

இப்பிரச்சினைக்குப் பல காரணங்கள் முன்வைக் கப்பட்டாலும் மிக முக்கிய காரணியாகத் தாராளமான கசிப்பு உற்பத்தியும், அதன் பாவனையுமே என்று சுட்டிக்காட்டப் படுகின்றது. அத்துடன் யாழ். குடாநாட்டில் தற்போது கேட்கும் இடத்தில் கசிப்பு கிடைக்கக்கூடிய சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது.

கசிப்பு உற்பத்தி தடைசெய்யப்பட வழிவகைகளைக் கையாள்வது கிராமந்தோறும் கசிப்பு எதிர்ப்பு விழிப்புக் குழுக்களை ஏற்படுத்துவதும் கோடிட்டுக் காட்டப்படாமலே துரிதகதியில் செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்களாக எம்முன்னே இருக்கின்றன. இல்லையேல் காட்டுத் தீ போல் கசிப்புத் தீ பரவி; வீடும் அழிந்து, குடாநாடும் நாசமாகிவிடும். கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் போல் ஆகிவிடும். வெள்ளம் வரும் முன்புதான் அணைகட்ட வேண்டும்.

வலிந்து தாக்குதல்களுக்கு (**Assault**) மற்றைய காரணியாக இடம்பெயர்வு அமைகிறது. வீட்டுக்கான சண்டையிலிருந்து வேலிவரை சென்று, அதன்பின்னர் கிணற்றுப் பாவனையே மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கின்றது. இவ்வுண்மையை யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியும் உறுதிப்படுத்துகின்றார். அதாவது இடம்பெயர்ந்த நான்கு, ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒரே கிணறைப் பாவிப்பதில் பிரச்சினைகள் ஆரம்பித்து, அடிபிடியில் தொடங்கி, சில சந்தர்ப்பங்களில் வாள் வீச்சிலும் முடிகின்றனவாம்.

கிணற்றுப் பிரச்சினை தீர ஏதும் வழி உண்டா? உண்டானால், வாள் வீச்சும், கத்திக் குத்தும் கொஞ்சமாவது குறையும் என எதிர்பார்க்கலாம். அப்படியாயின், வைத்திய சாலையில் மருந்துத் தட்டுப்பாடும் அடிக்கடி ஏற்படாது.

ஈழத்தில் வாழ்கின்றவர்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை எம்மவர்கள் இப்போது வெளிநாடுகளிலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கு வாழ முடியாது என்று இரண்டு, மூன்று தசாப்தங்களாக எம்மக்களில் பலர் வெளிநாடுகளில் தஞ்சம் கோருகின்றார்கள். இவர்களில் எமக்குத் தெரிந்தவர்கள்.

அறிந்தவர்கள். உறவினர்கள் என்று அநேகர் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் தமது 'கைவரிசை'யை வெளிநாடுகளிலும் காட்டத் தொடங்கிவிட்டார்கள். என்றுமில்லாதவாறு கடத்தல், கொலை, கொள்ளை, குழுமோதல்கள் என்று கேள்விப்படுகின்றோம். இந்நிலை தொடருமானால், பாய், படுக்கையோடு இவர்கள் திரும்ப வேண்டிய நாள் வெகு தொலைவில் இல்லை என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயம் அல்ல!.....

அப்படி ஒரு நிலை வந்தால், எமது பிரதேசங்களின் வைத்தியசாலைகளிலுள்ள 'வெட்டு, கொத்து' விடுதிகளையே விஸ்தரிக்க வேண்டிவரும்!..... அத்துடன், உலகில் 'குத்து, வெட்டில்' நாமே முதலிடம் பெறுவோம்!...

**உதயன்**

12.10.2001

# 16. மருந்துகள் போதுமானதா?

யாழ். போதனா வைத்தியசாலையின் இன்றைய நிலைமைகளை நேரடியாகப் பார்த்தும், பத்திரிகைகளில் படித்தும் பலர் அறிந்திருப்பார்கள். காலத்துக்குக் காலம் இங்கு மருந்துத் தட்டுப்பாடு நிலவுவது கண்டு இதனை யாழ். குடாநாட்டிற்கு வந்துசென்ற உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரமுகர்களும் செய்தியாளர்களும் கடந்த காலங்களில் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

கடந்த வாரத்தில் பி.பி. சிக்கான பேட்டியில் யாழ். ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு என்று கூறப்படுவது முழுப்பொய் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருந்தார். உதயன் பத்திரிகையும் (22.10.2001) அதனைப் பிரசுரித்திருந்தது.

கடந்த நான்கு வருட காலமாக யாழ். போதனா வைத்தியசாலையுடனான என் தொடர்பின் அடிப்படையில் எனது அனுபவங்கள் யாதெனில் - மருந்துப் பொருள்களைப் பொறுத்தவரையில் போதாமை - பற்றாக்குறை - இல்லாமை என்பதே ஆகும்.

உதாரணமாக, ஒட்சிசன் (கொள்கலன்கள்) முடிந்து போனதால் இரண்டு உயிர்கள் என் கண்முன்னே உயிர் நீத்ததை சான்றுகளோடு நிரூபிக்க முடியும். இதனைத்தான், "ஒட்சிசன் இன்மையால் நிகழும் மரணங்களுக்கு யார் பொறுப்பு?" என்ற தலைப்பினிலே 15.02.2001 அன்று இதே பகுதியில் (வாசகர் திருமுகத்தில்) எழுதியிருந்தேன். அடுத்து **P.O.P (Plaster of Paris)** இல்லாமல் பல கை, கால் உடைந்த நோயாளர்கள் இரண்டுவார காலமாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலுக்குக் காத்திருந்து சிகிச்சை பெற்றதை யாரும் மறுக்க முடியாது. இதனைத்தான் "யாழ். ஆஸ்பத்திரியில் தொடரும் மருந்துத் தட்டுப்பாடு" என்ற தலைப்பில் 10.05.2001 அன்று உதயனில் எழுதியிருந்தேன். மற்றைய, அவ்வப்போது வெளி நோயாளர் பிரிவில் மருந்துப் பொருள்கள் முடிந்து போவதும், வைத்தியர்களின் பற்றுச் சீட்டோடு நோயாளர்கள் வெளியார் மருந்தகங்களில் அவற்றை வாங்குவதும் நடை பெற்றிருக்கின்றது. இவை கடந்தகால ஓரிரு அனுபவங்கள். இந்த வரிசையில் இன்னும் பல உண்டு.

இந்நிலையில், வைத்திய உபகாரணங்கள், மருந்துப் பொருள்களின், வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகள் என்பனவற்றின் வருகையில் பெரிய மாற்றத்தையோ, முன்னேற்றத்தையோ காணவில்லை என்பது பலருடைய கருத்தாகும்.

எது எப்படி இருப்பினும் தொங்கி நிற்கும் வினா எதுவெனில் - யாழ். போதனா வைத்தியசாலையில் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் போதுமானதாக உள்ளனவா? இல்லையா? என்பதுதான்.

அப்படியாயின், இதற்குப் பொறுப்பானவர்களும், புத்திஜீவிகளும் மௌனம் காப்பது ஏன்? பதில் சொல்வார்களா - உண்மை நிலையை அறிந்து கொள்ள.

**உதயன்**
31.10.2001

# 17. குடாநாட்டு வைத்தியசாலைகளில் தாதியர் பற்றாக்குறைப் பிரச்சினை.

எமது பிரதேசங்களின் வைத்தியசாலைகளில் தொடர்ச்சியாக நிலவுகின்ற பிரச்சினைகளில் மருந்துத் தட்டுப்பாடு, மருத்துவர்களின் பற்றாக்குறை போன்றவைகளைப் போல, தாதியப்பற்றாக்குறையும் தற்போது உருவாகிக் கொண்டிருக்கும் முக்கிய பிரச்சினையாகும். (இது ஒப்பீட்டளவில் தென்பகுதியை விட வட பகுதியிலேயே கூடுதலாக நிலவுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.)

1958இல் தாதியப் பயிற்சிப் பாடசாலை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டாலும் 1960ஆம் ஆண்டே யாழ். போதனா வைத்தியசாலையுடன் இது இணைந்து இயங்கத் தொடங்கியது. இற்றைவரை, இந்த நீண்ட 40 ஆண்டு காலப் பகுதியினை நோக்கும்போது சில அவதானிப்புக்களைப் பார்க்கலாம். ஒவ்வொரு தடவையிலும் அறுபது (60) மாணவர்களைப் பயிற்சிக்குச் சேர்ப்பதற்கு இங்கு வசதிகள் உண்டு.

இதன் அடிப்படையில், 1960ஆம் ஆண்டிலிருந்து 1985ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இருபத்தி மூன்று (23) தடவைகள் மாணவர்கள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு, பயிற்றப்பட்டு பயிற்சியை முடித்து வெளியேறியிருக்கின்றனர்.

இக்காலப்பகுதியில் தாதிய மாணவராகப் பயிற்சி பெற்றவர்களின் தொகை தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்து (995) ஆகும். அதாவது ஓர் ஆண்டிற்கு சுமார் நாற்பது (40) பேர் வீதம் தாதியராக வெளியேறியுள்ளனர்.

ஆனால் 1986ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பதின்மூன்று (13) தடவைகளில் நானூற்றியிரண்டு (402) மாணவர்களே தாதியராகப் பயிற்சியைப் பெற்றுள்ளனர். அதாவது, ஒரு வருடத்திற்கு இருபத்தியேழு (27) பேர் வீதம் உருவாக்கப்பட்டுள்ளனர்.

இச்சிறிய ஒப்பீடு ஓர் உண்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது. அதுதான் முன்னைய காலத்தைவிட இப்போது தாதியராகச் சேவைசெய்ய, பணிபுரிய - விண்ணப்பிப்போரின் தொகை குறைந்துகொண்டு போவதேயாகும்.

யாழ். போதனா வைத்தியசாலையைப் பொறுத்த வரையில், இதன் 'ஐடியல்' தாதியர் எண்ணிக்கை ஐந்நூற்றி ஒன்று (501) ஆகும், அதாவது, இத்தொகை சுகாதார அமைச்சின் திட்ட ஆளணி (PROJECT CADRE). யாழ். போதனா வைத்தியசாலையில் கட்டாயமாக இருக்கவேண்டிய தாதியர் தொகை முந்நூற்றி எண்பத்தியிரண்டு. (382). இப்போது இருப்பது இருநூற்றி ஐம்பது (250). தற்போது நூற்றிமுப்பத்திரண்டு (132) பேருக்கான இடைவெளி நிரப்பப்பட வேண்டிய இடம் இன்று இருக்கின்றது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கே இந்நிலை என்றால் யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையை நம்பி இருக்கும் யாழ். மாவட்டத்திலும், ஏனைய மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளின் நிலைமை என்னவோ?.... !... எப்படி இருக்குமோ?....!....

இந்நிலையை இரண்டு தளங்களிலே நின்று நோக்கலாம். ஒன்று தாதியப் பணிக்குப் பலர் இக்காலத்தில் பின்னடிக்கின்ற சூழலமைவு. மற்றையது தாதிய மாணவர்களைப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுப்பதில் கடைப்பிடிக்கப்படும் ஒருசில வரையறைகள்

(நாட்டின் தற்போதைய சூழ்நிலை, மக்களின் புலம்பெயர்வு - இடம்பெயர்வு ஏனைய பல புதிய துறைகளின் வருகை போன்றவையும் இவ்வீழ்ச்சிக்குச் சிறு காரணிகளாக அமையலாம்).

முதலில், தாதிய சேவைக்கு பலர் முன்வராமையை நோக்குவோம். யாழ். தாதியப் பயிற்சிப் பாடசாலைக்குக் கோரப்படும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படும் - தேவைப்படும் - எண்ணிக்கையை விடக் குறைவாகவே வருகின்றன. அத்துடன், ஏனைய வேலைவாய்ப்புக்கள், உத்தியோகங்களுக்கு இருக்கும் போட்டிகளும், முண்டியடிப்புக்களும் இல்லாதது ஒன்றை உணர்த்துகின்றது. அதாவது, இதனை விரும்புபவர்கள் குறைவாகவே இருக்கின்றார்கள் என்பதாகும். (ஒவ்வொரு தடவையிலும் ஐந்து சத வீதமான ஆண்பிள்ளைகளே தெரிவுசெய்யப்படுவதால் ஏனையவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை என்பதை அறிவோம்.)

அடுத்து, தாதியத் துறையினை ஏனைய துறைகளைவிடக் குறைவாகக் கணிக்கின்ற போக்கு, மனநிலை எம்மவரிடையே இருப்பது கண்கூடு. "நேஸ்சிங்கோ....ஐயோ வேண்டாம். ரீச்சிங்குக்கு றை(Try) பண்ணுவோம்....!", "வேற ஒண்டும் கிடைக்கேல்லண்டா நேஸ்சிங்க யோசிப்பம்", "கிளாிக்கல் கிடைச்சிதெண்டால் நேஸ்சிங்க விட்டிருவன்", "நேசிங்கோ..... உந்தத் தொழில் உவளுக்கு வேண்டாம்" என்று வேறு வேலைகள், தொழில்வாய்ப்புகள் கிடைக்காத நிலையில் இதனை விருப்பமில்லாமல் பற்றிக்கொள்ளும் நிலையுமுண்டு.

நோயுற்று பல நாள்கள் சிகிச்சை பெறுவார்கள். ஆனால், தமது பிள்ளையை "நேஸ்சிங்" படிக்க அனுமதி கிடைத்தாலும் விரும்பாத பெற்றோர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆனால், தாதியத்தினுடைய மேன்மையும், அதன் புனிதத் தன்மையும் என்னவென்றால், நோயாளர்களைப் பராமரிக்கின்ற - நோயுற்றவர்களைத் தேற்றுகின்ற நோவுகளை ஆற்றுகின்ற - உன்னதமான, ஒப்பற்ற பணியாகும். எனவேதான், இத்துறையில் சேவையாற்ற இளம் உள்ளங்கள்

முன்வரவேண்டும். பெரியோர்கள் குறிப்பாக யுவதியரை ஊக்குவித்து, உற்சாகப் படுத்தவேண்டும்.

இரண்டாவதாக, தாதியப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுப்பதில் உள்ள சில வரையறைகளைக் கவனிப்போம். இப்போது ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்தவர்களுக்கு தாதியப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க அடிப்படைத் தகைமை உண்டு இதனால் விஞ்ஞானம் தவிர்ந்த ஏனைய துறைகளில் பயிலும் மாணவர்கள் இத்துறையில் பணியாற்ற மனமிருந்தும், ஆற்றல் இருந்தும் ஒன்றும் செய்யமுடியாத நிலை...! இதற்கு உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்றவர்களே தாதியத்தைக் கற்கமுடியும் என்றால் ஏன் சுமார் பத்து, பதினைந்து வருடங்களுக்குமுன் தாதியப் பயிற்சிபெற்றவர்கள் பல துறைகளைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கின்றார்கள். விஞ்ஞானப் பிரிவில் பயின்றவர்களைவிடத் தரமாகவும், திறமையுடனும் தாதியராகப் பயின்றவர்களும், பயிற்றப்பட்டவர்களும் இருக்கின்றார்களே.

இப்போது, தாதியத்தில் மேற்படிப்புக்கள், பட்டப்படிப்புக்கள் இருப்பதால் விஞ்ஞானப் பிரிவில் படித்தவர்கள் இவற்றைத் தொடர வாய்ப்பிருக்கிறது என்ற வாதம் முன்வைக்கப்பட்டால், இந்த ஒரு காரணத்திற்காக ஏனைய துறைகளில் பயிலும் மாணவர்களை இத்துறையிலிருந்து புறந்தள்ளுவது அவர்களுக்கான அரிய வாய்ப்புக்களை இழக்கச் செய்வதே ஆகும்.

ஆகவேதான், யாழ். தாதியப் பயிற்சிப் பாடசாலையோடு தொடர்புடைய உயர் அதிகாரிகள் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து இதற்கான ஏது நிலைகளை ஏற்படுத்துவது எமது வைத்தியசாலைகளில் தாதிய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையைக் குறைக்க - நிவர்த்தி செய்ய - உதவும்.

**உதயன்**
16.12.2001

## 18. சிறுவர் நலன் பேணுவோம் !

போரினாலும், போரின் திரை மறைவிலும் மிக மோசமாகவும், கூடுதலாகவும் பாதிப்புறுகின்றவர்களில் பெண்களும், சிறுவர்களும் அடங்குவர் என்பது ஆய்வுகள் ரீதியாக நிரூபிக்கப்படும் உண்மையாகும். இதில் இன்னொரு விடயம் என்னவென்றால், இந்த இரண்டு வகையினருமே தமக்கு இழைக்கப்படும் துன்பங்களைப் பல காரணங்களை முன்னிட்டு மறைத்துவிடுகின்றனர் அல்லது அப்பிரச்சினைகள் மறைக்கப் பட்டு விடுகின்றன என்பதேயாகும்.

இதனால் நம்மைச் சுற்றி நடக்கின்ற பல சம்பவங்களில் ஒரு சிலவே வெளிக்கொணரப்படுகின்றன. குற்றம் இழைத்தவர்கள் தப்பித்துக் கொள்ளவும், மேலும் பல குற்றச் செயல்களில் துணிந்து இறங்கவும் இவர்களைத் தூண்டுகின்றது.

நாடளாவிய ரீதியில் (யாழ். குடாநாடு உட்பட) பெண்கள், சிறுவர்களின் பிரச்சினைகளுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்க பொலீஸ் நிலையங்களில் விசேட, தனியான பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நடைமுறையில் இது இயங்குகிறதா என்பது சந்தேகமே!....

இது ஒரு புறமிருக்க, ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் செயற்படும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (CHILD PROTECTION AUTHORITY) மிகப் பலம் வாய்ந்த ஒன்றாகும். இந்த அதிகாரசபை ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவை (DISTRICT CHILD PROTECTION COMMITTEE) ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வகையில் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உற்சாகமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. இதன் ஒரு கிளை யாழ். போதனா வைத்தியசாலையின் மன நல சிகிச்சைப் பிரிவோடு (கிளினிக் பிரிவு, அறை இலக்கம்: 32) செயற்படுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து விழிப்பாயிருப்பதும், சிறுவர் பாதுகாப்புக் குறித்து கவனமெடுப்பதும், சிறுவர் நலன் குறித்து அக்கறையுடன் செயற்படுவதும் பெற்றோர், ஆசிரியர், பெரியோர், வைத்தியர், அதிகாரிகளின் கடமையும், பொறுப்புமாகும்.

எனவேதான், சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அனைத்து விடயங்களையும், மேற்சொன்ன சிகிச்சைப் பிரிவின் கவனத்திற்குக் கொண்டு வருவதும், பதிவு செய்வதும் நமது சிறார்களின் நலன்களைப் பாதுகாக்க ஒருவகையில் துணைபுரியும் என நம்புகின்றேன்.

**உதயன்**

20.03.2002

# 19. வீதி விபத்துக்களைத் தடுக்க அனைவரது ஒத்துழைப்பும் தேவை

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் வாகன வீதி விபத்துக்கள் அதிகரித்த ஒரு காலம் கடந்து - மிக மோசமான நிலை அடைந்து, தற்போது படுமோசமாக ஆகியிருக்கிறது. ஏனெனில், நாளாந்தம் படுகாயமடைபவர்கள், மரணமடைபவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது இதன் உண்மையையும், கனாகனத்தையும் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

## ஒத்துழைப்பு அவசியம்

வீதி விபத்துக்களால் அதிக மரணங்கள் ஏற்படாதிருக்க அல்லது தவிர்த்துக்கொள்ள வாகன ஓட்டுநர்கள், பொதுமக்கள், பல மட்டத்திலான அரச அதிகாரிகள் போன்றோரின் ஒத்துழைப்பு இன்றியமையாததும், அத்தியாவசியமானதும் ஆகும்.

முதன்முதலில், வாகன ஓட்டுநர்கள் வீதி ஒழுங்குகளை மதித்து நடக்கவேண்டும். குறிப்பாக, மக்கள் கூடும் இடங்களில், நகரப் பகுதிகளிலும் வாகனங்கள் வேகமாகச் செலுத்துதலைத் தவிர்க்கவேண்டும். புதிதாக வாகனங்களைச் செலுத்துபவர்கள் இவ்விடயத்தில் கவனமாய் இருக்கவேண்டும். போட்டி போட்டுக் கொண்டோ அல்லது 'கண் மண்' தெரியாமல் செலுத்துபவர்கள் இனிமேலாவது மற்றவர்களின் உயிர்களின் மட்டில் கருணை கொள்வார்களா?

## விபத்துக்கான காரணங்கள்

அடுத்தது, வீதி விபத்து நடைபெறும்போது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வாகன செலுத்துநரில்தான் தவறுண்டு என்று கொள்ளமுடியாது. இவ்விடயத்தில், பாதசாரிகள், துவிசக்கர வண்டிகளில் செல்வோர் வீதி ஒழுங்குகளை கருத்திற்கொண்டு செயற்படவேண்டும். குறிப்பாக, 3,4 பேர்

சமாந்தரமாக சவாரி செய்வதால் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் வீதி விபத்துக்களைச் சந்திக்கிறார்கள்.

யாழ். குடாநாட்டில் என்றுமில்லாதவாறு வாகனங்களின் எண்ணிக்கை திடீரென உயர்ந்திருப்பதால், வீதி ஒழுங்கு, எச்சரிக்கை, சைகைத் தகடுகளை உடனடியாக உரிய – தேவையான இடங்களில் பொருத்துவது பல ஆபத்துகளைக் குறைக்கும்.

மற்றையது, வாகனங்களை நிறுத்துவதற்கு (குறிப்பாக நகரப் பகுதியில்) பாதுகாப்பான, வசதியான புதிய இடங்களை ஏற்படுத்துதல் போக்குவரத்து நடைமுறையில் பல நன்மைகளைக் கொண்டுவரும். ஒடுக்கமான வீதிகளில் முக்கியமான ஒருசிலவற்றையாவது பெருப்பிப்பதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதிர்காலத் திட்டங்களை வகுப்பது சிறந்தது. அத்துடன், வெவ்வேறு காரணங்களுக்காகவும், தேவைகளுக் காகவும் கிளறப்படும் வீதிகள் விரைவாக செப்பனிடப்பட வேண்டும். இம்முயற்சிகள் வீதி விபத்துக்களைக் குறைக்க பெரிதும் உதவும்.

## பொலீஸாரின் பங்கு அளப்பரியது

மேலும், வாகனப் போக்குவரத்து ஒழுங்குகளைப் பேணவும் வீதி விபத்துக்களைக் குறைக்கவும் காவல் துறையினரின் (Police) போக்குவரத்துப் பிரிவினரின் பங்களிப்பு மிக முக்கியமானது. தலைக் கவசம் (Helmet) அணியாத வர்களுக்குத் தண்டப்பணம் வாங்குவதனால் வீதி விபத்துக்கள் குறைந்துவிடாது. அல்லது ஆங்காங்கே அவ்வப்போது நின்று வீதிப் போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல் மட்டும் போதாது. நடைமுறைக்குச் சாத்தியமான போக்குவரத்து ஒழுங்குமுறைகளை வகுத்து துரிதமாகச் செயற்படுத்த ஆவன செய்ய வேண்டியது காவல்துறையினரின் கடமையும், பொறுப்புமாகும். எல்லோரும் ஒத்துழைத்தால் அநியாயமான அநேக வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**உதயன்.**

29.07.2002.

# 20. வெடிபொருள்கள் பற்றிய விழிப்புணர்வு தேவை

யாழ். குடாநாட்டிலும் ஏனைய பகுதிகளிலும் மக்கள் மீளக் குடியமர்ந்து கொண்டிருக்கிறார்கள். கண்ணிவெடிகள் அகற்றப்படாத பிரதேசங்களாகப் பல பகுதிகள் இன்னும் இருக்கின்றன.

இந்நிலையில், இவ்விடயம் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தல்களும், கருத்தரங்குகளும், விழிப்புணர்வுக் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. எனினும், ஆங்காங்கே 'விறகு எடுக்கவும்' 'வீடு பார்க்கவும்' என்று மிதி வெடியில் சிக்குண்டு அங்கவீனம் அடைந்த பலர் இருக்கின்றார்கள்.

இது ஒரு புறமிருக்க, வெடிபொருள்களைக் கையாடி அல்லது பரீட்சித்துப் பார்த்து மரணமடைந்த அல்லது படுகாயமடைந்த சம்பவங்கள் பெருந் தொகையில் இல்லாவிட்டாலும், சில சம்பவங்களையாவது கேள்விப் பட்டிருக்கின்றோம்.

அண்மையில் மூன்று சிறுவர்கள் (இரண்டு சம்பவங்களில்) மிதிவெடிகளைக் கண்டெடுத்துக் கையாடி இருக்கிறார்கள். அவர்கள் மூவரும் படுகாயம் அடைந்தது மட்டுமல்லாது, ஒருவர் கண்ணொன்றை இழந்துள்ளார், மற்றவரின் கைகளின் பத்து விரல்களும் மோசமாகப் பாதிப்படைந்திருக்கின்றன. இவர்கள் மூவரும் பாடசாலைக்குச் செல்லாத அல்லது இடைநடுவில் நிறுத்திக்கொண்ட 13வயதை அடைந்த சிறுவர்கள்.

இவ்விடயம் பற்றிய விழிப்புணர்வுக்கு கருத்தரங்குகள் கிராமங்களை அண்டிய பிரதேசங்களில் நடத்துவதும், பல தரப்பட்ட மக்களுக்கு அதனை வழங்குவதும் தொடர்ந்து ஆற்றப்பட வேண்டிய முக்கிய பணியாகும்.

**உதயன்**
12.06.2002

# ஒரு சில எதிரொலிப்புக்கள்...

**உதயன்**

## கட்டு மீறும் இளைய தலைமுறை

மானிப்பாய்ப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்று வீட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பாடசாலை மாணவி ஒருத்தி, பட்டப் பகல்வேளை வீதியில் வைத்துக்

**யாழ். போதனா வைத்தியசாலையில் ஆன்மீக சமூக உளநலப் பணியகம்.**

யாழ் கட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. நாளாந்தம் ஆள்கள் காயமடையும் சம்பவங்களில் வீதி விபத்துக்களைவிட கோஷ்டி மோதல்கள், இருட்டடி, வாள் வெட்டு, மறைந்திருந்து தாக்குவது போன்ற சம்பவங்களே மிக அதிகம் என்பது புள்ளி விவரங்கள்மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. இத்தகைய 'வலிந்து தாக்கும்' (Assault) சம்பவங்களினால் காயமடைவோருக்குச் சிகிச்சை அளிப்பதில் யாழ். மருத்துவமனையின் பெரும்பகுதி மருத்துவவளம் வீண் விரயமாகிவருவதை மதகுரு ஒருவர் அண்மையில் வேதனையோடு சுட்டிக் காட்டியிருக்கிறார்.

28.05.2001.

ALL CONSULTANTS,
G.M.O.A JAFFNA BRANCH,
MAYOR OF JAFFNA, MR.N.RAVIRAJ,
REV.FR.S.ANPURASA, OMI, ANNAI VELANKANNI CHURCH,
PUBLIC SERVICES UNITED NURSES UNION, - GENERAL HOSPITAL, JAFFNA.
NURSING OFFICERS WELFARE CO-OP SOCIETY LTD,
STAFF OF GENERAL OFFICE,

Thank you all for the kind request made to me to reconsider my decision to retire.

Dr.S.Manickarajah, director Estate services who took my letter of retirement to Ministry of Health & D.G.H.S telephoned & informed me that Secretary Health ...

Your's truly,
Director,
GENERAL HOSPITAL (TEACHING), JAFFNA

Perhaps, this decision was made because of some unwanted allegation made against you, by few individuals who had no idea of you valuable services to the suffering society that is the poor patients of the peninsula.

As a result of this, **the institution is going to suffer badly.** And this is going to affect the People of Jaffna severely. This is, of course, we are sure of.

**உதயன்**

## பதில் என்ன?

ஒட்சிசன் இன்மையால் மரணங்களுக்கு யார் பொறுப்பு? ... உதயன் ... வாசகர் ஒருவர் எழுதி ... போதனா வைத்தியசாலையின் ... ஒட்சிசன் ... இரண்டு நோயாளர்கள் இறந்தமைக்கு, அங்கு

Dr. Ms. N. Kanagaratnam.
The Director.
The Teaching Hospital.
Jaffna.

Dear Madam,

Dr.S.Manickarajah, director Estate services who took my letter of retirement to Ministry of Health & D.G.H.S telephoned & informed me that Secretary Health ...

## தொடர்ந்து தட்டுப்பாடு இருந்தே வருகிறது!

இதனை எவரும் மறுக்க, மறைக்க முடியாது என்கிறது நிர்வாகம்

ளர்கள் இறந்தமைக்கு, அங்கு ஒட்சிசன் இல்லாதிருந்தமையும் காரணமாக இருக்கக் கூடும் என்று அந்த வாசகர் சுட்டிக் காட்டி இருந்தார்.

ஒரு மனிதன் அவமாக, அகாலமாக இறந்தால் அது சம்பந்தமாக விசாரணை, நீதிமன்ற வழக்கு, அதற்கு காரணமாக இருக்கலாம்...

# இந்நூலைப்பற்றி.....

"ஆன்மீகப் பணிக்குக் கிடைத்ததொரு ஆஸ்பத்திரித் தளம் அதனை மையம் கொண்டு அகல் விரிந்த சமூகத் தளங்கள் அங்கே ஓர் எச்சரிக்கை, அனுதாபம், அறிவுறுத்தல்; அனைத்தும் கலந்த ஓர் பயன்மிக்க, பன்முக ஆளுமையின் தெறிப்புக்கள்"

டொரீன் அருளானந்தம்,
விரிவுரையாளர், சமூகவியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

"நெருக்கடியான காலகட்டத்தில் வைத்தியத் துறைசார்ந்த நெருக்கடிகளை சந்தித்த சமூக உணர்வுமிக்க ஒருவரின் வெளிப்படுத்துகையாகும். கால ஓட்டத்தின் வெவ்வேறு கால கட்டங்களில் வெளிப்படுத்தப்பட்ட இவை அதனுடன் சம்மந்தப் பட்டவர்களை சிந்திக்க வைத்து செயற்பட வைத்தது. இது கடந்த காலத்தின் ஆவணமாக எமக்கு உள்ளது."

Dr. இ. சிவசங்கர், MBBS
யாழ். போதனா வைத்தியசாலை.

"பூரண ஆரோக்கியத்தின் ஓர் அங்கமான ஆன்மீகத்துறை குரு வண. பிதா. அன்புராசா அவர்களின் சமூக, ஆரோக்கிய அக்கறையின் ஆதங்கத்தை இந்நூல் வெளிப்படுத்துகின்றது."

ந. கனகரெத்தினம்
பிரதம தாதிய பரிபாலகர், யாழ். போதனா வைத்தியசாலை.
தலைவர், சாந்திகம் உளவளத்துணை நிலையம்.

"உடல் உள நோய்களுக்கெதிர் போராடுவதே வாழ்க்கை என்று வரித்துக்கொண்ட மானிடர்களின் சோகங்களுக்குள் பயணம் செய்து மானிடத்தின் இன்னுமொரு பகுதியை வெளிப்படுத்தும் ஒரு ஆன்ம குருவின் துன்பியல் வரிகள்."

கலாநிதி அ.பி.ஜெயசேகரம்
பங்குத்தந்தை, குருநகர்.

Cover Print: Guru Printers, Thirunelvely.